# இலங்கையில் ஊடகவியல்




JPL
C12596

தம்பிஜயா தேவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஊடகவியல்

# JOURNALISM IN SRI LANKA

KOHA JPL

06 OCT 2018

மாநகர சபை யாழ்ப்பாணம்

264487

264487 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிறநூல்கள்

| | | |
|---|---|---|
| 01. | இலங்கைச் சினிமாவின் ஆரம்பம் | 2016 |
| 02. | இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள் | 2015 |
| 03. | இலங்கை திரை இசையின் கதை | 2014 |
| 04. | குத்துவிளக்கு (இலங்கை திரைப்படம்) மீள்வாசிப்பு | 2011 |
| 05. | இலங்கை திரை உலக சாதனையாளர்கள் | 2007 |
| 06. | இலங்கை திரை உலக முன்னோடிகள் | 2001 |
| 07. | பொன் விழாக் கண்ட சிங்களச் சினிமா | 1999 |
| 08. | இலங்கை தமிழ்ச் சினிமாவின் கதை | 1999 |
| 09. | நெஞ்சில் ஓர் இரகசியம் | 1975 |
| 10. | இறைவன் வகுத்த வழி | 1976 |
| 11. | மூன்று பாத்திரங்கள் | 1977 |
| 12. | சிங்களப் பழமொழிகள் | 2004 |
| 13. | புங்குடுதீவு - வாழ்வும் வளமும் | 2006 |
| 14. | இணைப் பழமொழிகள் | 2009 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NL/BRL/ 3224

# இலங்கையில்

# ஊடகவியல்

**தம்பிஜயா தேவதாஸ்**
B.A.(Cey), BEd(Cey),
MA. Journalism And Mass Communication

**Vidyatheepam Publication**

CC



64487 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

070.4095493

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் உள்ளடக்க மானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**இலங்கையில் ஊடகவியல்**
(Journalism in Sri Lankan)

**©தம்பிஜயா தேவதாஸ்**

முதல் பதிப்பு 2018

ISBN 978-955-7252-01-8

**தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு**

தேவதாஸ், தம்பிஜயா.
இலங்கையில் ஊடகவியல் : Journalism in Sri Lanka / தம்பிஜயா தேவதாஸ். -
கொழும்பு : ஆசிரியர், 2018. -
ப. 100 ; செமீ. 21.

ISBN 978-955-7252-01-8

I. 070.4095493 டிவி 23 ii. தலைப்பு
1. சஞ்சிகை - இலங்கை

**எச்சரிக்கை**

இந்நூலிலுள்ள வாக்கியங்களையோ படங்களையோ எவரும் மீள் பிரசுரம் செய்யக்கூடாது. கல்வித் தேவைகளுக்காக மீள் பிரசுரம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டால் ஆசிரியரின் அனுமதி பெற்றேயாக வேண்டும்.

பக்க வடிவமைப்பு : **செ. உஷா**

புத்தக வெளியீட்டாளர் : **வித்தியாதீபம் பதிப்பகம்**
இல. 90/9, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு-13.
தொ.பேசி: 0112-448743, 071-8366086

அச்சுப் பதிப்பு : **சன் பிரின்டெக்**
கொழும்பு-13.
தொ.பேசி: 0112-433641



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**திரு. கந்தையா தம்பிஐயா**
**திருமதி. தம்பிஐயா ஐஸ்வரி**
**(புங்குடுதீவு – 11)**

ஏழேழு பிறப்பிலும் நீங்கள்

எங்கள் பெற்றோராய்

பிறந்திடல் வேண்டும்

உங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அணிந்துரை VII

முன்னுரை IX

01. இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் 01

02. முஸ்லிம் அறிஞர்கள் ஆரம்பித்த பத்திரிகைகள் 33

03. பிராந்தியப் பத்திரிகைகள் 37

04. இலங்கையில் ஆங்கிலப் பத்திரிகைகள் 51

05. சிங்களப் பத்திரிகைகள் 59

06. இலங்கையில் வானொலிச் சேவை 63

07. இலங்கையில் தொலைக்காட்சிச் சேவை 71

08. இலங்கையில் தமிழ்த் திரைப்படங்கள் 77




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**மூத்த பத்திரிகையாளர்**
**வீ. தனபாலசிங்கம் வழங்கியது**

இலங்கைத் தமிழ்ப்பத்திரிகை உலகில் கலை இலக்கியத்துறையில் தனது நீண்டகால பங்களிப்புக் களுக்காக நன்குஅறியப்பட்டவர் நண்பர் தம்பிஐயா தேவதாஸ். சினிமாத்துறை தொடர்பாக அவர் எழுதாத இலங்கைப் பத்திரிகைகளே இல்லை எனலாம். குறிப்பாக தமிழ் மற்றும் சிங்களச்சினிமாவை வரலாற்றுரீதியாக ஆய்வு செய்து அத்துறையின் வளர்ச்சியையும் ஆளுமைகள்பற்றிய விபரங்களையும் தருகின்ற சான்றுவலிமை (Authority) உடைய படைப்பாளியாக அவர் விளக்குகின்றார்.

இதுவரையில் சினிமா தொடர்பாக ஏழு நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார். இப்பொழுது இவரது கவனம் ஊடகவியல் பற்றிய ஆய்வுகளுக்குத் திரும்பியிருக்கிறது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறி மாணவர்களுக்கு சினிமா தொடர்பாக விரிவுரையாற்றி வருகிறார். அப்பொழுது அந்த மாணவர்களுக்கு ஊடகவியல் குறித்து எளியமுறையில் விளங்கவைக்கக் கூடிய நூல் தமிழில் இல்லாத குறையை அவதானித் திருக்கிறார். அதன் காரணமாகவே இலங்கையில் ஊடகவியல் என்ற இந்த நூலை எழுத வேண்டுமென்ற ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது.

பத்திரிகைகளைப்பற்றி மாத்திரமல்ல வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் பற்றிய வரலாற்றுரீதியான தகவல்களையும் உள்ளடக்கியதாக ஒரு நூலை எழுதுவதில் இவரது நாட்டம் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கவிடயமாகும். நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அபாரவளர்ச்சி காரணமாக இன்றைய இளந்தலைமுறையினர் சமகால நிகழ்வுப்போக்குகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறியக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றபோதிலும் ஊடகத்துறையில் ஆர்வம் கொண்டவர்களும்கூட வரலாற்றுப்பின்புலத்தை பெரிதும் அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தபட்சம் கால்நூற்றாண்டுகளுக்கு முன்னரான அரசியல் சமூக வரலாறுகளை தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள். இது ஒரு பெரிய குறைபாடாகும். ஊடகவியல் துறையைப் பொறுத்தவரை அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு தேவதாஸ் முயற்சித்ததன் விளைவாகவே இந்நூல் உங்கள் கைகளில் தவழுகிறது.

கொழும்பை மையமாகக்கொண்டு வெளிவருகின்ற பத்திரிகைகளையே நாம் பொதுவாக தேசியப்பத்திரிகைகள் என்று அழைக்கின்றோம். ஆனால் இலங்கையில் பல பிராந்தியங்களிலிருந்தும் பல பத்திரிகைகள் வெளிவந்திருக் கின்றன. வடக்கிலிருந்து வெளியானவற்றுக்கென்று ஒரு பிரத்தியேக வரலாறு உண்டு. "இந்த பத்திரிகைகள் பிராந்தியத்தை வெளியுலகிற்கும் வெளியுலகை பிராந்தியத்திற்கும் தரிசிக்க வைத்தன" என்று கூறுகிறார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

இத்தகைய அரும்பணிகளை செய்துவருகின்ற பத்திரிகைகளைப்பற்றிய தகவல்களை சிறிதும்பிசகாமல் விபரமாக இந்நூலில் தந்திருக்கிறார் தம்பிஜயா தேவதாஸ். அவர் எதிர்பார்ப்பது போன்றே இந்நூல் ஊடகத்துறை மாணவர்களுக்கும் பொது வாசகர்களுக்கும் மிகவும் பயனுடையதாகும். இலங்கையின் ஊடகவியல் வரலாறுகுறித்து சாதாரண பொதுவாசகர்களும் தகவல்களை அறிந்துகொள்ளக்கூடியதாக அமைந்த நூல்கள் மிகவும் அரிதாகும். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஒரு முன்னோடிமுயற்சியாக இது அமைந்திருக்கிறது.

நண்பர் தம்பிஜயா தேவதாஸ் கலை இலக்கியத் துறையிலும் சமூக வாழ்க்கையிலும் துடிப்புடன் செயற்பட்டு பயனுறுதியுடைய பல பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். இவர் மென்மேலும் பல ஆக்கங்களை உருவாக்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறுகின்றேன்.

**வீ. தனபாலசிங்கம்**
முன்னாள் பிரதம ஆசிரியர் - தினக்குரல்
கொழும்பு
15-04-2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இதழியல் பகுதியில் பல வருடங்களாக வருகைதரு விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறேன். வேறு கல்வி நிறுவனங்கள், வானொலி, தொலைக்காட்சி பயிற்சி நிலையங்கள் போன்றவற்றிலும் இதழியல்பற்றி விரிவுரைகள் ஆற்றியிருக்கிறேன்.

இதழியல் பாடத்திட்டத்திற்கு ஏற்ற உசாத்துணை நூல்கள் குறைவாக இருப்பதனால் பல மாணவர்கள் இடர்படுவதை அவதானித்திருக்கிறேன்.

மற்றைய பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிலையங்களிலும் பாடசாலைகளிலும் ஊடக பயிற்சி நிலையங்களிலும் இவ்வாறான கஷ்டத்தை ஊடகத்துறை மாணவர்கள் அனுபவித்திருக்கக் கூடும்.

இப்பொழுது பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஊடகக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஊடகத்துறை வளர்ச்சி அடைந்த அளவுக்கு ஊடகத்துறை சார்ந்த கற்கைநெறிகளும் வளர்ச்சியடைய வேண்டும்.

பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிலையங் களிலும் ஊடகவியல் மாணவர்கள் இப்பொழுது அதிகரித்து வருகின்றனர். இவர்களுக்கெல்லாம் ஏற்றவகையில் ஊடகவியல் பற்றி ஒரு நூல் எழுது வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இதழியல்துறை வரலாற்றில் பல தினப் பத்திரிகைகளும் வார இதழ்களும் மாத இதழ்களும் தோன்றியிருக்கின்றன. ஓரிரு இதழ்களுடன் மறைந்தவை களும் உண்டு. தொடர்ந்து வெளிவந்து மறைந்தவைகளும் உண்டும். ஈழகேசரி 25 வருடங்களாக வெளிவந்தது. ஈழநாடு 31 வருடங்கள் வெளிவந்தது. வீரகேசரியும் தினகரனும் 100 வயதை நெருங்குகின்றன.

நீண்ட நாட்கள் தொடர்ந்து வெளிவந்த தினசரிகள் பற்றியும் பிராந்தியப் பத்திரிகைகள் பற்றியும் எழுதியிருக்கிறேன். முஸ்லிம் அறிஞர்கள் வளர்த்த பத்திரிகைகள் பற்றியும் எழுதியிருக்கிறேன். அச்சு ஊடகங்களைப் பற்றி மட்டுமன்றி மின்னியல் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியன பற்றியும் எழுதியிருக்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மூத்த பத்திரிகையாளர் வி. தனபாலசிங்கம் அவர்களுக்கும் நூலை பிரதி செய்துதந்த சகோதரி உஷாவுக்கும் அழகான நூலாக்கித் தந்த “சன் பிரின்டெக்” அதிபர் க. யோகேஸ்வரன் அவர்களுக்கும் அச்சக ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

பத்திரிகையாளர்களும், ஊடகவியல் பயிலும் மாணவர்களும், பொது வாசகர்களும் எனது இந்நூலுக்கு ஆதரவு தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அன்புடன்**

**தம்பிஐயா தேவதாஸ்**

90/9, New Chetty Street,
Colombo-13
Tel: 0718366086, 0112448743
E-mail: thambytheva@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

# இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள்

இன்றைய காலகட்டத்தை 'தொடர்புசாதனக் கால கட்டம்' என்று சொல்லிவிடலாம். தனக்குத் தெரிந்த விடயங்களை பிறருக்கு சொல்லவேண்டும் என்ற முயற்சியின் காரணமாக தொடர்பு சாதனங்கள் உருவாகின. அவற்றுக்கான முறைகளை மனிதன், கண்டுபிடித்து உபயோகிக்கத் தொடங்கியபோது ஊடகவியல் பிறந்தது. இந்த ஊடகவியலை இரண்டாகப்பிரிக்கலாம்.

1. மின்னியல் ஊடகவியல்

2. அச்சு ஊடகவியல்

மின்னியல் ஊடகவியலில் வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம், இணையம் என்பன அடங்குகின்றன.

அச்சு ஊடக இயலிலும் பலபிரிவுகள் இருக்கின்றன. அவை நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள் என்று பிரிகின்றன. இந்தப் பிரிவுகளில் பத்திரிகை என்பது முக்கியமான இடத்தைப்பெறுகிறது. மற்றைய ஊடகங்களைப் போலவே பத்திரிகைகளுக்கும் பொதுவான பண்புகள் இருக்கின்றன. பத்திரிகைகள் மக்களுக்கு அறிவிக்கின்றன, அறிவுறுத்து கின்றன, மகிழ்விக்கின்றன, வணிக நோக்கத்திற்காகவும் பயன்படுகின்றன.

அச்சு ஊடகம் என்ற வகையில் பத்திரிகைக்கு ஒரு மிகப் பெரிய சாதகத்தன்மை இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய சாதனங்களைப் போலல்லாது பத்திரிகைகளை மீள வாசிக்கலாம் என்பதே அந்த சாதகத்தன்மை.

'பத்திரிகை ஜனநாயகத்தின் காவலன்' எனப் போற்றப்படுகிறது. 'மக்களின் நான்காவது தூண்' எனவும் கொள்ளப்படுகிறது. இந்தப் பத்திரிகை இயல் இலங்கையிலும் பல வழிகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. தமிழ்மொழி, தமிழ்க்கலைகள் போன்றன தமிழ் நாட்டிலேயே ஆரம்பிக்கின்றன. தமிழ் மொழி சம்பந்தமான பல விடயங்கள் தமிழ் நாட்டிலேயே தொடங்கப்பட்டன. ஆனால் தமிழ் மொழியில் முதன்முதலில் வெளிவந்த பத்திரிகை தமிழ் நாட்டில் தொடங்கப்படவில்லை. அது இலங்கையிலேயே தொடங்கப்பட்டிருக்கிறது.

1802ஆம் ஆண்டு இலங்கையில் வெளியிடப்பட்ட "சிலோன் கவர்ன்மென்ட் கெசட்" (Ceylon Government Gazzette) என்பதுதான் அதன் பெயர். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளைக் கொண்ட ஒரே பத்திரிகையாக அது வெளிவந்தது. ஒரே செய்தி அல்லது கட்டுரை மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டன. இந்தப் பத்திரிகையில் சிங்களமொழியும் இடம்பெற்றதால் இலங்கையின் முதலாவது சிங்களப் பத்திரிகையும் 'சிலோன் கவர்ன்மென்ட் கெசட்' என்றே கருதப்படுகிறது.

"தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் இந்த அரசாங்க வர்த்தமானி தான் முதல் தமிழ் இதழ்" என்று '19ஆம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள்' என்னும் நூலில் அ.ம.சாமியும் குறிப்பிட்டிருக்கிறார். 'அரசாங்க வர்த்தமானி' இன்றுவரை தொடர்ந்து வெளிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயதாரகை (1841)**

இலங்கையில் ஆரம்பத்தில் சமய வளர்ச்சி கருதியே பத்திரிகைகள் தொடங்கப்பட்டன. அச்சுயந்திரங்களின் வருகையோடு வளர்ச்சிபெற்ற பத்திரிகை உலகிற்கு கிறிஸ்தவ பாதிரிமாரின் முயற்சியும் ஆதரவும் பெரிதும் உதவின. 1834ஆம் ஆண்டுமுதல் மானிப்பாயில் அமெரிக்கன் மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட அச்சகத்திலிருந்து பெருந் தொகையான பிரசுரங்கள் வெளிவந்தன.

இலங்கையில் முதலாவதாக தமிழ் மொழியில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையின் பெயர் 'உதயதாரகை' என்பதாகும். அதன் ஆங்கிலப் பெயர் 'Morning Star' என்பதாகும். 07-01-1841 முதல் வெளிவரத் தொடங்கிய இப்பதிரிகை, 1864ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட் பட்டிருக்கிறது. மாதம் இருமுறையாக வெளிவந்த இப்பத்திரிகை, பின்பு வாரத்துக்கு ஒன்றாக வெளிவந்தது.

ஆங்கில அறிவு கொண்ட தமிழ்ப் பண்டிதரான ஹென்றி மார்ட்டின் அப்புக்குட்டி, உதயதாரகையின் ஆரம்ப கால ஆசிரியராக கடமையாற்றினார். இப்பத்திரிகையின் ஆசிரியர்களுள் கரோல் விஸ்வநாதபிள்ளையும் ஆனல்ட் சதாசிவம்பிள்ளையும் முக்கியமானவர்கள். தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் ஸ்தாபகர் பாவலர் துரையப்பா பிள்ளையும் 1901 முதல் உதயதாரகையின் ஆசிரியராக கடமையாற்றியிருக்கிறார். 1845 முதல் 1855 வரை வெளிவந்த 'உதயதாரகை' இதழ்கள் இப்பொழுதும் பிரித்தானிய பழம்பொருள் காப்பகத்தில் வைக்கப் பட்டுள்ளன.

உதயதாரகையின் பிறப்பு, வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. மதத்தின் ஏனைய பிரிவினரிடையே பகைமையைத் தோற்றுவித்தது. பல பத்திரிகைகளின் தோற்றத்துக்கும் காரணமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உதயதாரகை' சமயக் கருத்துக்களுக்கு மட்டுமன்றி பொதுவான செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது. 'உதயதாரகை' இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையென வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டது. தமிழ்ப் பத்திரிகை என்ற புதிய பண்பாட்டை தொடக்கிவைத்த பெருமை உதயதாரகையையே சாரும்.

## உதயாதித்தன் (1841)

1841ஆம் ஆண்டு முதல் சைமன் காசிச் செட்டி "உதயாதித்தன்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார். தேவகிரி முதலியார் என்னும் பெரும் புலவரின் ஆக்கங்கள் இவ்விதழில் வெளிவந்தன. சமயசம்பந்தமான விடயங் களுக்கு அதிகமாக இடம்கொடுக்காமைபற்றி பல விமர்சனங்கள் எழுந்தன. ஒரு வருடம் தொடர்ந்து வெளிவந்த இவ்விதழ் 13 இதழ்களுடன் நின்று கொண்டது.

## சத்திய வேத பாதுகாவலன் (1876)

'சத்திய வேத பாதுகாவலன்' என்னும் இதழ் 1876ஆம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங்கியது. இலங்கையின் தமிழ் வாரமஞ்சரியாக இது இன்றும் தொடர்ந்து வெளிவருகிறது.

## சன்மார்க்க போதினி (1885)

'சன்மார்க்க போதினி' என்னும் இவ்விதழ் 1885 முதல் 1992 வரை வெளிவந்தது. அதன் ஆசிரியராக ச. தம்பிமுத்து கடமையாற்றினார். பல ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்த இவ்விதழில் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய பல கட்டுரைகள் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சாதனம் (1889 – 1946)

ஆறுமுகநாவலர் ஆரம்பித்த இந்துமத விழிப்பின் காரணமாக இந்து மதப்பத்திரிகைகள் பல வெளிவரத் தொடங்கின. இவற்றில் 'இந்து சாதனம்' *(1889 - 1946)* முக்கியமான இதழாகும். நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட சைவ சமய பரிபாலன சபையால் இப்பத்திரிகை வெளியிடப்பட்டது. நாட்டின் தேசிய மறுமலர்ச்சியையும் அரசியல் விழிப்புணர்ச்சிகளையும் நோக்கமாக கொண்டு இப்பத்திரிகை இயங்கியது. இந்து சாதனத்தின் ஆசிரியர்களும் மா.வே. திருஞானசம்பந்தம்பிள்ளை, நா. சிவப்பிரகாசம் ஆகியோர் முக்கியமானவர்கள். சைவ சமய கருத்துகளும் கட்டுரைகளும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இப்பத்திரிகையில் வெளிவந்தன.

ஆறுமுக நாவலரின் பெறா மகனான த. கைலாசபிள்ளை மற்றும் பெ. கார்த்திகேசபிள்ளை, கு. சிற்சபேசன், மு. மயில்வாகனன் ஆகியோரும் இந்து சாதனத்தின் தமிழ்ப் பிரிவின் ஆசிரியர்களாக கடமை யாற்றினர்.

## இலங்கை நேசன் (1877)

*1877* முதல் 'இலங்கை நேசன்' என்னும் இந்து சமய ஏடும் வெளிவந்தது. சின்னத்தம்பி ஆசிரியராகக் கடமையாற்றிய இவ்விதழில் ஆறுமுகநாவலர் பல கட்டுரைகளை எழுதினார்.

## ஆரம்பகாலப் பத்திரிகைகள்

*01. 1841* - உதயதாரகை

*02. 1841* - உதயாதித்தன் (சைமன் காசிச் செட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*03. 1848* - இலங்கை நேசன் (முத்துசாமி)

*04. 1854* - ஞானதீபிகை (டபிள்யூ. நைட், வின்சலே)

*05. 1863* - இலங்காபிமானி (சி.வை. கதிரவேல்)

*06. 1863* - இலங்கை பாதுகாவலன் (சி. முத்தையா)

*07. 1865* - பாலியர் நேசன் (வில்லியம் சின்னத்தம்பி)

*08. 1870* - புதினாபதி

**உதயபானு (1880)**

இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிராக முதன்முதலில் சமயத்துறையிலேயே குரல் எழுப்பப்பட்டது. இந்த முயற்சியை முதன்முதலில் ஆறுமுகநாவலரே ஆரம்பித்து வைத்தார். உதயதாரகையின் கிறிஸ்தவ மதக் கருத்துக்களுக்கு எதிராக இந்து மதக் கருத்துக்களைக் கொண்டு 'உதயபானு' வெளிவரத் தொடங்கியது. 1882 முதல் இதே பத்திரிகை 'சைவ உதயபானு' என்ற பெயருடன் வெளிவரத் தொடங்கியது.

**இலங்கை தின வர்த்தமானி (1886)**

ரி.என். ராஜிப்பிள்ளை 'இலங்கை தின வர்த்தமானியை' 1886ஆம் ஆண்டு முதல் வெளியிட்டார். பொதுவான செய்திகளையும் தாங்கிவந்த இப்பத்திரிகை தலையங்கங்களை கவர்ச்சிகரமாக வழங்கும் முறையை ஆரம்பித்தது.

20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழ் மொழி மூலமான பத்திரிகைகளின் வளர்ச்சி அதிகரித்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் வெளிவந்த பத்திரிகைகளில் பின்வருபவை முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன் - 1900

திராவிட கோகிலம் - 1900

தேச நேசன் - (கே. நடேசையர்) - 1922

தேசபக்தன் - (கே. நடேசையர்) - 1924

இந்தியன் - (சாம் ஜோன்) - 1924

ஜன நேசன் - (டி. சராநாதன்) 1928

இலங்கை இந்தியன் - (நெல்லையா) - 1929

## வீரகேசரி (1930)

இலங்கையின் தமிழ் இதழியல் வரலாற்றில் 1930ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகும். இந்த ஆண்டுதான் யாழ்ப்பாணத்தில் ஈழகேசரியும் கொழும்பில் வீரகேசரியும் தொடங்கப்பட்டன.

தமிழ்நாடு ஆவணப்பட்டியை சேர்ந்த பெரிசுப்பிரமணியச் செட்டியாரால் 1930ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தொடங்கப்பட்ட பத்திரிகையே வீரகேசரி ஆகும். செட்டியார் தனது பரம்பரைத் தொழிலான அடகுபிடிக்கும் தொழிலை விட்டுவிட்டு பத்திரிகை தொழிலில் ஈடுபட்டார். வீரகேசரி கொழும்பு செட்டியார் தெருவில் 196ஆம் இலக்கத்திலிருந்த அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. 8 பக்கங்களைக் கொண்ட இப்பத்திரிகையின் ஆரம்ப விலை 5 சதமாகும். சில ஆண்டு களின் பின்பு வீரகேசரியின் பிரதான காரியாலயம் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்துக்கு மாறியது.

பெரிசுப்பிரமணியச் செட்டியார் வீரகேசரி பத்திரிகையின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தி உரிமைக் குரல் எழுப்ப முனைந்தார். பின்பு அப்பத்திரிகை இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் முதன்மைப் பத்திரிகையாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை பல அறிஞர்கள் ஏற்றனர். சுப்பிரமணியச் செட்டியாரைத் தொடர்ந்து எச். நெல்லையா, வ. ராமசாமி ஐயங்கார், கே.பி. ஹரன், கே.வி.எஸ். வாஸ் என்று பலரும் ஆசிரியர்களாக கடமையாற்றினார். ஈஸ்வர ஐயர் என்ற வழக்கறிஞர் வீரகேசரியின் பொது முகாமையாளராக கடமையாற்றினார்.

சுப்பிரமணியச் செட்டியார், எச். நெல்லையா, ஈஸ்வர ஐயர் ஆகியோர் வீரகேசரியை வளர்த்த மூலவர்கள் எனலாம். இனிமையான சுபாவமும் ஆழ்ந்த சமயப்பற்றும் கொண்ட கே.பி. ஹரன் தமிழ் நாட்டிலிருந்து வந்து வீரகேசரியில் *1939* முதல் *1959* வரை ஆசிரியராக கடமையாற்றினார். கே.வி.எஸ். வாஸ் பல ஆண்டுகளாக வீரகேசரியின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றி பிரதம ஆசிரியராக உயர்ந்தார்.

ஆரம்பத்தில் வீரகேசரி, இந்தியச் செய்திகளை வெளியிடுவதிலேயே ஆர்வம் காட்டியது. பத்திரிகை மொழியும் இந்தியப் பாணியில் அமைந்திருந்தது. தினகரன் ஆசிரியராக கைலாசபதி வந்தபோது அதற்கு ஈடுகொடுக்க வேண்டிய நிலை வீரகேசரிக்கு ஏற்பட்டது. இதனால் அப்பொழுது ஆசிரியராக இருந்த கே.பி. ஹரனும் செய்தி ஆசிரியராக இருந்த கே.வி.எஸ். வாசுவும் வீரகேசரியின் போக்கை மாற்றி அமைக்க முனைந்தனர்.

*1956*ஆம் ஆண்டுக்குப் பின் வீரகேசரியில் இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. "தோட்டமஞ்சரி" என்ற பகுதியை ஆரம்பித்து மலைநாட்டு இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தது.

*1965*ஆம் ஆண்டு வீரகேசரி ஸ்தாபனத்தை ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவான "ஜன தின பப்ளிகேசன்" பொறுப்பேற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் லேக்ஹவுசில் கடமையாற்றிய பலர் வீரகேசரிக்கு வந்து சேர்ந்தனர். ஆசிரியர் பதவியை கே. சிவப்பிரகாசமும், விளம்பரப் பகுதியை ரி. சிவப் பிரகாசமும், விநியோகப் பகுதியை எஸ். பாலச்சந்திரனும் பொறுப்பேற்றனர். 1970ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்ததையடுத்து வீரகேசரி நிறுவனத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மீண்டும் வீரகேசரியை ஆர்.எஸ். நடேசன் பொறுப்பேற்றார். ஏ.வை.ஏ.எஸ். ஞானம் நிறுவனத்தின் தலைவராகவும் ஆர். கிருஸ்ணமூர்த்தி நிர்வாக அதிபராகவும் நியமிக்கப்பட்டனர். 1970 முற்பகுதியில் எம்.ஈ. வென்சஸ் லோஸ் நிர்வாக அதிபரானார்.

1974ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீரகேசரி நிறுவனம் புத்தக வெளியீட்டுத் துறையிலும் ஈடுபட்டது. இலங்கை எழுத்தாளர்களின் 50க்கு மேற்பட்ட நாவல்களை வெளியிட்டு பெயர் பெற்றது. புத்தக வெளியீட்டு முயற்சிகளுக்கு எஸ். பாலச்சந்திரன் பொறுப்பாக இருந்தார். பொன் இராஜ கோபாலும் இதற்கு உதவியாக இருந்தார்.

1974இல் கே.வி.எஸ்.வாஸ். வீரகேசரியிலிருந்து ஓய்வு பெற்றார். வி. லோகநாதன் வீரகேசரியின் ஞாயிறு மலரின் ஆசிரியரானார். இவர் காலத்தில் ஆர். வெங்கடராமன் (செய்தி ஆசிரியர்) வி.பி. ஆதித்தன் பெருமாள், சில்லையூர் செல்வராஜன், டேவிட்ராஜு, அ.ந. கந்தசாமி, சக்தி பாலையா, கே. கணேஷ் போன்றோரும் பணியாற்றினார்.

1983ஆம் ஆண்டு ஜுலைக் கலவரம் மற்றைய பத்திரிகைகளைப் போலவே வீரகேசரியையும் பாதித்தது. வீரகேசரி சில தினங்களுக்கு வராமலே நின்றுவிட்டது. சில ஊழியர்களின் விடாமுயற்சியால் வீரகேசரி மீண்டும் வெளிவரத் தொடங்கியது. இதில் முக்கிய பங்களிப்பினை செய்தி ஆசிரியர் டேவிட் ராஜுவும் பிரதம உதவி ஆசிரியர் எஸ். நடராஜாவும் வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவரப் பாதிப்பு காரணமாக ஆசிரியர் சிவப்பிரகாசம் 1984ஆம் ஆண்டு வெளிநாடு சென்றார். ஈ.வி. டேவிட் ராஜூ பிரதி ஆசிரியரானார். பிரதம ஆசிரியராக ஆ. சிவநேசச் செல்வன் நியமிக்கப்பட்டார். எஸ். நடராஜா செய்தி ஆசிரியரானார். கே.எஸ். சிவகுமாரனும் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1997ஆம் ஆண்டு பொன்.ராஜகோபாலும் ஆ. சிவநேசச்செல்வனும் இன்னும் சிலரும் வீரகேசரி யிலிருந்து வெளியேறி "தினக்குரல்" பத்திரிகையை ஆரம்பித்தனர். பின்பு வீரகேசரி வாரமலரின் ஆசிரியராக வி. தேவராஜூவும் தினசரியின் ஆசிரியராக ஆர். பிரபாகனும் நியமிக்கப்பட்டனர். வி. தேவராஜ் "வணிகம்" பத்திரிகையின் ஆசிரியரானதும் ஆர். பிரபாகன் வீரகேசரி வார வெளியீட்டின் ஆசிரியரானார். ஸ்ரீகஜன் வீரகேசரி நாளிதழின் ஆசிரியரானார். 2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வென்ஸ்லோஸ் பதவியிலிருந்து விலகினார். ஆர். நடேசனின் புதல்வர் குமார் நடேசன் நிர்வாக அதிபரானார்.

வீரகேசரி நிறுவனம் என்பது ஒரு விளை நிலமாகும். இவ்விளைநிலத்தின் அறுவடையாக பல பத்திரிகை யாளர்களும் எழுத்தாளர்களும் உருவாகியிருக்கிறார்கள். வீரகேசரி நிறுவனம் பல துணைப் பத்திரிகைகளையும் வெளியிடுகிறது.

## தினசரி வீரகேசரி

தினசரி வீரகேசரியானது 24 பக்கங்களுடன் நாளாந்தம் பரபரப்பான செய்திகளையும் உடனுக்குடனான செய்திகளையும் தாங்கி வெளிவருகின்றது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல், கலாசார, சமய சுகாதார, கல்வி செய்திகளுடன் மக்களை அறிவூட்டும் விடயங்களையும் வரலாற்று தகவல்களையும் தாங்கி வருவது தினசரி வீரகேசரியின் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி வீரகேசரியானது 4 பகுதிகளாக (வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு நகரப்பதிப்பு) அச்சிடப்படுகின்றது. இத்தினசரி வீரகேசரியின் துணை இணைப்புகளாக வணிக உலா, பஜட் எட்ஸ், கிளசிக் எட்ஸ், மன்டே கிளசிக், சங்கமம், விளையாட்டு, துளசி என்பன காணப்படுகின்றன.8 பக்கங்களைக் கொண்டு வெளிவந்த வீரகேசரி ஒரே நாளில் 100 பக்கங்களையும் பிரசுரித்து அசத்தியமை அதன் வளர்ச்சிக்கு பெரும் சான்றாகும். வீரகேசரியின் இணையதள பதிப்புகள் E பேப்பர் வடிவிலும் வெளிவருகின்றன. வீரகேசரியின் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு ஈடாக நவீன வசதிகளுடன் கூடிய பாரிய அச்சு ஊடக வலையமைப்பு ஏக்கலை என்ற இடத்தில் நிறுவியுள்ளனர். அங்கு வீரகேசரி பத்திரிகை மட்டுமன்றி ஏனைய ஆங்கில சிங்கள பத்திரிகைகளும் அச்சிடப்படுகின்றன. சிங்கள மொழியில் 'சிய தெச' என்ற ஞாயிறு பத்திரிகை 06-08-2017இல் வெளியிடப்பட்டு தொடர்ந்து வருகிறது.

**வாராந்த வீரகேசரி**

தற்போதய வீரகேசரியின் வாராந்த பத்திரிகையானது 64 பக்கங்களை உடையது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் வாசகர்களை சந்திக்கின்றது. உள்நாட்டு வெளிநாட்டு செய்திகளை முழுமையாக தருவதுடன் கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், மாகாண செய்தி, கல்வி, கலை பண்பாடு, நிகழ்வுகள் மற்றும் விளம்பரங்களை வாராந்த வீரகேசரி வாசகர்களுக்கு அளிக்கின்றது. அனேகமான வீரகேசரி வாசர்கர்களாக வர்த்தகர்கள், ஓய்வு பெற்றோர், கல்விகற்போர், பெண்கள், சிறுவர்கள் என்று அதிகமானோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்படும் வாராந்த தமிழ் பத்திரிகையாக வாராந்த வீரகேசரி காணப்படுகின்றது. மேலும் கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளின் வாசகர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது வாராந்த வீரகேசரி. இப்பத்திரிகையின் துணை இணைப்புகளாக சமகால அரசியல், வர்த்தக உலா, கேசரி கதம்பம், கேசரி கதிர், எட்வேஞ்சர் போன்றனவாகும். வீரகேசரி நிறுவனம் பல துணைப் பத்திரிகைகளையும் வெளியிடுகிறது.

மித்திரன், மித்திரன் வாரமலர், ஜோதி, நவீன விஞ்ஞானி, வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்), மெட்ரோ நியூஸ், இசைஉலகம், சுகவாழ்வு, கலைக்சேகரி, சோதிடகேசரி, ஜீனியஸ், சுட்டி போன்ற பத்திரிகைகளையும் வெளியிடுகிறது. இவற்றிலே மித்திரன், ஜோதி, நவீன விஞ்ஞானி என்பன நின்றுவிட்டன.

## மித்திரன் (1966)

*01-06-1966* முதல் மித்திரன் வெளிவரத் தொடங்கியது. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது மாலைத் தமிழ் தினசரி மித்திரன் ஆகும். இதன் ஆரம்ப விலை 10 சதமாகும். ஏ. டபிள்யூ சந்திரசேகர், கே. நித்தியானந்தன், ஜி. நேசமணி, எஸ். சூரியகுமார், ஜோன்சன் ஆகியோர் மித்திரன் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தனர். மாலைத் தினசரியாக வெளிவந்து கொண்டிருந்த மித்திரன் *03-03-1969* முதல் மித்திரன் வாரமலராக மாறியது. அதன் பொறுப்பாசிரியராக எஸ். தியாகராஜா பணியாற்றினார்.

வாராந்த இதழாக வெளிவரும் மித்திரன் முற்றுமுழுதாக பெண்களுக்குரியதாகவே காணப்படுகின்றது. பெண்களை அறிவூட்டும் விதத்திலான கட்டுரைகளையும் ஆக்கங்களையும் வாசகர்களின் ஆக்கங்களையும் பெண்களுக்கு பிரயோசனமான வீட்டு மற்றும் அழகுக் குறிப்புகளையும் பெண்களை தெளிவூட்டும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



கட்டுரைகளையும் வெளியிடுவதில் மித்திரன் முன்னிற்கின்றது. இலங்கை முழுவதிலும் மித்திரனுக்கு பரவலான பெண் வாசகர்கள் காணப்படுவதோடு மித்திரனூடாக வரும் ஏனைய துணை பதிப்புகளிலும் அதிக ஆர்வத்துடன் வாசிக்கின்றனர். பெண்களின் முன்னேற்றத்தில் அதிக பங்கு வகிக்கும் ஓர் சிறந்த இதழாக மித்திரன் வாரமலர் திகழ்கின்றது.

1973 முதல் 1984 வரை மித்திரன் வாரமலரின் ஆசிரியராக திருமதி. அன்னலட்சுமி ராஜதுரை கடமையாற்றினார். மித்திரன் வாரமலரின் பொன்விழா மலர் 06-03-2016இல் வெளிவந்தது.

## ஜோதி வார இதழ்

1966ஆம் ஆண்டுமுதல் "ஜோதி" என்ற குடும்பப் பத்திரிகை வாராவாரம் வெளிவந்தது. இதன் பொறுப் பாசிரியராக அன்னலட்சுமி ராஜதுரை கடமையாற்றினார்.

இரண்டரை வருடங்கள் மட்டுமே தொடர்ந்து வெளிவந்தது. ஜோதியை அடுத்து, மாணவர்களுக்கான "நவீன விஞ்ஞானி" என்ற இதழ் 17-07-1967 முதல் வெளிவரத் தொடங்கியது. இதன் ஆசிரியராக கே. லோகேஸ்வரன் கடமையாற்றினார். 1969ஆம் ஆண்டு இவ்விதழ் நின்று கொண்டது.

1996ஆம் ஆண்டு "வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கிலப் பத்திரிகையும் வெளிவந்தது. அது 2001 செப்டம்பரில் நின்று கொண்டது. 2016 ஏப்ரல் முதல் வீரகேசரி ஞாயிறு இதழுடன் "வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்" என்ற பெயரில் ஆங்கிலப் பகுதியும் இணைத்து வெளியிடப்பட்டது. பின்பு அது வெள்ளிக்கிழமை நாளிதழுடன் இணைந்து வந்தது. அது 2016 ஜூலை மாதத்துடன் நின்று கொண்டது. மீண்டும் 'வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்' 19-08-2016 முதல் தனி இதழாக வெளிவரத் தொடங்கியது.

264487



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Financial Digest

வீரகேசரி நிறுவனத்தின் ஆங்கிலப் பத்திரிகை வாசகர்களுக்காக மிகச்சிறந்த நிதி மற்றும் துறை நிபுணத்துவம் தொடர்பான தகவல்களை தரும் பத்திரிகையாக **Financial Digest** திகழ்கின்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செய்திளை ஆங்கில பத்திரிகைகளை விரும்பும் வாசகர்களுக்காக தெளிவான முறையில் தருவதில் ஏனைய இலங்கையின் ஆங்கில பத்திரிகை களுக்கு இணையாக காணப்படுகின்றது. Financial Digest. இப்பத்திரிகையானது பொதுவான செய்திகள், தொழிநுட்பம் தொடர்பான விடயங்கள், பொருளாதார சந்தை நிலவரங்கள் தொடர்பான செய்திகளை Financial Digest வழங்குகின்றது.

**"இசை உலகம்"** என்ற கலை இலக்கிய சஞ்சிகை 2009ஆம் ஆண்டு வெளிவரத் தொடங்கியது. ஏ.பி.மதன் அதன் ஆசிரியராக கடமையாற்றினார். 18 இதழ்களுடன் நின்று கொண்டது. "இசை உலகம்" நின்று போகவே 01-01-2010 முதல் **'கலைக்கேசரி'** என்ற இதழ் வெளிவரத் தொடங்கியது. பழைமையும் பண்பாடுகளையும் பேணும் பல ஆக்கங்கள் அதில் வெளிவந்தன. அன்னலட்சுமி ராஜதுரை அதன் ஆசிரியராவார்.

வடபகுதி வாசகர்களை மையமாக வைத்து வீரகேசரி நிறுவனம் **"யாழ் ஓசை"** என்ற வாரமலரை கொழும்பிலிருந்து வெளியிட்டது. 15-11-2010இல் ஆரம்பமான இவ்விதழ் சில மாதங்களின்பின் நின்று கொண்டது. ஜோதிடத்தில் நம்பிக்கை உள்ள வாசகர்களுக்கு ஏற்றவகையில் **'ஜோதிட கேசரி'** என்ற இதழ் ஆரம்பிக்கப்பட்டது. வருமுன் காக்கும் வழிகாட்டி இதழாக **"சுகவாழ்வு"** வெளிவரத் தொடங்கியது. அதன் ஆசிரியராக இரா.சடகோபன் கடமையாற்றுகிறார். 2005 முதல் **"மெட்ரோ நியூஸ்"** என்ற நாளிதழும் வெளிவரத் தொடங்கியது. இலங்கை அரசியலில் தமிழ் அரசியல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரலாற்றில் இன்று", "உலகவலம்" ஆகிய பகுதிகள் முக்கியமானவை. இளைஞர்களுக்கான பத்திரிகையாக இது திகழ்கிறது. சினிமாச் செய்திகளை உடனுக்குடன் வெளியிடுகிறது.

வீரகேசரியின் சிறப்பு வெளியீடாக **'கேசரி தகவல் களஞ்சியம் 2011'** வெளிவந்தது. 768 பக்கங்களைக் கொண்ட இந்த இயர் புக் பல வகையில் சிறந்து விளங்கியது. வீரகேசரியின் முக்கியமான முகப்புச் செய்திகளைத் தாங்கிய **வீரகேசரி செய்திக் களஞ்சியம்** என்ற நூலும் வெளிவந்தது. 2015 முதல் 'மாலை எக்ஸ்பிரஸ்' என்ற மாலைத் தினசரியும் வெளிவரத் தொடங்கியது. வீரகேசரி தனது மலைநாட்டு வாசகர்களை மையப்படுத்தி சூரிய காந்தியையும் முஸ்லிம் வாசகர்களை மையப்படுத்தி விடிவெள்ளியையும் வெளியிட்டு வருகிறது.

## விடிவெள்ளி

வாராந்த பத்திரிகையாக இஸ்லாம் சமயத்தவர் களுக்காக வெளியிடப்படும் இப்பத்திரிகை முற்றுமுழுதாக இஸ்லாமியர்களுக்கு உரித்தான விடயங்களையும் பொது அரசியல் சமூக விடயங்களையும் தாங்கி வருவதாக காணப்படுகின்றது. உள்நாட்டு வெளிநாட்டு இஸ்லாம் சமூகத்தவரின் முழுமையான செய்திகளை வழங்கும் பத்திரிகையாக விடிவெள்ளி காணப்படுகின்றது. இப் பத்திரிகையானது வடமேல் மற்றும் கிழக்கு மாகாணத்தின் அதிகளவான வாசகர்களை தன்னுள் கொண்டுள்ளது.

விடிவெள்ளி இதழ் 01-11-2016 முதல் நாளிதழாக வெளிவரத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியகாந்தி

சூரியகாந்தி பத்திரிகையானது மலையகத்தின் தனித்துவ குரலாகும். மலையக மக்களின் உரிமைகளுக் காகவும் அவர்களின் பிரச்சினைகளை உலகறிய செய்யவும் ஏனைய மலையக நிகழ்வுகளை படம்பிடித்துக் காட்டவும் மலையகத்தில் முதல்தர பத்திரிகையாக திகழ்கின்றது. மலையகத்தின் தமிழர்களை கவரும் விதத்தில் சிறப்பான செய்திகளையும் வடிவமைப்புகளையும் கொண்டு வெளிவருகின்றது. சூரியகாந்தி, மத்திய மற்றும் ஊவாக மாகாணங்களில் இருக்கும் தோட்ட மற்றும் நகர் மக்களுக்கான பத்திரிகையாக வலம் வருகின்றது.

## நாணயம்

முற்றுமுழுதான வணிகச் செய்திகளை தாங்கி வரும் வீரகேசரியின் மற்றுமொரு வெளியீடு நாணயமாகும் உள்நாட்டு வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்களை இலக்காக கொண்டு இப்பத்திரிகை வெளியிடப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேச வணிக செய்திகளையும் நிலவரங்களையும் தெளிவான முறையில் இலங்கையின் வணிகத் துறையினருக்கு வழங்குவதில் நாணயம் சிறந்ததொரு இடத்தினை வகிக்கின்றது. வணிகத் துறையினரை ஊக்கப்படுத்தும் விதத்திலான ஆக்கங்களையும் செய்தி களையும் வணிக நுணுக்கங்களையும் நாணயம் வெளியிட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை Express

இலங்கையில் மாலை நேரங்களில் அன்றைய செய்திகளை வாசகர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு திங்கள் முதல் வெள்ளிவரை மாலை நேரங்களில் அன்றைய செய்திகளை முழுமையாக தாங்கி வருகின்றது. மாலை Express இலங்கையின் செய்திகளுடன் சர்வதேச செய்திகளையும் நிகழ்வுகளையும் உடனுக்குடன் வழங்குவதில் முன்னிற்கின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேச சிறப்பு பிரமுகர்களின் கட்டுரைகள் மற்றும் நேர்காணல் களையும் மாலை Express சிறப்பாக வழங்குகின்றது.

## கலைக்கேசரி

கலைக்கேசரி மனிதனின் கலாச்சார பாரம்பரிய விழுமியங்களை எடுத்துக் காட்டும் இதழாக வெளிவருகிறது. ஒவ்வொரு விடயத்தையும் மிக நுணுக்கமாகவும் ஆய்வுகளின்பின் மிக சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே பல தகவல்களையும் கட்டளைகளையும் வெளியிடுவதானது சஞ்சிகையின் சிறப்பம்சமாகும். மனிதன் தோற்றம் முதற்கொண்டு இன்று வரையான கலை கலாச்சார பாரம்பரிய விடயங்களையும் முற்கால வரலாறுகள் மற்றும் வரலாற்று இடங்கள் பற்றிய தகவல்களையும் உரிய களத்திற்கே சென்று தகவல்களைத் திரட்டி கலைக்கேசரி வெளியிடுகிறது. இதுவரையில் எவரும் அறிந்திராத உலக பாரம்பரியத் தகவல்களையும் சிறப்புக் கட்டுரைகளையும் தரமானவர்களின் எழுத்துக்களின் மூலமாக கலைக்கேசரியின் ஊடாக வெளியிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீனியஸ்**

ஜீனியஸ் சஞ்சிகையானது மாணவர்களுக்கான அறிவுப் பெட்டகமாகும். மாணவர்களின் கல்வி அறிவினை ஊக்கப்படுத்தும் பொருட்டு பலவித கட்டுரைகளையும் அறிவூட்டல்களையும் தகவல்களையும் தெளிவான முறையில் வழங்குகின்றது. மாணவர்களுக்கும் தேவையான உலகத் தகவல்களையும் மாணவர்களை உற்சாகப்படுத்தி வெற்றியை நோக்கி இட்டுச்செல்வதற்கான வழிமுறை களையும் அவர்களுக்கு வழங்க ஜீனியஸ் தவறுவதில்லை.

**சுகவாழ்வு**

ஆரோக்கியமான வாழ்க்கைக்கான அறிவுறுத்தல் களை வழங்கும் சஞ்சிகையாக சுகவாழ்வு திகழ்கிறது. ஆரோக்கியம், சுகாதாரம், மருத்துவ விடயங்களை மக்களுக்கு வழங்கி நோய்களில் இருந்து விடைபெறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு சுகவாழ்வு வெளிவருகிறது. மருத்துவக் குறிப்புக்களோடு சிறந்த வைத்தியர்களின் கட்டுரைகளையும் வெளியிடுகிறது. வாசகர்களின் மகிழ்ச்சிகரமான ஆரோக்கிய வாழ்வே சுகவாழ்வின் முக்கிய நோக்கமாகும்.

**சோதிடகேசரி**

சோதிடம் மற்றும் இந்துக்களின் சமய விடயங்களையும் தாங்கிய சஞ்சிகையாக சோதிடகேசரி வெளிவருகிறது. இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவினதும் தலைசிறந்த சோதிட வல்லுனர்களும் இச்சஞ்சிகைக்கு தகவல்களையும் கட்டுரைகளையும் வழங்குகின்றனர். இந்து சமயசார் முக்கிய விடயங்களையும், பாரம்பரிய நடைமுறைகளையும் எடுத்துக் காட்டுவதாக சோதிடகேசரி காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டிக்கேசரி

முன்பள்ளி மாணவர்களையும் பாலர்களையும் கவரும் பொருட்டு அவர்களை எதிர்காலத்தில் கல்வி மற்றும் கலைகளில் சிறந்தவர்களாக தயார்படுத்தும் விதத்திலான அவர்களுக்கு ஏற்ப இலகுவான விடயங்களை தாங்கியதாக சுட்டிக்கேசரி வண்ண மயமாக வெளிவருகிறது. சிறுவர்களுக்கான கற்றல் பயிற்சிகளோடு கதைகள், வர்ணம் தீட்டும் பயிற்சி, எழுத்துப் பயிற்சி, நுண்ணறிவுப் பயிற்சி என்பவற்றையும் வழங்குவதால் அதிகளவான பாலர்களையும் தன்னுள் கொண்டுள்ளது சுட்டிக்கேசரி.

## ஜூனியர்கேசரி

பாடசாலையின் 5ஆம் தரம் வரையிலான மாணவர்களுக்கான இலகு அறிவூட்டல் சஞ்சிகையாக ஜூனியர்கேசரி வெளிவருகிறது. அவர்களின் கற்றலுக்கு உதவி புரியும் பொருட்டு பல்வேறு வகையான கல்விப் பயிற்சிகளை வழங்குவதில் முன் நிற்கிறது. சிறுவர்களின் திறன்களை வெளிக் கொணர்ந்து அவர்களை சிறப்புடனும் உற்சாகத்துடனும் செயற்பட வைக்கிறது ஜூனியர்கேசரி.

## தினகரன் (1932)

இலங்கையின் தேசிய இனங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் செய்திகைள வாசிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிரபல பத்திரிகையாளரான டி.ஆர். விஜயவர்தன 1932ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் திகதி முதல் "தினகரன்" தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தார். ஆரம்பகால தினகரன் ஆசிரியர்கள் தமிழ் நாட்டிலிருந்தே அழைத்து வரப்பட்டனர். தினகரனின் முதல் ஆசிரியராக கே. மயில்வாகனமும் நிர்வாக ஆசிரியராக இராமநதனும் நியமிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலகாலம் இராமநாதஐயரும் தினகரனின் ஆசிரியராக கடமையாற்றினார்.

ஆரம்பத்தில் தினகரனில் தமிழ்நாட்டு எழுத்தாளர் களின் படைப்புகள் அதிகமாக வெளிவந்தன. ரி.எஸ். தங்கையா ஆசிரியராக வந்த பின்பு தினகரன் செய்திப் பத்திரிகை என்ற நிலைக்கு உயர்ந்தது. ஈழத்தின் இலக்கிய நிலமைகள் பற்றிய சிரத்தை காட்டும் பணி வி.கே.பி. நாதன் ஆசிரியராக இருந்த காலத்திலேயே தொடங்கியது. ஈழகேசரி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. வீரகேசரி இலங்கை வாழ் இந்திய மக்களின் குரலாக ஒலித்தது. அதனால் இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் தேசிய பத்திரிகையாக தினகரன் மாற வேண்டியிருந்தது.

*1958*ஆம் ஆண்டு கா. கைசபாபதி தினகரனின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அதன்பின்பு தினகரன் இலங்கையின் ஒரு சுதேச பத்திரிகையாக மாறத் தொடங்கியது. இலக்கிய ரீதியான பல கட்டுரைகள் வெளிவரத் தொடங்கின. ஈழத்து எழுத்தாளர்கள் பலர் எழுதத் தொடங்கினர். இளம் தமிழ் எழுத்தாளர்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் எழுத்தாளர்கள் பலருக்கும் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

*1960*ஆம் ஆண்டு க. கைலாசபதி பல்கலைக்கழக ஆசிரிய பீடத்திற்கு மாறினார். அவர் தினகரன் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தை ஈழத்துப் படைப்பாளிகளின் “பொற்காலம்” என்றே கூறிவிடலாம். க. கைலாசபதிக்குப்பின் தினகரனின் ஆசிரியராக வந்த சி.வி. ராஜசுந்தரம் சிலகாலம் பணியாற்றிவிட்டு இலங்கை வானொலி நிலையத்திற்கு சென்று விட்டார்.

*1961*ஆம் ஆண்டு ஆர். சிவகுருநாதன் தினகரனின் ஆசிரியராக வந்தார். இவரும் கைலாசபதியின் பாணியைப் பின்பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரனில் சிறந்த சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் "வாரம் ஒரு சிறுகதை விருந்து" என்ற தலைப்பில் தமிழக - இலங்கையின் பழம்பெரும் எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் தந்து ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகளையும் தந்தார். மலையக இலக்கிய வரலாறு, இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும் போன்ற பயன்மிகு கட்டுரைகளையும் தெளிவத்தை ஜோசப் எழுதினார்.

சிங்கள கலை இலக்கிய விடயங்களை எம்.எச்.எம்.சம்ஸ் அறிமுகப்படுத்தினார். மானா மக்கீன் சிறந்த கட்டுரைகளை எழுதினார். சிறந்த ஆசிரியத் தலையங்கங் களையும் சிவகுருநாதன் எழுதிவந்தார். இலங்கை மக்களுக்கு இடையே சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் அவை அமைந்திருந்தன. ஆர். சிவகுருநாதன் தினகரனின் ஆசிரியராக 34 வருடங்கள் (1961-1995) கடமையாற்றினார். இவர் காலத்தில் எம்.ஆர். சுப்பிரமணியம் என்ற அறிஞர் தினகரனின் ஞாயிறு இதழுக்கு பொறுப்பாக இருந்தார். ஆர். சிவகுருநாதன் ஓய்வுபெற்ற பின்பு பல பத்திரிகையாளர்கள் தினகரன் ஆசிரியர்களாக வந்தனர். ப. பாலசிங்கம் தினகரனில் 13 வருடங்கள் (1966-1979) செய்தி ஆசிரியராக கடமையாற்றினார்.

அருளானந்தம் 1995 முதல் 1997வரை பிரதம ஆசிரியராக இருந்தார். ராஜ ஸ்ரீகாந்தன் ஆசிரியராக இருந்தபோது தினகரனின் பணி மேலும் சிறந்து விளங்கியது.

இடதுசாரிப் பின்புலம் கொண்ட சிவசுப்பிரமணியம் இணையாசிரியராக இணைந்து பின்பு பிரதம ஆசிரியராக வந்தார்.

அதன்பின்பு தே. செந்தில்வேலவர் தினசரி வாரமலர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். வாரமலரின் செய்தி ஆசிரியராக விசு. கருணாநிதி விளங்கினார். நாளிதழின் ஆசிரியராக எஸ். தில்லைநாதனும் செய்தி ஆசிரியராக கே.குணராசாவும் பணியாற்றினார். தற்பொழுது தினகரனின் பிரதம ஆசிரியராக கே. குணராசா கடமையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேக்ஹவுஸ் நிறுவனம் தினகரனுடன் சில இணை இதழ்களையும் வெளியிட்டது. 1998ஆம் ஆண்டு வெளியிட்ட "அமுது" என்னும் மதசஞ்சிகை முக்கியமானது. அதன் பிரதம ஆசிரியராக எஸ். மனோரஞ்சனும் நிர்வாக ஆசிரியராக என்.எம். அமீனும் கடமையாற்றினர். 20 இதழ் மட்டுமே வெளிவந்தன. 'செந்தூரம்' இலவச இதழ் 2018 முதல் வெளிவருகிறது.

லேக்ஹவுஸ் நிறுவனம் 2000ஆம் ஆண்டுமுதல் வண்ணவானவில் என்ற மாத இதழையும் வெளியிட்டு வருகிறது. அதன் ஆசிரியராக அருள் சத்தியநாதனும் உதவி ஆசிரியர்களாக இராமலிங்கமும் மணிஸ்ரீகாந்தனும் கடமையாற்றுகின்றனர்.

## சுதந்திரன் (1947 – 1982)

இலங்கையின் அரசியல் கட்சிகள் சிலவும் தமிழ்ப் பத்திரிகைகளைத் தோற்றுவித்தன. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் அரசியலை வளர்க்கும் நோக்குடன் 01-06-1947 முதல் "சுதந்திரன்" என்னும் பத்திரிகை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. பல நூல்களின் ஆசிரியரான கே. நடேசையர் "சுதந்திரன்" பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது இனிமையான எளிமையான தமிழ்நடை வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தது.

இவரின் பின்னர் நாகலிங்கம், நாதன், குமாரசாமி, தெல்லியூர் நடராசா, சுப்பிரமணியம் போன்றோரும் ஆசிரியர்களாக கடமையாற்றினர். 1948ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தபோது சுதந்திரன், தமிழரசுக் கட்சியின் இதழாக மாறியது. அதுவரை தினஇதழாக வெளிவந்த சுதந்திரன் 1952ஆம் ஆண்டுமுதல் வாரஇதழாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு அரசியல் இதழாக இருந்த போதும் பல இலக்கிய விடயங்களையும் தாங்கி வந்தது.

உதயம் பத்திரிகையின் மூலம் கிழக்கிழங்கையின் எழுத்தார்வத்தை வளர்த்த எஸ்.டி. சிவநாயம் சிலகாலம் தினகரனில் கடமையாற்றியபின்பு சுதந்திரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரானார். இவர் காலத்தில் சுதந்திரன் பத்திரிகை நவீன இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது. சிலகாலம் கே.ஈ. ராமசாமியும் சுதந்திரனின் ஆசிரியராக கடமையாற்றினார்.

முற்போக்கு எழுத்தாளர்களாக இனங்காணப்பட்ட டானியல், டொமினிக் ஜீவா போன்றோரின் சிறுகதைகளும் ஆரம்பத்தில் சுதந்திரனில் வெளிவந்தன. கோவை. மகேசன் பிரதம ஆசிரியராக வந்தபோது இன உணர்வுகளை வளர்க்கும் வகையில் பல ஆக்கங்கள் இடம்பெற்றன. இவரது ஆசிரியத் தலையங்கங்கள் விதந்து போற்றப்பட்டன. இவர் தனது சிறைச்சாலை அனுபவங்களை கட்டுரைகளாக எழுதி வாசகர்களை கலங்கவைத்தார். 1977ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சுதந்திரன் 1983 கலவரத்துடன் நின்று கொண்டது.

சுதந்திரன் பத்திரிகை கொழும்பிலிருந்து வெளிவந்த போது 1910ஆம் ஆண்டுமுதல் சுடர் என்ற இலக்கிய மாத இதழ் வெளிவந்தது. இதன் ஆசிரியராக கரிகாலன் என்ற புனைபெயரில் கோவை மகேசனே கடமையாற்றினார். கொழும்பு-12 பண்டாரநாயக்க மாவத்தையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு சொந்தமான காணிஒன்று இருந்தது. அந்தக் காணியிலேயே சுதந்திரன் பத்திரிகையின் காரியாலயம் அமைந்திருந்தது. அந்த இடத்தில் இப்பொழுது கணபதி இந்து மகளிர் வித்தியாலயம் அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினபதி – சிந்தாமணி (1966 – 1974)

சுயாதீன பத்திரிகை சமாசம் என்ற எம்.டி. குணசேனா நிறுவனத்தினர் 'தவச' என்ற சிங்களப் பத்திரிகையையும் 'சன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டு வந்தனர். இவர்கள் 1964ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 'ராதா' என்னும் பெயரில் வாரஇதழ் ஒன்றையும் வெளியிட்டனர். கலை இலக்கிய வாரஇதழாக அது வெளிவந்தது. தினகரன் நாளிதழின் ஆசிரியராக இருந்த வி.கே.பி. நாதன், ராதாவின் பிரதம ஆசிரியராவார். அவருக்கு உதவி ஆசிரியராக சண் இருந்தார்.

இதே நிறுவனம் 29-08-1966 முதல் "தினபதி" என்ற நாளிதழையும் வெளியிட்டுவந்தது. அதன் வார இதழாக சிந்தாமணி வெளிவந்தது. இவற்றின் பிரதம ஆசிரியராக எஸ்.டி. சிவநாயகம் கடமையாற்றினார். சிந்தாமணியின் பொறுப்பாசிரியராக இராஜ அரியரட்னம் கடமையாற்றினார்.

1966ஆம் ஆண்டுக்கும் 1970ஆம் ஆண்டுக்கும் இடையில் இப்பத்திரிகையின் விற்பனை உச்சத்திலிருந்தது. 1966ஆம் ஆண்டு 11000 பிரதிகளும் 1970ஆம் ஆண்டு 12100 பிரதிகளும் 1973ஆம் ஆண்டு 13337 பிரதிகளும் விற்பனையாகின. தினபதி கவிதா மண்டலம் புதிய கவிஞர்களுக்கும் தினம் ஒரு சிறுகதை பல எழுத்தாளர் களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தன. தினபதி சிந்தாமணி இதழில் புகழ்பெற்ற பல பத்திரிகையாளர்கள் பணியாற்றி யிருக்கிறார்கள். கே.ரீ. சிவகுருநாதன், இரத்தினம் என்போர் முக்கியமானவர்கள். என். பத்மசீலன் 18 ஆண்டுகள் உதவி ஆசிரியராக பணியாற்றியிருக்கிறார்.

1973-1974ஆம் ஆண்டு காலப்பகுதியில் தினபதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தை விமர்சித்து எழுதியது. அந்த அரசாங்கம் 19-04-1974இல் எம்.டி.குணசேனாவின் அனைத்துப் பத்திரிகைகளையும் தடைசெய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வருடங்களின்பின் எம்.டி. குணசேன நிறுவனம் தனது பத்திரிகைகளை மீண்டும் ஆரம்பித்தது. ஆனால் தமிழ் பத்திரிகைகள் எதனையும் அது ஆரம்பிக்கவில்லை. 20-12-1990முதல் இந்நிறுவனத்தின் அனைத்துப் பத்திரிகை களும் மீண்டும் நின்று கொண்டன. தினபதியிலிருந்து வெளி யேறியவர்களில் சிலர் 1996ஆம் ஆண்டு 'சூடாமணி' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். அதன் ஆசிரியராக கே.ரி. சிவகுருநாதன் கடமையாற்றினார். ஆனால் அதுவும் தொடர்ந்து வெளிவரவில்லை.

எம்.டி. குணசேன நிறுவனத்தினர் 1967ஆம் ஆண்டுமுதல் "தந்தி" என்ற மாலைத் தினசரியை ஆரம்பித்தனர். வி.கே.பி. நாதன் அதன் ஆசிரியராகக் கடமையாற்றினார். என். பத்மசீலனும் சிலகாலம் இதன் பொறுப்பாசிரியராக இருந்தார். 'தந்தி' அப்பொழுது 5 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. சில மாதங்களின்பின் அதுவும் நின்று கொண்டது. 1972ஆம் ஆண்டு முதல் "சுந்தரி" என்ற மாத இதழையும் வெளியிட்டனர். அதுவும் தொடர்ந்து வெளிவரவில்லை.

## சரிநிகர் (1990 – 2000)

1990ஆம் ஆண்டு முதல் கொழும்பிலிருந்து 'சரிநிகர்' என்ற பத்திரிகை வெளிவந்தது. தமிழில் வெளிவந்த முதலாவது மாற்றுப் பத்திரிகை இதுவாகும். இதன் ஆரம்ப கால ஆசிரியராக எம். சிவகுமார் கடமையாற்றினார். மாத இதழாக வந்து, வார இதழாக மாறியது.

தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் பரிமாணங்களை அது வெளிக்காட்டியது.

10 வருடங்கள் தொடர்ந்து வெளிவந்த இப்பத்திகையின் வரவு பல வழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. 18-02-2001 உடன் நின்றுகொண்டது.



264487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினமுரசு (1993)

1993 முதல் வார இதழாக வெளிவந்த தினமுரசு 2012 முதல் நாளிதழாக வெளிவந்தது. மீண்டும் 2015 முதல் வார இதழாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கியது. இலங்கைத் தமிழ் இதழியல் வரலாற்றில் வார இதழ் ஒன்று ஒரு இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியது என்ற சிறப்பை "தினமுரசு" பெறுகிறது.

காரசாரமான அரசியல் கருத்துக்களை அது வழங்கியது. ஆரம்பத்தில் ந. அற்புதராஜா அதன் ஆசிரியராக கடமையாற்றினார். இரா. பத்மநாதன் அதன் உதவி ஆசிரியர்களுள் ஒருவராக கடமையாற்றினார். பின்பு ஸ்ராலின் பிரதம ஆசிரியரானார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இதனை வெளியிட்டது.

## தினத்தந்தி (1995)

'ஓல் சிலோன் டிஸ்ரிபியூட் டேர்ஸ்' நிறுவனத்தின் அதிபர் ரி. இமானுவேல் 1995 முதல் தினத்தந்தி என்ற வார இதழை ஆரம்பித்தார். தினகரன் பத்திரிகையிலிருந்து ஓய்வுபெற்ற ஆர். சிவகுருநாதன் இதன் ஆசிரியராக பொறுப்பேற்றார். ஒரு வருடத்தின்பின் நின்று கொண்டது.

## நவமணி (1996)

நவமணி வாரமலர் 1996முதல் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியது. அதன் பிரதம ஆசிரியராக எம்.பி.எம். அஸ்ஹர் பணியாற்றினார். அவர் நவமணி மூலம் ஒரு எழுத்துலகையே உருவாக்கினார். அஸ்ஹர் எஸ்.டி. சிவநாயகத்தின் தினபதியில் இணைந்து செய்தி படைக்கும் பயிற்சியைப் பெற்றவர். வீரகேசரியில் பணியாற்றிய பொழுது பாராளுமன்ற பலகணி மூலம் வாசகர்களை கவர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமணியின் பிரசுர உரிமையாளராக றிஸ்வி தஹ்லான் விளங்கினார். நவமணியின் ஆரம்பத்தில் கே.எஸ். சிவகுமாரனும், சிலகாலம் ஆசிரியராக பணியாற்றினார். நவமணி முஸ்லிம் மக்களின் செய்தி களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது எம்.பி.எம். அஸ்ஹரின் மறைவுக்குப்பின் என்.எம். அமீன் ஆசிரியரானார்.

## தினக்குரல் (1997)

'ஆயிரம் மலர்கள் மலரட்டும்' என்ற நல்லெண்ணத் துடன் 'தினக்குரல்' ஆரம்பிக்கப்பட்டது. 1997ஆம் ஆண்டு "வீரகேசரி"யிலிருந்து பிரிந்து சென்ற ஒரு குழுவினரின் கூட்டு முயற்சிதான் "தினக்குரல்" பத்திரிகையாகும். 06-04-1997 அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை பதிப்புடன் தினக்குரல் ஆரம்பமாகியது. அதற்கு அடுத்தநாள் தினக்குரல் நாளாந்தம் வெளிவரத் தொடங்கியது. இலங்கை தமிழ் பேசும் மக்களின் அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒரு தமிழ்ப் பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற நோக்கம் கொண்ட எஸ்.பி. சாமி தினக்குரலை ஆரம்பித்தார்.

தினக்குரல் பத்திரிகை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பொன். ராஜகோபால். இவரை அடுத்து ஆ. சிவநேசச்செல்வன் தினக்குரலின் பிரதம ஆசிரியரானார். வி. தனபாலசிங்கம் செய்தி ஆசிரியரானார். ஞாயிறு தினக்குரலுக்கு பாரதி ராஜநாயகம் பிரதம ஆசிரியரானார். கே.ஆர்.பி. ஹரன், தேவகௌரி, எம். நிலாம், பூ. சீவகன் ஆகியோர் தினக்குரலில் ஆரம்பகால பத்திரிகையாளர்களாவர்.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களையும் அவர்களது நிலைப்பாடுகளையும் தினக்குரல் விபரமாக பிரசுரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி உருவாக்கத்தில் நேர்காணலும் முக்கிய முறையாக அமைகிறது. அதனால் நேர்காணல் உபாயத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துவதில் தினக்குரல் உரிய கவனம் செலுத்தியது. தினக்குரலின் பிரதான அம்சங்களிலொன்று அதன் ஆசிரியத் தலையங்கங்களாகும். மக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை சரியாக வழி நடத்துவதில் ஆசிரியத் தலையங்கங்கள் அமைந்திருந்தன.

இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் பத்திரிகைகளுக்கான விருதுகளை வருடா வருடம் வழங்கியிருக்கிறது. அந்த வகையில் 2008ஆம் ஆண்டு சிறந்த பத்திரிகைக்கான விருது தினக்குரலுக்குக் கிடைத்தது. தற்பொழுது தினக்குரலின் ஞாயிறு இதழின் ஆசிரியராக பாரதி இராஜநாயகம் கடமையாற்றுகிறார். தினக்குரல் நாளிதழின் ஆசிரியராக கே.பி. ஹரனும் செய்தி ஆசிரியராக சிவகணேசனும் கடமையாற்றுகின்றனர்.

தினக்குரல் சில துணைப் பத்திரிகைகளையும் வெளியிட்டு வருகிறது. மலையக மக்களுக்கு உதய சூரியன் என்ற பதிப்பை வெளியிடுகிறது. தமிழ் பேசும் மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் தினக்குரல் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்துள்ளது. "Nothern Star" இதழின் தோற்றமும் பின்னர் "Junior Star" என்ற மாற்றமும் கல்விப் பணியின் சிறந்த நோக்கங்களாகும்.

தினக்குரல் பல்வேறு இலவச இணைப்புகளையும் வழங்கி வருகிறது. நலந்தானா, புதன் வசந்தம், புதிய பண்பாடு, கல்விக் குரல் என்பன அவற்றில் சிலவாகும். ஞாயிறு இதழுடன் சிறுவர்களுக்கான பரிசும், சினிக்குரல், "தினக்குரல் தமிழ் நெற்" என்பனவும் வெளிவருகின்றன.

**"அழகி"** என்ற பெயரில் பெண்களுக்கான மாத இதழையும் தினக்குரல் வழங்கி வருகிறது. அதன் ஆசிரியையாக செல்வி பாரதி பணியாற்றுகிறார். பிரபல சித்திரக் கலைஞர் சந்திராவின் புதல்வியே பாரதி ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல் **சமகாலம்** என்ற மாத இதழையும் வெளியிட்டு வந்தது. சமகால உள்ளூர், வெளிநாட்டு அரசியல் செய்தி விமர்சனங்கள் அதில் இடம்பெற்றன. சமகால அரசியல், சமூக பொருளாதார தகவல்களையும் கட்டுரைகளையும் விவாதங்களையும், தாங்கிய சஞ்சிகையாக வெளிவந்தது. சமகால நிகழ்வுகளை நாட்டின் சிறந்த ஆய்வாளர்கள் மூலமாக கட்டுரையாக வெளியிடுவதோடு சமூக அட்டூழியங்கள் அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகளையும் எடுத்துரைப்பதில் சிறப்பிடம் பெற்றது. இலங்கையில் ஏற்படும் அரசியல் மாற்றங்களை உடனுக்குடனாக எடுத்துரைத்து அவை ஆரோக்கியமானதா இல்லையா என்பதனையும் சமகாலம் சிறப்பாக ஆராய்ந்தது. சிறந்த ஆசிரியர்களின் தனித்துவ சஞ்சிகையாக சமகாலம் வெளிவந்தது.

அதன் ஆசிரியராக வி. தனபாலசிங்கமும் உதவி ஆசிரியராக மதுசூதனனும் பணியாற்றினர். மூன்றரை வருடங்களின் பின்பு நின்றுகொண்டது.

## சுடர்ஒளி (2000)

சுடர்ஒளி வார இதழ் 10-09-2000 முதல் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியது. சோ. இரத்தின சிங்கம் அதன் ஆசிரியராக பணியாற்றினார். 29-10-2001 முதல் அது நாளிதழாக வெளிவரத்தொடங்கியது.

ஆரம்ப ஆசிரியராக என். பத்மசீலனும் தலைமை ஆசிரியராக கே. இரத்தினசிங்கமும் கடமையாற்றினர். 2016 முதல் என். பத்மசீலன் பிரதம ஆசிரியரானார். அவ்விதழ் பல்வேறு தாக்கங்களையும் தடைகளையும் தாண்டி தொடர்ந்து வெளிவருகிறது. சுடர்ஒளி நிறுவனம் 2013 முதல் 'ஒளி அரசி' என்ற இலக்கிய மாத இதழையும் வெளியிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது தூது (2011)

19-07-2011 முதல் கொழும்பிலிருந்து 'நமது தூது' என்ற பெயரில் வாரப் பத்திரிகை ஒன்று வெளிவந்தது.

உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளுடன் கட்டுரைகள் என்பன வெளிவந்தன. பழைய இதழ்களில் வந்த கட்டுரைகள் சிலவற்றையும் மீள்பிரசுரம் செய்தது. கே.விஜயனை ஆசிரியராகக் கொண்ட இவ்விதழ், வெள்ளிக் கிழமைகளில் வெளிவந்தது. "நமது தூது" விரைவில் நாளிதழாக வெளிவரும் என்று விளம்பரம் வந்தது. ஆனால் வார இதழே சில வாரங்களின்பின் நின்று போய்விட்டது.

## தமிழ் மிரர் (2015)

"த ரைம்ஸ்" நிறுவனம் "லங்காதீப" என்ற சிங்களப் பத்திரிகையை வெளியிட்டது. அந்நிறுவனம் 1970முதல் "ஈழமணி" என்ற தமிழ்ப் பத்திரிகையையும் சிலகாலம் வெளியிட்டது.

2000ஆம் ஆண்டு முதல் "விஜய்" என்ற பெயரில் மாணவர்களுக்கான வார சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது.

இந்நிறுவனம் 15-02-2010 முதல் "தமிழ் மிரர்" என்ற பெயரில் இணைய இதழ் ஒன்றையும் ஆரம்பித்தது. இந்த இணைய இதழுக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து அதை அச்சுப் பத்திரிகையாக வெளியிடவேண்டும் என்ற எண்ணத்தில் "டெயிலி மிரர்" ஆங்கிலப் பத்திரிகையுடன் வடகிழக்கிற்கான தமிழ் பத்திரிகையும் வெளியிட்டது. அது 13-02-2013 அன்று வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து 03-03-2014 முதல் டெயிலி மிரர் பத்திரிகையின் இலவச இணைப்பாக நான்கு பக்க தமிழ்ச் செய்திமடல் வெளிவரத் தொடங்கியது. வடகிழக்கினை மையப்படுத்தி டெயிலி மிரருடன் வெளிவந்த "தமிழ் மிரர்" அவ்வாண்டின் பிற்பகுதியில் மலையகத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களுக்கும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் நிலவும் ஊடக இடைவெளியை நிரப்புவதே மிக முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இது இயங்கியது.

அதே வகையில் 20-05-2015 முதல் "தமிழ் மிரர்" அச்சுப் பத்திரிகை தனியாக வெளிவரத் தொடங்கியது.

இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக ஏ.பி. மதன் என்ற இளைஞர் பணியாற்றுகிறார்.

ஒரு இதழின் விலை 10 ரூபாவுக்கு மட்டும் விற்கப்பட்டது. சில அங்கத்தவர்களைக் கொண்டு வீதிகள் தோறும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கொழும்பு உட்பட நாட்டின் பிரதான நகரங்களிலும் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டது.

இப்பத்திரிகையில் ஏ.பி.மதன் எழுதி வெளியிட்ட ஆசிரியத் தலையங்கங்களை ஒன்று சேர்த்து 'தணிக்கை தகர்க்கும் தனிக்கை' என்ற நூலாக 17-03-2017ல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தந்தி

சக்தி தொலைக்காட்சியை இயக்கும் மகாராஜா நிறுவனம் "தமிழ்த்தந்தி" என்ற வார இதழை வெளியிட்டு வருகிறது. எஸ். பிரிந்தன் இதன் ஆசிரியராவார்.

அரசியல் கட்டுரைகள் அதில் அதிகமாக இடம்பெறுகின்றன.

2000ஆம் ஆண்டுமுதல் 'இடி' என்ற வார இதழ் வெளிவந்தது. ஒரு கட்டத்தில் வாரத்துக்கு 23 ஆயிரம் பிரதிகள் பிரசுரமாகின. இரண்டு வருடங்களுள் நின்று கொண்டது. இவற்றில் பல இப்பொழுது வெளிவருவதில்லை.

கொழும்பிலிருந்து தாய்நாடு, சங்கமம், புதியபூமி, ஜனனி போன்ற பத்திரிகைகளும் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# முஸ்லிம் அறிஞர்கள் ஆரம்பித்த பத்திரிகைகள்

## புதினாலங்காரி (1873)

முஸ்லிம் அறிஞர்கள் தமது மதக் கருத்துக்களையும் கலாச்சாரத்தையும் பரப்புவதற்காக பல தமிழ்ப் பத்திரிகைகளை ஆரம்பித்தனர்.

கொழும்பு சோனகத் தெருவிலிருந்து 1873 முதல் புதினாலங்காரி என்ற இதழ் வெளிவரத் தொடங்கியது. நெயினா மரைக்கார் வாப்பு மரைக்கார் இதன் ஆசிரியராவார்.

'ஏனைய சனங்கள் பத்திரிகையால் அடையும் நன்மையை முஸ்லிம்களும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகையே முதலாவது முஸ்லிம் பத்திரிகை என்று கருதப்படுகிறது. அது அரசியல் செய்திகளையும் பொதுவான செய்திகளையும் விமர்சன நோக்கில் வெளியிட்டது.

## முஸ்லிம் நேசன் (1882)

'முஸ்லிம் நேசன்' பத்திரிகையின் முதலாவது இதழ் 21-12-1882 முதல் கண்டியிலிருந்து வெளிவந்தது. அறிஞர் சித்தி லெப்பை அவர்களால் வெளியிடப்பட்ட இப்பத்திரிகை முஸ்லிம்கள் மத்தியில் சமய சமூக வளர்ச்சியை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதல் தமிழ் நாவலான 'அசன் பேபின் சரிதம்', 'முஸ்லிம்நேசன்' பத்திரிகையிலேயே வெளிவந்தது.

திங்கட்கிழமைகளில் 8 பக்கங்களில் வெளிவந்த இப்பத்திரிகை 1884இல் நின்றுகொண்டது. மீண்டுமொரு முறை 1932 முதல் 1935 வரை வெளிவந்தது. இதன் அலுவலகம் கண்டி, கட்டுகஸ்த்தோட்ட வீதி 2ஆம் இலக்கத்தில் அமைந்திருந்தது. முதலாவது இதழின் முதல் பக்கத்தில் 'முஸ்லிம் நேசன்' பத்திரிகை ஆரம்பித்த வரலாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் இரண்டு விளம்பரங் களும் இடம்பெற்றன.

## தினத் தபால் (1929)

இலங்கையில் முதன்முதலில் தனியே செய்திகளுடன் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை "தினத் தபால்" என்று குறிப்பிடலாம். இதன் முதல் இதழ் 03-02-1929 இல் வெளிவந்தது. கா.அ. மீராமொஹைறதீன் அதன் ஆசிரியராவார். தினத்தபால் வெளியாகி ஒரு வருடம் பூர்த்தியானபின் வெளிவந்த இதழில் 03-02-1930 பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "தமிழ் பேசும் மக்களுக்கென தமிழிலேனும் ஆங்கிலத்திலேனும் ஒரு பத்திரிகையாவது ஒழுங்காக ஸ்தாபிக்கப்பட்டு உரமாய் நடக்கவில்லை" என்று ஆசிரியத் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது. "தினத்தபால்" காலையில் ஒரு பதிப்பும் மாலையில் ஒரு பதிப்புமாக வெளிவந்தது. இவ்விதழின் கொழும்பு விலை ஒரு சதம், வெளியூர் விலை இரண்டு சதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரா மொஹைதீன் அவர்கள் தனது வீட்டிலிருந்தவாறே அச்சுக்கோர்த்து நகல் எடுத்து ஒப்பு நோக்கிச் சீர்செய்வார். அதன் பின்பு செட்டியார் தெருவிலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார். 1981ஆம் ஆண்டு நின்று கொண்ட இவ்விதழ் பின்பு சிலகாலம் வெளிவந்தது. பின்பு முற்றுமுழுதாகவே நின்றுவிட்டது. தினத்தபாலின் உரிமையாளரும் ஆசிரியருமான மீரா மொஹைதீன், நடேசையர் ஆரம்பித்த "தேசபக்தன்" பத்திரிகையில் சிலகாலம் ஆசிரியராக பணியாற்றியவர். "தினத்தபால்" இதழியல் துறைக்கு புதிய வழியைக் காட்டியது எனலாம்.

அது இலங்கை இந்திய அரசியல் செய்திகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தது. கொழும்பிலிருந்து வெளிவந்த "தினத்தபால்" அதே ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரி ஏற்படுத்தியதைப் போன்ற வளர்ச்சியை முஸ்லிம் இதழியல் துறையில் ஏற்படுத்தியது.

1950ஆம் ஆண்டு வரை முஸ்லிம் அறிஞர்களினால் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் பின்வருமாறு,

1. 1869 அலாமத் இலங்காபுரி
   (சல்தீன் / துவான் பாபா யூனுஸ்)
2. 1873 புதினாலங்காரி (வாப்பு மரைக்கார்)
3. 1882 முஸ்லிம் நேசன் (சித்தி லெப்பை)
4. 1886 சர்வசன நேசன் (முஹைதீன்)
5. 1890 சைபுல் இஸ்லாம் (அப்துல் ரஹ்மான்)
6. 1895 ஞானதீபம் (சித்தி லெப்பை)
7. 1895 இஸ்லாம் மித்திரன் (எம்.எல். உதுமான்)
8. 1900 Ceylon Muhammaden



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 9. | 1901 | முஸ்லிம் பாதுகாவலன் (ஐ.எல்.எம். அப்துல் அசீஸ்) |
| 10. | 1906 | மிஸ் பாஹுல் இஸ்லாம் (முஹம்மது காசில் ஆலீம்) |
| 11. | 1914 | இலங்கை முஸ்லிம் (கே.கே. ஹமித்) |
| 12. | 1919 | ஹிதாயதுல் இஸ்லாம் (மௌலானா செய்யது ஹுசைன்) |
| 13. | 1920 | சம்சுல் இஸ்லாம் (முஹம்மது யூசுப்) |
| 14. | 1920 | தூதன் (ஏ.எம்.ரீ.கே.லை) |
| 15. | 1920 | லங்கா மித்திரன் (என்.எம்.அஹமத் லெப்பை) |
| 16. | 1930 | தினத்தபால் (மீரா மொஹிதீன்) |
| 17. | 1935 | Ceylon Moor |
| 18. | 1939 | ஞானக்கடல் (அன்பர் பூபதிதாசர்) |
| 19. | 1940 | அல் இஸ்லாம் |
| 20. | 1945 | அல் இல்ம் (மௌலவி அப்துல் றசாக் ஜமாலி) |
| 21. | 1946 | இஸ்லாமிய தாமரை (கே.எம்.எம். சாலிஹ்) |
| 22. | 1948 | தோழன் (எஸ்.எம்.எம். மொஹ்தீன்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

# பிராந்தியப் பத்திரிகைகள்

இலங்கையின் தலைநகரான கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளைத் தவிர வேறு நகரங்களிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளை பிராந்தியப் பத்திரிகைகள் என்று குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, உதயன், ஈழநாதம், முரசொலி, வலம்புரி, யாழ்தினக்குரல், நமது ஈழநாடு, காலைக்கதிர், எதிரொலி போன்றவை பிராந்திய பத்திரிகைகளாகும். கண்டியிலிருந்து வெளிவந்த 'செய்தி' என்ற பத்திரிகையும் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'தினக்கதிர்' பத்திரிகையும் வவுனியாவிலிருந்து வெளிவந்த 'தினப்புயல்'. பத்திரிகையும் பிராந்தியப் பத்திரிகைகளுள் அடங்கும்.

## ஈழகேசரி (1930 – 1938)

20ஆம் நூற்றாண்டின் மூன்றாம் சகாப்தம் இலங்கை பத்திரிகைத் துறையின் திருப்புமுனையான காலகட்டமாகும். இக்காலத்திலேயே சமயப் போதனைகளை முன்னிலைப் படுத்தியதை நிறுத்தி பொதுவான செய்திகளை வெளியிடும் நோக்கில் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து முதலில் வெளிவந்த பிராந்தியப் பத்திரிகை "ஈழகேசரி" ஆகும். இலக்கிய வளர்ச்சியுடன் தன்னை இரண்டப் பிணைத்துக் கொண்ட இப்பத்திரிகையை நா. பொன்னையா ஆரம்பித்து வைத்தார்.

ஈழகேசரியின் முதலாவது இதழ் 22-04-1930இல் வெளிவந்தது. முதலாவது இதழின் ஆசிரியத் தலையங்கத்தில் பொன்னையா பின்வருமாறு எழுதினார். "நமது நாடு அடிமைப் படுகுளியில் ஆழ்ந்து மொழி வளங்குன்றி சமயமிழந்து சாதிக் கோட்பாட்டு சன்மார்க்க நெறியிழந்த மக்களாய் உண்டுறங்கி வாழ்தலே கண்டகாட்சியென கொண்டாடும் இக்காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினாலும் மிகையாகாது" என்று எழுதினார்.

பொன்னையாவுக்குப்பின் ஈழகேசரியின் ஆசிரியராக குமாரசாமிப் புலவரின் மகன் கு. அம்பலவாணர் நியமிக்கப் பட்டார். அவர் ஆசிரியத் தலையங்கங்களையும் வெளிநாட்டுச் செய்திகளையும் சுவைபட எழுதினார். தமிழ் நாட்டிலும் தாய்நாட்டிலும் வாழ்ந்த சமகால அறிஞர்களை அறிமுகப்படுத்தி எழுதினார். 1944ஆம் ஆண்டு ஈழகேசரியின் ஆசிரியராக இராஜ அரியரெட்னம் நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள புகழ்பெற்ற ஊர்களுக்குச் சென்று பயணக் கட்டுரைகளை எழுதினார். அ.செ.முருகானந்தம் ஆசிரியரான போது பத்திரிகை மேலும் மெருகேறியது. சோ. சிவபாதசுந்தரம் ஆசிரியராக வந்தபோது ஈழகேசரியை இலக்கியப் பத்திரிகையாக மாற்றினார். ஈழத்தின் சிறுகதை முன்னோடிகளான இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், சம்பந்தன் போன்றோரின் சிறுகதைகள் ஈழகேசரியில் பிரசுரமாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமூக அரசியல் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் அரசியல் மயப்பட்டிருந்த காலத்திலேயே ஈழகேசரி தொடங்கப்பட்டது. 1841இல் யாழ்ப்பாணப் பத்திரிகைத்துறை வரலாற்றில் 90 ஆண்டுகள் கழிந்தபின் முதலாவது மதச்சார்பற்ற பத்திரிகையாக ஈழகேசரி வெளிவரத் தொடங்கியது" என்று பேராசிரியர். கா. சிவத்தம்பி குறிப்பிட்டிருக்கிறார்.

1951ஆம் ஆண்டு பொன்னையா இறக்கும்வரை ஈழகேசரி 20 வருடங்களாக சிறப்புடன் வெளிவந்தது. அவரது மறைவிற்குப் பின்பும் அவ்விதழ் 7 வருடங்கள் தொடர்ந்து வெளிவந்தது. ஈழகேசரி தொடர்ந்து 28 ஆண்டுகள் வெளிவந்த பின்பு 04-06-1958இல் நின்றுகொண்டது. ஈழகேசரியின் வெள்ளிவிழா மலர் 1956இல் வெளிவந்தது. ஈழகேசரியின் 28 ஆண்டு கால சேவை ஈழத்தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பிரதான கூறாக அமைந்துள்ளது.

நா. பொன்னையா ஈழகேசரி தமிழ்ப் பத்திரிகையுடன் 'Kesary' என்ற ஆங்கிலப் பத்திரிகையும் 7 வருடங்களாக தொடர்ந்து நடத்தினார். அப்பத்திரிகையின் ஆசிரியராக ஹன்டி பேரின்பநாயகம் பணியாற்றினார்.

### ஈழநாடு (1959 – 1990)

இலங்கையில் கொழும்பு நகரை அடுத்ததாக அதிக தமிழ் பத்திரிகைகள் வந்த இடம் யாழ்ப்பாணமாகும். ஈழத்தின் முதல் தமிழ் வார இதழான உதய தாரகையும் பின்னர் ஈழகேசரியும் செழித்து வளர்ந்த யாழ்ப்பாணத்தில் 11-02-1959 முதல் 'ஈழநாடு வார இதழ்' வெளிவரத் தொடங்கியது.

கிழக்கிழங்கையின் கடதாசித் தொழிற்சாலையின் தலைவராக இருந்த கே.சி. தங்கராசா மற்றும் அவரது சகோதரர் கே.சி. சண்முகரத்தினம் ஆகியோரால் அப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் குடாநாட்டு மக்களின் அரசியல் சமூக பொருளாதார கலாசார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஈழநாடு ஆரம்பிக்கப்பட்டது. 1960 முதல், வாரம் இருமுறையாக வெளிவந்த ஈழநாடு 1961 முதல் நாளேடாக வெளிவரத் தொடங்கியது. கொழும்புக்கு வெளியிலிருந்து வெளிவந்த ஒரேயொரு தேசிய பத்திரிகையாக “ஈழநாடு” பெருமைபெற்றது.

ஈழநாடு பத்திரிகையில் புகழ்பெற்று பத்திரிகை யாளர்கள் பலர் பணியாற்றியிருக்கின்றனர். ஆரம்பத்தில் இராஜ அரியரத்தினம் ஆசிரியராக பணியாற்றினார். அதன்பின்பு கே.பி. ஹரன், எஸ்.எம். கோபாலரெத்தினம், டி.எம்.முருகையா, கே. கணேசலிங்கன், ஏ.ஈ. தம்பர் போன்றோரும் ஆசிரியர்களாக பணியாற்றினர். ஆரம்பத்தில் ஆசிரியர் பகுதியில் கடமையாற்றிய எழுத்தாளர்களான அ.செ. முருகானந்தம், வி.என். பாலசுப்பிரமணியம் ஆகியோரும் முக்கியமானவர்கள். “ஈழநாடு” வாரமலர் ஆசிரியப் பொறுப்பை எஸ். சபாரெத்தினம் (சசி பாரதி) ஏற்றுக் கொண்டார். நிர்வாக ஆசிரியராக என். சபாரெத்தினமும் பதில் ஆசிரியராக பி.எஸ். பெருமாளும் செய்தி ஆசிரியராக கே.ஜி. மகாதேவாவும் பணியாற்றினர். கே.பி. ஹரன் ஈழநாடு ஆசிரியராக இருந்த பொழுது அருமையான ஆசிரியத் தலையங்கங்களை எழுதினார்.

1961இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக போராட்டத்தின் போது “ஈழநாடு” ஒரே நாளில் பல பதிப்புகளை வெளியிட்டது.

சுதந்திரன் பத்திரிகைக்குப் பின் தமிழ்பேசும் மக்களின் இதயக் குமுறல்களை வெளிக்கொணரும் பத்திரிகையாக ‘ஈழநாடு’ விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ஆம் ஆண்டு வஞ்சகர்களால் யாழ்ப்பாண நூலாகமும் பூபாலசிங்கம் புத்தகசாலையும் எரிக்கப்பட்டன. அப்பொழுது ஈழநாடு காரியாலயமும் எரிக்கப்பட்டது. அதன் பின்பும் ஈழநாடு தொடர்ந்து பல்வேறு தாக்கங்களுக்கு இலக்கானது. 1987இல் இந்தியப் படையினரால் தாக்கப்பட்டது. 1988இல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்த பொழுது "ஈழநாடு" பத்திரிகையும் சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்தது. அடுத்து முருகண்டிக்கும் பின்பு புதுக்குடியிருப்புக்கும் இடம்பெயர்ந்தது. ஆனாலும் சில வருடங்களே அதனால் தாக்குபிடிக்க முடிந்தது. இத்தனை சிறப்புமிக்க ஈழநாடு 30வது வயதில் தனது இறுதி மூச்சை விட்டது.

ஈழநாடு பத்திரிகையின் 25ஆம் ஆண்டு நிறைவு மலர் 11-02-1984இல் வெளிவந்தது. பத்திரிகையின் வரலாறு ஆசிரியர்களின் அனுபவக் கட்டுரைகள் என்று பல்வேறு ஆக்கங்கள் அதில் இடம்பெற்றன.

பின்னாளில் பிரபல பத்திரிகையாளர்களாக உயர்ந்த பலர் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றி யிருக்கின்றனர். அவர்களில் பலர் புதிய பத்திரிகைகளையும் தோற்றுவித்திருக்கின்றனர். பார்வதி நாதசிவம், எஸ். திருச்செல்வம் (தமிழர் தகவல் - கனடா) எம்.வி. கானமயில்நாதன் (உதயன்), மகாலிங்கசிவம் (நாழிகை - லண்டன்) ஆனந்த பாலகிருஷ்ணன், (சிலோன் டுடே), ஈ.கே. ராஜகோபால் (புதினம் லண்டன்) எஸ்.எஸ். குகநாதன் (டான் ரி.வி) கந்தசாமி (லண்டன் தீபம்), வீ. பிரபாகன் (வீரகேசரி), சிவகணேசன் (தினக்குரல்), ஐயா சச்சிதானந்தம் (யாழ். தினக்குரல்) செந்தில்நாதன் (அவுஸ்திரேலியா). கே. நாகேஸ்வரன் (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்), துரைசிங்கம், கே. கணேசலிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.காசிலிங்கம், பண்டிதர் பூரணம், கவிஞர் நாகராசா, எம். மனோகரன், எஸ். ஜெகதீசன், ஏ.ரி. மாணிக்கம், பொன். பாலசுந்தரம், க. யோகநாதன், கே. குணமணி, என். நிர்மலா, பிரகேதீஸ்வரா, ஆ. ராசலிங்கம் போன்றோரும் ஈழநாடு என்ற ஆலமரத்தை தாங்கி வளர்த்த விழுதுகளாகும். “ஈழநாடு” பத்திரிகையில் செய்திப் பிரிவில் பணியாற்றிய வர்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

கே. கிருஷ்ணராஜா, ஆர். சுந்தரராஜசர்மா, ஆர். ஞான சுந்தரம், ஏ.என்.எஸ். திருச்செல்வம், எஸ். தில்லைநாதன், சி. பாலசிங்கம், கே. திருலோகமூர்த்தி, அ. கனகசூரியர், எஸ். தர்மசிங்கம் போன்றோரே அவர்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப் பணியாற்றிய ஈழநாடு பத்திரிகை மறைந்துவிட்டாலும் அதன் பெயர் மறையாமல் ஈழநாடு வெளிநாடுகளில் வெளிவந்து கொண்டிருக்கிறது. இலங்கையின் தேசிய ரீதியில் முதலில் வெளிவந்த மாகாண தினசரியான “ஈழநாடு” பத்திரிகையின் பெயரும் புகழும் இதழியல் வரலாற்றில் என்றும் ஜொலித்துக் கொண்டே இருக்கும்.

## சற்றடே ரிவ்யூ (1983)

*1983*ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. இக்காலத்திலேயே Saturday Review ஆங்கிலப் பத்திரிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கியது.

எஸ். சிவநாயம் என்ற தமிழரும் காமினி நவரட்ண என்ற சிங்களவரும் இப்பத்திரிகையின் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். ஏ.ஜே. கனகரட்ணம் உதவியாசிரியராக பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தால் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளையெல்லாம் கண்டித்து எழுதியது. தமிழ் போராளிக் குழுக்கள் தங்களுக்கிடையில் மோதிக் கொண்டபோது அதைப் பார்த்து மனம் வருந்திய காமினி நவரட்ண பல கட்டுரைகளை எழுதினார். 02-07-1989இல் இப்பத்திரிகையின் காரியாலயம் அரசாங்கத்தால் சீல்வைத்து மூடப்பட்டது.

**ஈழமுரசு (1984)**

1984இல் தமிழ் தேசிய உணர்வு கலந்த விடயங்கள், கொழும்பிலிருந்து வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவர முடியாத நிலை ஏற்பட்டது. அந்த இறுக்க நிலை வடபகுதியில் பல பத்திரிகைகள் உருவாக வழிவகுத்தது. "ஈழநாடு" பத்திரிகையை அடுத்து யாழ்ப்பாணத்தின் இரண்டாவது பிராந்திய பத்திரிகையாக "ஈழமுரசு" 1984ஆம் ஆண்டுமுதல் வெளிவரத் தொடங்கியது.

'சாயிபாபா அட்வட்டைசிங்' நிறுவனத்தின் அதிபர் அமிர்தலிங்கம் இப்பத்திரிகையை ஆரம்பித்தார். எஸ். திருச்செல்வம் இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

பத்திரிகை தொடங்கிய ஒரு வருடத்திற்குள் உரிமையாளருக்கும் ஆசிரியருக்குமிடையில் முரண்பாடுகள் தொடங்கின. எஸ். திருச்செல்வம் ஆசிரியப் பதவியிலிருந்து விலகவே அவ்விடத்திற்கு எஸ். எம். கோபாலரெத்தினம் நியமிக்கப்பட்டார். சில மாதங்களின்பின்பு "ஈழமுரசு" பத்திரிகையின் காப்புரிமையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வாங்கிக் கொண்டனர். 09-10-1984இல் இந்திய படையினர் "ஈழமுரசு" பத்திரிகையின் அலுவலகத்தின்மீது குண்டு வீசி தாக்கினர். பத்திரிகை அதன்பின்பு வெளிவரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன் (1985)**

யாழ்ப்பாணத்தின் மூன்றாவது தமிழ் தினசரியான "உதயன்" 27-11-1985 முதல் வெளிவரத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தின் முதலாவது அகலத் தாள் (Broad Sheet) பத்திரிகை இதுவே ஆகும். 'உதய வேளையில் உங்களுடன்' என்ற தலையங்கத்தில் இதழின் நோக்கம் வெளியிடப்பட்டது. "உங்கள் கைகளில் தவழ்பவன் உதயன். இன்று காலை உதித்தவன். புதினம் சொல்லவரும் அவன் உங்கள் அனைவருக்கும் புதியவன் ஆயினும் உங்கள்பால் அன்பு கொண்டவன். தமிழ் மக்களாகிய உங்களுக்கு பணி செய்வதற்கென்றே யாழ்ப்பாணத்தில் உதித்தவன். உங்கள் வாழ்வும் இன்பமும்தான் அவனது நீண்ட நெடுநோக்கமும் இலட்சியமுமாகும்" என்று ஆசியத் தலையங்கம் அமைந்தது.

"உண்மை அஞ்சாமை நடுநிலமை" என்ற வார்த்தை களுடன் இளைய தலைமுறையினர் இதயம் கவரும் இன்றைய நாளிதழ் என்ற அடிக் குறிப்புடன் உதயன் வெளிவரத் தொடங்கியது. உதயனின் வார இதழான 'சஞ்சீவி' 25-01-1986 முதல் வெளிவரத் தொடங்கியது.

சனிக்கிழமைகளில் வெளிவந்த 'சஞ்சீவி'யின் ஆரம்ப விலை 02 ரூபாவாகும். உதயனின் விலை ஒரு ரூபாவாகும். யாழ்ப்பாணம் "சப்றா உமா ஏற்றுமதி" நிறுவனத்தின் சார்பில் உதயன் வெளிவந்தது. இந்நிறுவனத்தின் தலைவராக எஸ். சுப்பிரமணியமும் இயக்குனராக எஸ். சரவணபவனும் பொது முகாமையாளராக சி.கா. சிற்றம்பலமும் கடமை யாற்றினர். எம்.பி. கானமயில்நாதன் பிரதம ஆசிரியராக பணியாற்றினார். என். பத்மசீலன் 15 ஆண்டுகள் செய்தி ஆசிரியராக கடமையாற்றியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக 31-10-1995 முதல் 13-11-1995 வரை உதயன் வெளிவரவில்லை. சிலகாலம் தென்மராட்சியிலிருந்து வெளிவந்தது. 20-04-1996 முதல் 09-07-1996 வரை மீண்டும் தடைப்பட்டது. மீண்டும் யாழ்ப்பாணத்தில் 10-07-1996 முதல் வெளிவரத் தொடங்கியது. பல நாட்கள் வெளிவராமலிருந்த 'சஞ்சீவி' வார மலர் 07-06-1997 முதல் வெளிவரத் தொடங்கியது. 20-12-1999 முதல் உதயன் கணனி அச்சுப் பதிவில் வெளிவரத் தொடங்கியது. ஒரு செய்தியைக் காரணம் காட்டி பாதுகாப்புப் படையினர் 20-05-2000 முதல் 03-07-2000 வரை உதயன் அலுவலகத்தை மூடி சீல் வைத்தனர்.

01-01-2004 முதல் "சூரியகாந்தி" என்ற இணைப்பு இதழ் ஞாயிறு உதயன் பத்திரிகையுடன் வெளிவரத் தொடங்கியது. "உதயன்" காரியாலயம் தொடர்ச்சியாக பல தாக்குதல் களையும் பெரும் இழப்புகளையும் சந்தித்தது. ஆனாலும் எதுவித தளர்ச்சியுமின்றி இப்பொழுதும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அது 2008ம் ஆண்டு சிறந்த பத்திரிகைக்கான பரிசையும் பெற்றது. யாழ்ப்பாணத்தில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகையாகவும் அது வளர்ந்துள்ளது.

## முரசொலி (1986 – 1992)

யாழ்ப்பாணத்தின் நான்காவது பிராந்திய தமிழ் இதழாக "முரசொலி" 1986ஆம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங்கியது. "தேசிய தமிழ்த் தினசரி" என்ற மகுட வாசகத்துடன் அது வெளிவரத் தொடங்கியது. சிவராஜா ஆரம்பித்த இப்பத்திரிகையின் ஆசிரியராக எஸ். திருச்செல்வம் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 பக்கங்களுடன் வெளிவந்த இப்பத்திரிகையின் ஆரம்பவிலை 2 ரூபா 50 சதமாகும். "முரசொலி" புலனாய்வுச் செய்திகளுக்கு முதலிடம் கொடுத்தது. முரசொலி பத்திரிகையின் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் தேடப்பட்டபோது இடையில் அகப்பட்ட அவரது மகன் அகிலன் சுட்டுக் கொல்லப்பட்டார். "முரசொலி" காரியாலயம் 09-10-1989இல் இந்திய ராணுவத்தால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு முரசொலி தனது இறுதி மூச்சைவிட்டது.

## திசை (1989 – 1990)

'சற்றடே றிவூ'வின் சகோதரப் பத்திரிகைதான் 'திசை' என்னும் வார ஏடு, யாழ்ப்பாணத்திலிருந்து 1989ஆம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங்கியது.

இதன் ஆசிரியராக மு. பொன்னம்பலமும் உதவி ஆசிரியராக அ. யேசுராசாவும் பணியாற்றினர். திசையில் அரசியல் கட்டுரைகளுடன் இலக்கிய ஆக்கங்களும் வெளிவந்தன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உரிமை மீறல்களை சற்றடே றிவ்யூ ஆவணப் படுத்தியதுபோல் திசையும் ஆவணப் படுத்தியது. திசை இரண்டு வருடங்கள் மட்டுமே வெளிவந்தது.

## ஈழ நாதம் (1990 – 2009)

19-10-1990 முதல் 'மக்கள் தினசரி' என்ற மகுடத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து 'ஈழநாதம்' வெளிவரத் தொடங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இப்பத்திரிகை யாழ் பதிப்பு, வன்னிப் பதிப்பு, மட்டக்களப்பு பதிப்பு என மூன்று பதிப்புகள் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1995* குடா நாட்டில் இடம்பெற்ற இடப்பெயர்வுடன் வன்னிப் பதிப்புடன் தன்னை இணைத்துக் கொண்டது. *2002* முதல் 'வெள்ளி நாதம்' என்ற வார இதழையும் வெளியிட்டது.

நாளிதழின் ஆசிரியராக ஜெயராஜும் 'வெள்ளி நாத'த்தின் ஆசிரியராக எஸ. ராத்தேயனும் பின்னர் ஸ்ரீ இந்திராகுமாரும் பணியாற்றினர். எஸ். இளங்கோ, பெ. முருகவேல், பூலோகசிங்கம் ஆகியோர் இவ்விதழை வெளியிட்டனர். *10-05-2004*இல் இப்பத்திரிகை அலுவலகம் பாரிய தாக்குதலுக்கு உள்ளானது. மக்கள் இடம் பெயர்ந்ததைப் போலவே இப்பத்திரிகையின் அலுவலகமும் சாவகச்சேரி, கிளிநொச்சி, வன்னி என இடம்பெயர்ந்தது.

*2009*இல் இடம்பெற்ற போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலோடு நின்று கொண்டது. அங்கு பணியாற்றிய பல பத்திரிகையாளர்கள் அப்பொழுது கொல்லப்பட்டனர்.

## வலம்புரி (1999)

யாழ்ப்பாண மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை வெளியிட முடிவு செய்தது. அவர்கள் ஆரம்பித்த 'வலம்புரி' நாளிதழ் *20-12-1999* முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கியது. கே.சி. வேலாயுதம்பிள்ளையை ஆசிரியராக கொண்டு வெளிவந்த இப்பத்திரிகையின் பக்க எண்ணிக்கை நான்கு ஆகும். பின்பு பக்கங்கள் அதிகரிக்கப்பட்டன. நல்லையா விஜயரெத்தினத்தை ஆசிரியராகக் கொண்டு "சங்குநாதம்" என்ற வார இதழையும் வெளியிட்டது. "சங்குநாதம்" இரண்டு இதழ்களுடன் நின்று கொண்டது. நடுநிலையான செய்திகளை வெளிபடும் வலம்புரி தொடர்ந்து வெளிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

## நமது ஈழநாடு (2002 – 2007)

ச. சிவமகாராஜா யாழ்ப்பாணத்திலிருந்து 01-10-2002 முதல் 'நமது ஈழநாடு' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். பொன்னுத்துரை குருதேவ் இப்பத்திரிகையை வெளியிட்டார். 'தமிழர் தாயகத்தின் முன்னோடி இதழ்' என்ற மகுட வாசகத்துடன் வெளிவரத் தொடங்கியது. 12 பக்கங்களைக் கொண்ட இப்பத்திரிகையின் ஆரம்ப விலை 7 ரூபாவாகும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிறப்புப் பகுதி வெளிவந்தது. முதலில் சி. ரகுராம் பிரதம ஆசிரியரானார். பின்பு எஸ். ராத்தேயன் பிரதம ஆசிரியரானார். 2006 முதல் வார இதழையும் வெளியிட்டது. நிர்வாக இயக்குனர் சி. சிவமகாராஜா 2007 இல் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மரணத்தின்பின் "நமது ஈழநாடு" வெளிவரவில்லை.

## யாழ். தினக்குரல் (2002)

கொழும்பிலிருந்து வெளிவந்த தினக்குரலின் பிராந்தியப் பத்திரிகையாக 15-03-2002 முதல் 'யாழ். தினக்குரல்' வெளிவரத் தொடங்கியது. எஸ். நடராஜா இப்பத்திரிகையின் முகாமையாளராக கடமையாற்றினார். ஐயா. சச்சிதானந்தன் அவர்களே யாழ். தினக்குரலின் உருவாக்கத்துக்கு பிரதான காரண கர்த்தாவாவார். அவர் இப்பத்திரிகையின் பொறுப்பாசிரியராக ஒன்றரை வருடங்கள் கடமையாற்றினார். யாழ். தினக்குரல் இப்போது தொடர்ந்து வெளிவருகிறது.

## யாழ் ஓசை (2010)

வடபகுதி வாசகர்களை மையமாக வைத்து வீரகேசரி நிறுவனம் கொழும்பிலிருந்து "யாழ் ஓசை" என்ற வார இதழை வெளியிட்டது. 05-11-2010 முதல் வெளிவந்த இவ்விதழின் விலை 15 ரூபாவாகும். ஒரு வருடத்தின் பின் இவ்விதழ் நின்று கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991 முதல் கொழும்பிலிருந்து வார இதழாக வெளிவந்த 'தினமுரசு' 2011 முதல் யாழ்ப்பாணத்தில் நாளிதழாக வெளிவரத் தொடங்கியது. 2015இல் நிறுத்தப்பட்டது.

2016இல் காலைக்கதிர் நாளிதழ் தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் முதலாவது மாலைத் தினசரியான 'எதிரொலி' 2017இல் வெளிவரத் தொடங்கியது. புதுவிதி 'தீபம்' ஆகிய வார இதழ்களும் மாத இதழ்களும் வெளிவரத் தொடங்கின.

## செய்தி (1963 – 1974)

பிராந்தியப் பத்திரிகை என்ற வகையில் மலையகத் திலிருந்து வெளிவந்த முதலாவது செய்திப் பத்திரிகை "செய்தி" ஆகும். 1961இல் யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' தினசரி ஆரம்பிக்கப்பட்டதும் அதன் மலையக விற்பனைப் பிரதிநிதியாக ரா.மு. இராமலிங்கம் செயற்பட்டார். அந்த அனுபவமே அவருக்கு "செய்தி" இதழை வெளியிட வழிகாட்டியது. 1962இல் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கிய செய்திக்கு பெரி. சுந்தரலிங்கம் ஆசிரியராக பணியாற்றினார். கு. இராமச்சந்திரன் உதவியாசிரியராக பணியாற்றினார். "செய்தி" வார இதழ் 1963முதல் கண்டியிலிருந்து வெளிவரத் தொடங்கியது. 1967இல் செய்தியின் ஆசிரியராக கே.வி. மகாதேவா ஆசிரியரான போது அது வாரத்துக்கு இரண்டாக வெளிவந்தது.

ஆரம்ப காலத்தில் மலையக் படைப்பாளிகளின் ஆக்கங்கள் அதிகமாக வெளிவந்தன. அந்தனி ஜீவாவின் ஆரம்பகாலப் படைப்புக்கள் அதிகம் இடம்பெற்றன. தமிழகச் செய்திகளை நாராயண துரைக்கண்ணு எழுதி அனுப்புவார். ஈ.கே. ராஜகோபால் (தற்பொழுது லண்டன் - புதினம் ஆசிரியர்) 'செய்தி'யின் யாழ்ப்பாண நிருபராக கடமையாற்றினார். 10 ஆண்டுகள் வரை வார இதழாக வெளிவந்த "செய்தி"யை இராமலிங்கம் நாளிதழாக மாற்ற பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார். அது முடியவில்லை. 1974இல் "செய்தி" நின்று கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினக்கதிர் (2000 – 2002)

பிராந்தியப் பத்திரிகை என்ற வகையில் கிழக்கு இலங்கையிலிருந்து வெளிவந்த முதலாவது தமிழ்ப் பத்திரிகை "தினக்கதிர்" ஆகும். அது 14-04-2000 முதல் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்தது. பத்திரிகைத் துறையில் நீண்ட காலம் அனுபவம் கொண்ட எஸ்.எம். கோபால ரெத்தினம் அதன் ஆசிரியராவார். அவர் எழுதிய ஆசிரியத் தலையங்கங்கள் வாசகர்களைக் கவர்ந்தன.

அமரர்களான ஜி.நடேசன், டி. சிவராம் போன்றோரின் கட்டுரைகள் இப்பத்திரிகையில் இடம்பெற்றன. கிழக்கு மாகாணத்தில் நிலவிய ஸ்திரமற்ற தன்மை இப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு தடையாக அமைந்தது. இரண்டு வருடகாலம் தொடர்ந்து வெளிவந்த இப்பத்திரிகை 2002ஆம் ஆண்டுடன் நின்று கொண்டது.

## தினப்புயல் (2012)

பிராந்தியப் பத்திரிகை என்ற வகையில் 05-09-2012 முதல் வவுனியாவிலிருந்து வெளிவந்த 'தினப்புயல்' பத்திரிகையையும் சேர்த்துக் கொள்ளலாம். பல்சுவை இதழான தினப்புயலில் 'இரணியன்' என்ற புனை பெயரில் எழுதிவரும் சக்திவேற்பிள்ளை பிரகாஷ் ஆசிரியராகப் பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

# இலங்கையில் ஆங்கிலப் பத்திரிகைகள்

இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை 1796ஆம் ஆண்டு பிரித்தானியர் கைப்பற்றினர். 1802ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசம் பிரித்தானிய அரசின் ஆட்சியில் கீழ் கொண்டு வரப்பட்டது. அதே ஆண்டுதான் இலங்கையின் முதலாவது பத்திரிகையான இலங்கை அரசாங்க வர்த்தமானியும் ஆங்கில மொழியில் ஆரம்பிக்கப்பட்டது. அது அரசின் உத்தியோகப்பூர்வ பத்திரிகையாக இன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் ஒரே ஏடாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இது 'கெசட்' என்றும் அழைக்கப்பட்டது.

'தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் இந்த அரசாங்க வர்த்தமானிதான் உலகின் முதலாவது தமிழ் இதழ்' என '19ஆம் நூற்றாண்டின் தமிழ் இதழ்கள்' என்ற நூலில் அ.ம.சாமி குறிப்பிட்டிருக்கிறார். ஆரம்ப காலத்தில் இப்பத்திரிகையில் இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், இரங்கலுரைகள் போன்றவையும் இடம்பெற்றன. ஆனால் அது இப்பொழுது அரசாங்க விளம்பரங்களையும் தகவல்களையும் மட்டுமே தாங்கி வெளிவருகிறது. அரசாங்க வேலைவாய்ப்பு விளம்பரங்கள் எல்லாம் இப்பத்திரிகையிலேயே வெளிவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு வர்த்தமானி பத்திரிகைகள் பொது மக்கள் வாசித்து அறியும் பொருட்டு சகல அஞ்சல் அலுவலகங்களுக்கும் இலவசமாக அனுப்பி வைக்கப்பட்டன.

அண்மையில் இந்நடைமுறை நிறுத்தப்பட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் லேக்ஹவுஸ் நிறுவனத்தி லிருந்து வெளியிடப்படும் பிரதான பத்திரிகைகளின் அனுபந்தமாக வெளியிடப்பட்டு வருகிறது.

இலங்கையின் இரண்டாவது ஆங்கிலப் பத்திரிகையான 'கொழும்பு ஜேர்னல்' 1832இல் ஆரம்பிக்கப் பட்டது. அரசாங்க அச்சகத்தின் மேலதிகாரியால் அச்சடித்து வெளியிடப்பட்டது. 'கவர்னர் சேர் ரொபேர்ட் வில்மற் நேட்டன்' அதற்கு ஆதரவு வழங்கியதுடன் பல கட்டுரை களையும் எழுதிவந்தார். பத்திரிகைகள் தனியார் துறையினரால் வெளியிடப்பட வேண்டும் என்று பிரித்தானிய அரசு கருதியது. அதனால் பிரித்தானிய உள்நாட்டு அமைச்சரின் உத்தரவின்பேரில் 'கொழும்பு ஜேர்னல்' 1833ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இலங்கை நாட்டிற்கு பத்திரிகை ஒன்று தேவை என்பதை 'கொழும்பு ஜேர்னல்' நிரூபித்துக்காட்டியது. எனவே அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கொழும்பில் வாழ்ந்த பிரித்தானிய வர்த்தகர்கள் சிலர் இலங்கையின் முதலாவது சுதந்திரப் பத்திரிகையான 'சிலோன் ஒப்சோவர் அன்ட் கொமர்சல் அட்வெட்ன்ட்சர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். அது 1834ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி முதல் வெளிவரத் தொடங்கியது. த ஒப்சோவர் என்ற பெயரில் அது இன்றும் வெளிவருகிறது. ஆசியாவின் மிகப் பழைய பத்திரிகைகளில் இதுவும் ஒன்றாகும்.

ஒப்சோவர் பத்திரிகை பிரித்தானிய வர்த்தகர்களினால் நடத்தப்பட்டமையால் அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் பிரதிபலித்து வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர்களின் நலன்களையும் அது பிரதிபலிக்கத் தவறவில்லை. டாக்டர் கிறிஸ்தோபர் எலியட் ஆசிரியராக இருந்த காலத்தில் (1833 - 1859) ஒப்சோவர் பத்திரிகை சுதந்திரமான ஒரு போக்கை கடைப்பிடித்தது. அரசாங்கத்தின் போக்கையும் தவறுகளையும் சுட்டிக்காட்டி எழுதியது.

1848இன் புரட்சியின்போது அரசாங்கம் நடந்து கொண்ட விதத்தைக் கண்டித்துப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும் என்றும் அது எழுதியது. விசாரணை நடாத்தியதன் விளைவாக கவர்னர் ஹாரிங்டன் பிரபுவும் உதவியாளர்களும் திருப்பி அழைக்கப்பட்டனர். டாக்டர் எலியாட் இளைப்பாறியதும் ஏ.எம். பேர்குசன் ஆசிரியரானார். அவர் ஆசிரியரானபின் ஒப்சோவர் பத்திரிகையின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது.

அந்தக் காலத்தில் அதிகமான கப்பல்கள் காலித் துறைமுகத்துக்கே வந்துசென்றன. காலியிலிருந்து செய்திகளை கொழும்பில் பெறுவதற்கு பத்து மணி நேரம் பிடித்தது. அதனால் 1850இல் புறாமூலம் செய்திகளை அனுப்பும் சேவை ஒன்றை ஒப்சோவர் ஆரம்பித்தது. அதன் மூலம் செய்திகள் இரண்டு மணிநேர இடைவெளிக்குள் காலியிலிருந்து கொழும்புக்குக் கிடைத்தன.

இங்கிலாந்து பேரரசுக்கும் பிரான்சுக்கும் இடையே 1855 காலப்பகுதியில் ஒரு போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. அக்காலப்பகுதியில் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் வாழும் பிரிட்டிஷ் மக்கள் போரில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலுடன் செய்திகளுக்காக காத்திருந்தனர். இலங்கையிலும் போர்ச் செய்திகளையும், கோப்பி விலை தொடர்பான செய்திகளையும் தமது இங்கிலாந்து தாய்நாட்டுச் செய்திகளையும் தெரிந்து கொள்வதற்கு இலங்கையில் தங்கியிருந்த பிரிட்டிஷ் பிரஜைகளும் ஐரோப்பியரும் விரும்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கு காலிதுறைமுகமே பிரதான துறைமுகம். ஐரோப்பிய கப்பல்கள் அங்கேயே நங்கூரமிடும். அங்கிருந்துதான் கோச் வண்டிகள் மூலம் தபால் பொதிகள் மற்றும் ஏனைய துறைமுக சரக்குகள் கொழும்புக்கு கொண்டுவரப்படும். காலியிலிருந்து கொழும்புக்கு 72 மைல் தூரம். ஒரு குதிரை கோச் வண்டி இத்தூரத்தைக் கடக்க 10 மணித்தியாலங்களை எடுத்துக் கொள்ளும். பிரிட்டிஷ் தபால்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையே காலித் துறைமுகத்துக்கு கொண்டு வரப்படும். இத்தபாலில்தான் இங்கிலாந்து மற்றும் உலகச் செய்திகளும் வரும். இப்புதினங்களை அறிய நாடு முழுவதும் உள்ள வெள்ளைக்காரர்களும் வர்த்தகர்களும் காத்துக்கிடந்தார்கள்.

அக்காலத்தில் கொழும்பு ஒப்சேர்வர் (சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையின் முன்னோடி) பத்திரிகைக் காரியாலயம் கொழும்பு கோட்டை பெய்லி வீதியில் இயங்கிக்கொண்டிருந்தது. இப்பத்திரிகைக்கான புதினங்கள் தனித்தபாலில் வரும். அத்தாள்களை சுருட்டி பயிற்றப்பட்ட புறாக்களின் கால்களில் கட்டி பறக்க விடுவார்கள். இரண்டு மணித்தியாலங்களுக்குள் புறாக்கள் காலியில் இருந்து புறப்பட்டு பெய்லி வீதி ஒப்சர்வர் காரியாலயத்துக்கு வந்து விடும். காரியாலயத்துக்கு முன்பாகக் கொடியேற்றுவதன் மூலம் செய்திகள் வந்துவிட்டன என்ற தகவல் வர்த்தகர்கள், அதிகாரிகளை சென்றடைய அவர்கள் ஒப்சேர்வர் காரியாலயத்தின் முன்பாகக் கூடிவிடுவார்கள். ஒப்சேர்வர் காரியாலயத்தைச் சேர்ந்த ஒருவர் முக்கிய செய்திகளை வாசித்துக்காட்டுவார். டெலிகிராப் சேவை வரும்வரை புறாத் தபால் சேவை நடைமுறையில் இருந்தது. 1850 முதல் இப் புறாத் தபால் நடைமுறைக்கு வந்ததாகவும் மருத்துவர் எலியட் என்பவரே புறாக்களை பழக்கி இச்சேவையை நடைமுறைப்படுத்தினார் என்றும் அறிய முடிகிறது.

பேர்குசன் ஓய்வு பெற்றபின் 'ஒப்சோவர்' ஆட்டங் காணத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு பத்திரிகைகள் ஆரம்பிக்கப் பட்டமை அதற்கு முக்கிய காரணமாகும். 'ஒப்சோவர்' பத்திரிகை ஒருவர் மாறி இன்னொருவருக் கென்று பலருக்கும் கைமாறியது. 1923இல் ஒப்சோவரை டி.ஆர். விஜயவர்த்தனா வாங்கினார். அதை அவர் டெயிலி நியூசின் துணைப் பத்திரிகையாக வெளியிட்டார். அது இப்பொழுது டெயிலி நியூசின் ஞாயிறு இதழான 'சண்டே ஒப்சோவ'ராக வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஒப்சோவர் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளின் பின்பு 1837இல் 'சிலோன் குரோனிக்கிள்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கத்தை ஆதரித்த அப்பத்திரிகை ஒரு வருடம் மட்டுமே வாழ்ந்தது.

1838இல் 'சிலோன் ஹெரால்ட்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கபட்டது. அது 1846இல் மூடப்பட்டு 'த ரைம்ஸ்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. பிரித்தானிய வர்த்தகர்கள், தோட்டச் சொந்தக்காரர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோருடன் செல்வந்த இலங்கையர்களும் 'த ரைம்ஸ்' பத்திரிகைக்கு ஆதரவளித்தனர். அதனால் 'த ரைம்ஸ்' பத்திரிகையின் வெளியீட்டாளர்கள் பொருளாதார ரீதியில் வெற்றி பெற்றனர்.

ஜோன் கப்பக் (1858 - 1885) ஆசிரியராக இருந்த காலத்தில் 'த ரைம்ஸ்' சிறப்பாக நடத்தப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ரைம்ஸ் பத்திரிகை ஆட்சியாளர்களை எதிர்க்கும் போக்கைக் கடைப்பிடித்தது. அத்துடன் "லங்காதீப" என்ற சிங்களப் பத்திரிகையையும் தொடங்கியது. அதே காலப் பகுதியில் பிரித்தானிய வர்த்தகர்களுக்கு இலங்கை அரசியல்மீது ஆர்வம் குறைந்துவிட்டதனால் இலங்கையருக்கு அப் பத்திரிகையை விற்றுவிட்டனர். அதன்பின்பு அப்பத்திரிகை வீழ்ச்சியடைந்து 1885இல் அது இறுதி மூச்சைவிட்டது.



264487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் உள்ள வர்த்தகர்கள் சிலர் தமது வர்த்தகம் பற்றிய செய்திகளை வெளியிட 1846இல் 'எக்சாமினர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். அது நஷ்டத்தில் மூழ்கியதால் சால்ஸ் அம்புறோஸ் லோரன்ஸ் தலைமையிலான சட்ட வல்லுனர் குழுவொன்றுக்கு விற்றுவிட்டனர்.

பறங்கி சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் இலங்கை மக்கள் தமக்காக தாமே பேசக் கூடிய நிலையை அடைந்துவிட்டனர் என்ற சுலோகத்தை முன்வைத்து பத்திரிகை வெளியிட்டனர். இலங்கை அரசியலில் பல சீர்திருத்தங்களை முன்வைத்து அப்பத்திரிகை போராடியது. பத்திரிகை நடத்தியவர்களில் பலருக்கு அரசாங்கம் பெரிய பதவிகளை வழங்கியதன் விளைவாக 1900இல் அப்பத்திரிகை நின்றுவிட்டது.

'த இன்டிப்பென்ரன்ற்' என்ற பத்திரிகையின் செல்வாக்கு அதிகரித்தமையும் இப்பத்திரிகையின் வீழ்ச்சிக்கு இன்னுமொரு காரணமாகும். 1888இல் ஆரம்பிக்கப்பட்ட 'இன்டிப்பென்ரன்ற்' பத்திரிகையின் ஆசிரியராக ஜோர்ஜ் வேஸ் கடமை யாற்றினார். இலங்கையரின் குரலாக ஆரம்பிக்கப்பட்ட அப்பத்திரிகை ஆரம்பத்தில் 5 சதத்துக்கு விற்கப்பட்டது. 1907இல் த இன்டிப்பென்ரன்ற் பத்திரிகைக்கு எதிராக சிங்கள வர்த்தகர்கள் 'சிலோன் மோர்னிங் லீடர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். கோவாவைச் சேர்ந்த 'ஆர்மண்ட் டி சொய்சாவை' ஆசிரியராக கொண்டிருந்த அப்பத்திரிகை செல்வாக்குப்பெற ஆரம்பித்தது. டி. சொய்சா குடும்பத்தினர் அப்பத்திரிகையை நடத்தினர்.

இலங்கை தேசிய வாதிகள் சிலர் 1913இல் 'சிலனிஸ்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்று போராடுவதற்கே அது ஆரம்பிக்கப்பட்டது. அத்தேசியவாதிகளில் சேர் பொன் அருணாசலம், ஹெக்டர் ஜெயவர்தன, பிரான்ஸிஸ் டி சொய்சா போன்றோர் முக்கியமானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1915இல் இடம்பெற்ற கிளர்ச்சி, இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. அப்பொழுது இலங்கையில் ஐந்து ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. 'த ஒப்சோவர்', 'த ரைம்ஸ்', 'த இன்டிப்பென்ரன்ட்', 'மோர்னிங் லீடர்', 'சிலனிஸ்' என்பனவே அவை. இவற்றில் சிலனிஸ் என்ற பத்திரிகை நட்டத்தில் இயங்கியது.

'டொன் றிச்சர்ட் விஜயவர்தனா' என்பவர் 1917 டிசம்பர் மாதம் அப்பத்திரிகையை வாங்கினார். அதன்பின் 'சிலோன் டெயிலி நியூஸ்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். அதன் முதல் இதழ் 03-01-1918இல் வெளிவந்தது. சேர். பொன் இராமநாதன் அதன் முதல் இதழை வாழ்த்திக் கட்டுரை ஒன்றை எழுதினார். ஐந்து சதத்துக்கு விற்கப்பட்ட அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பிரதம செய்தி ஆசிரியராகவும் நிர்வாக இயக்குனராகவும் டி.ஆர். விஜயவர்த்தனாவே பணிபுரிந்தார்.

அப்பத்திரிகை சில முக்கியமான செய்திகளை பிரத்தியேகமாகப் பிரசுரித்து மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. பிரித்தானிய ஆட்சியாளருக்கு ஐரோப்பிய சமூகத்தினர் அனுப்பி வைத்த மனு - ஆட்சிப் பொறுப்பை இலங்கையருக்கு வழங்குவதை எதிர்த்துச் சிறுபான்மை மக்களின் தலைவர்கள் கூட்டாக அனுப்பிய மனு - டொனமூர் கமிஷனின் சிபாரிசுகள் போன்றவற்றை 'டெயிலி நியூஸ்' பிரத்தியேகமாகப் பிரசுரித்து மக்களிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

இலங்கையின் பத்திரிகைத் துறையில் டி.ஆர். விஜயவர்தனா பல சாதனைகளைச் செய்தார். நவீன அச்சுயந்திரங்களை அவர் இலங்கைக்கு அறிமுகப் படுத்தினார். இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். மிகவும் சிறந்த புத்தி ஜீவிகளை தமது பத்திரிகைகளுக்கு ஆசிரியர்களாக நியமித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகையவர்களின் ஒருவராக எச்.ஏ.ஜே. லுனுகல்ல விளங்கினார். அவர் 'டெயிலி நியூஸ்' ஆசிரியராக இருந்த காலத்தில் அப்பத்திரிகை சிறந்து விளங்கியது. அவர் அப்பத்திரிகையில் 17 வருடங்கள் (1931-1948) ஆசிரியராக இருந்தார். இவர் டி.ஆர். விஜயவர்தனவின் வாழ்க்கை வரலாற்றை நூலாகவும் எழுதியுள்ளார்.

1950இல் விஜயவர்தன காலமானபின் அவரது மருமகன்மாரும் கடைசி மகனான ரஞ்சித் விஜயவர்தனவும் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையை வெளியிட்டு 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தை நிர்வகித்தனர். 1973இல் லேக் ஹவுஸ் நிறுவனத்தையும் அது வெளியிட்ட பத்திரிகைகளையும் அரசாங்கம் கையேற்றது. அன்று முதல் இன்று வரை அது அரசாங்கக் கட்டுப்பாட்டுக் குள்ளேயே இயங்கிவருகிறது. டெயிலி நியூஸ் தனது 100 வயதை 03-01-2018இல் கொண்டாடியது.

புத்தக வெளியீட்டில் பிரபலம் பெற்ற எம்.டி. குணசேனா நிறுவனம் 1964இல் 'த சன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையை வெளியிட்டது. 1990இல் அது நின்றுவிட்டது.

உபாலி விஜேவர்தனா என்ற வர்த்தகர் 1981இல் 'த ஐலண்ட்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். அவர் இளவயதில் இறந்துவிட்டபோதும் பத்திரிகை தொடர்ந்து வெளிவருகிறது. 'ஐலண்டின்' ஞாயிறு இதழ் 1991 முதல் வெளிவரத் தொடங்கியது. இவ்விதழின் நாளிதழ் 70000 பிரதிகளும் ஞாயிறு இதழ் 130000 பிரதிகளும் விற்பனையாகின்றன.

இந்த இருநூறு ஆண்டுகளுக்குள் ஆங்கிலத்தில் பலவகை நாள் இதழ்களும் மத இதழ்களும் வெளிவந்தன. ஆனால் அவற்றில் சிலதான் நின்றுபிடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

## 05

# சிங்களப் பத்திரிகைகள்

ஆங்கிலப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களின் பின்பே சிங்களப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. முதலாவது சிங்களப் பத்திரிகையான 'லங்கா லோகய' காலியிலிருந்தே வெளிவந்தது. 1860 முதல் பிரசுரிக்கப்பட்ட அப்பத்திரிகை மாதமிருமுறை வெளிவந்தது. அதன் ஆசிரியராக டபிள்யூ பி. ரணசிங்க கடமையாற்றினார். 59 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்த இப்பத்திரிகை 1919ஆம் ஆண்டு நின்று கொண்டது.

இந்த 59 ஆண்டு கால இடைவெளியில் பல சிங்களப் பத்திரிகைகள் தோன்றி மறைந்தன.

லக்மினி பஹன (1862)

லக் றிவி கிரண (1864 - 1902)

ஞானார்த்த பிரதீப (1866)

தவசக திசாவ (1873 - 1913)

சரசவி சந்தரச (1880 - 1951)

தினகர பிரகாச (1885 - 1910)

ஹெலதீப ரூவான் (1888 - 1913)

லங்கா பிரதீபய (1895 - 1913)

பக்தி பிரபோதனய (1895 - 1913)

மெதடிஸ் பிறவுர்த்தி (1890)

போன்றனவே அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப் பகுதியில்தான் கத்தோலிக்க பத்திரிகை யான “ஜனார்த்த பிரதீபய” (1866) ஆரம்பிக்கப்பட்டது. வார ஏடான அது இன்றும் தொடர்ந்து வெளிவருகிறது. முதலாவது சிங்களப் புதினப் பத்திரிகையான ‘தினப்பத்தா புறவுர்த்தி’ (1895) முதல் வெளிவர ஆரம்பித்தது. சி. டொன் பஸ்த்தியான் ஜயவீர பண்டார என்பவரால் ஆரம்பிக்கப்பட் அப்பத்திரிகை (1908)ஆம் ஆண்டுவரை வெளிவந்தது.

சுதந்திரத்துக்குப்பின் ‘தினமின’ (1969), “சிலுமின” (1931), “லங்காதீப” (1941), தவச (1961 - 1990), “அத்த” (1969) ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன.

இரண்டாவது சிங்களத் தினசரியான தினமின 17-12-1969முதல் வெளிவந்தது. இன்றுவரை நிலைத்து நிற்கும் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட வரலாறு சுவையானது.

கேர்னல் ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் என்ற அமெரிக்க மெய்ஞானி 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கை வந்து பௌத்த மெய்ஞான சங்கத்தை ஆரம்பித்தார். கிறிஸ்தவர்களின் ஆக்கிரமிப்பதிலிருந்து பௌத்த மதத்தைக் காப்பாற்றி ‘சரசவி சந்தரச’ என்ற வார இதழை ஆரம்பித்தார். அதன் ஆசிரியராக பண்டிதர் வெரகம பண்டார கடமையாற்றினார். அவருக்குப் பின்பு எச்.எஸ். பெரேரா ஆசிரியரானார். 1909இல் ஆசிரியர் எச். எஸ்.பேரேராவுக்கும் நிர்வாகி ஜி.எச்.டி. சொய்சாவுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது.

டி.பி. ஜெயதிலக்க என்பவரின் கட்டுரையொன்றை வெளியிடுவதா இல்லையா என்பதன் மூலமே அப்பிரச்சினை ஆரம்பமாகியது. அதனால் பெரேரா தனது ஆசிரியர் பதவியை விட்டு விலகினார். அங்கிருந்து விலகிய பெரேரா ஜெயதிலகாவின் ஆதரவுடன் ‘தினமின’ என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சந்த ரேகா' என்றால் சந்திரன், "தினமின" என்றால் சூரியன். சந்திரனை விட சூரியன் பலவான் என்பதால் "தினமின" என்ற பெயரை பெரேரா தனது புதிய பத்திரிகைக்குச் சூட்டினார். "தினமின" சிறப்பாக நடத்தப்பட்ட போதிலும் நிதிப் பிரச்சினையால் தள்ளாடியது. ஜெயதிலக்கா தனது நண்பரான டி.ஆர். விஜயவர்தனாவிடம் சென்று "தினமின" பத்திரிகையை வாங்கி நடத்துமாறு கேட்டுக் கொண்டார். விஜயவர்த்தனவிடம் வந்த தினமின சிறப்புற வளர்ச்சியடைந்தது.

கண்டி ஒப்பந்தத்தின் நூற்றாண்டு விழா தினமான 02-03-1915இல் "தினமின" ஒரு விஷேட மலரை வெளியிட்டது. அதில் சிங்கக் கொடியினதும் கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனினதும் வர்ணப் படங்கள் பிரசுரிக்கப்பட்டன. தினமின பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவரான டி.டபிள்யூ விக்கிரமாராச்சி சிறந்த நிர்வாகி. அவர் பின்பு "சுவதேச மித்ரயா" என்ற வார இதழை ஆரம்பித்தார். ஆனால் விஜேயவர்தன 1930ஆம் ஆண்டில் சிலுமின என்ற இதழை ஆரம்பித்ததும் "சுவதேச மித்திரய" தன் செல்வாக்கினை இழந்தது.

'டெயிலி நியூஸ்' பத்திரிகையின் மொழி பெயர்ப்பாகவே 'தினமின' நீண்டகாலம் வெளிவந்தது.

ஆனால் 1956க்குப் பின் 'தினமின'வுக்கென தனியான பத்திரிகையாளர்களும், நிருபர்களும் நியமிக்கப்பட்டு தனித்துவமான பத்திரிகையாக உயர்ந்தது.

பிரபல எழுத்தாளரான மார்ட்டின் விக்கிரமசிங்காவும் சிலகாலம் 'தினமின'வின் ஆசிரியராக பணியாற்றி யிருக்கிறார். 40 ஆண்டுகளுக்கு 'தினமின'வுக்கு எந்தவித போட்டியும் இருக்கவில்லை. 1947இல் 'ரைம்ஸ் ஒப் சிலோன்' நிறுவனம் லங்காதீப என்ற பத்திரிகையை ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி.பி. தனபாலாவின் நிர்வாகத்தின் கீழ் அப்பத்திரிகை நன்றாக இயங்கியது. ஆனால் நிதி நெருக்கடி காரணமாக அப்பத்திரிகை 1983இல் மூடப்பட்டது.

எம்.டி. குணசேனா நிறுவனம் "த சன்" என்ற ஆங்கிலப் பத்திரிகையுடன் "தவச" என்ற சிங்களப் பத்திரிகையையும் ஆரம்பித்தது. 1990ஆம் ஆண்டு "த சன்" மூடப்பட்டபோது தவச மற்றும் அதன் துணை இதழ்களும் நின்று கொண்டன.

1970ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட 'அத்த' பத்திரிகை வெளிவந்துவிட்டு நின்று கொண்டது. வேறு சில அரசியல் கட்சிகளும் பத்திரிகைகளை ஆரம்பித்தன. ஆனால் எந்தப் பத்திரிகையும் நின்று நிலைக்கவில்லை.

1981ஆம் ஆண்டு உபாலி விஜயவர்தனா 'திவயின' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். அப்பத்திரிகையின் உரிமையாளர் இறந்துவிட்டாலும் பத்திரிகை சிறப்புடன் வெளிவருகிறது.

2010 ஆம் ஆண்டு "லங்காதீப", "அத" போன்ற பத்திரிகைகளும் வெளிவரத் தொடங்கின. இப்பொழுது 'மவுபிம', 'ஜனயுகய', 'இறுதின', 'அனிந்தா' போன்ற பத்திரிகைகள் வெளிவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06

# இலங்கையில் வானொலிச் சேவை

உலகில் தகவல் தொழில்நுட்பம் அதிகமாகப் பரவாதிருந்த காலம் அது. அவ்வேளையில் மார்க்கோனி என்னும் விஞ்ஞானி வானொலி என்னும் கருவியைக் கண்டுபிடித்து அதிசயம் நிகழ்த்தினார். அன்று முதல் இன்றுவரை உலகில் தகவல் பரிவர்த்தனை தொழில்நுட்பம் விரிவடையத் தொடங்கியது. மேல்நாடுகளில் வானொலிச் சேவை படிப்படியாக உயரத் தொடங்கியது. பிரித்தானியரின் ஆட்சியின்கீழ் இலங்கை இருந்தபோது சில நன்மைகளும் கிடைக்கத்தான் செய்தன. அவற்றில் குறிப்பிடத்தக்க நன்மை வானொலிச் சேவை ஆகும்.

முதலாவது உலக யுத்தம் நடைபெற்ற காலத்தில்தான் இலங்கையில் கம்பியில்லாத் தந்தி மூலம் (வயர்லெஸ்) ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு தகவல்கள் அனுப்பப் பட்டன. முதலாவது உலகயுத்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கம்பியில்லாத் தந்திச் சேவையே இலங்கையில் வானொலிச் சேவை ஆரம்பமாவதற்கு காரணமாக அமைந்தது. அக்காலத்தில் இலங்கையில் இயங்கிவந்த வயர்லெஸ் கழகமே இலங்கையில் வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஆட்சியாளர்களுக்கு சிபார்சு செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மக்கள் வானொலிச் சேவையின் பயன்பாட்டை அடைவதற்கு முக்கிய காரணமாக விளங்கியது ஒரு நீர்மூழ்கிக் கப்பலாகும்.

ஜேர்மன் நாட்டு நீர்மூழ்கிக் கப்பலொன்றை பிரித்தானிய கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். அந்த நீர் மூழ்கிக் கப்பல் மீண்டும் இயங்க மறுத்தது. ஆனால் அக்கப்பலின் வானொலிச் சாதனம் மட்டும் இயங்கும் நிலையில் இருந்தது. அந்த வானொலிச் சாதனங்களைப் பயன்படுத்தியே இலங்கையில் பரீட்சார்த்த அடிப்படையில் வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இன்று இலங்கையில் வானொலிச் சேவையின் தரம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. எட்வேர்ட் ஹொப்பர் என்ற இங்கிலாந்து பொறியியலாளரே இலங்கை ஒலிபரப்பின் பிதாமகன் எனப் போற்றப்படுகிறார். 1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி இலங்கை தந்திச் சேவையின் பிரதம பொறியியலாளராகப் பதவியேற்ற இவரே முதலாவது பரீட்சார்த்த ஒலிபரப்புச் சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.

எட்வேர்ட் ஹொப்பர் தனது சக பொறியியலாளர் களின் துணையுடன் 1924ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி அரைக்கிலோ வோட் ஒலிபரப்பில் பரீட்சார்த்த ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்து வைத்தார். பின்னர் அந்த பரீட்சார்த்த சேவை ஒரு கிலோ வோட் ஒலிபரப்பியாக விஸ்தரிக்கப்பட்டது. 1925ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் திகதி உத்தியோகபூர்வ ஒலிபரப்புச் சேவையாக பிரித்தானிய ஆளுனராக இருந்த திரு. கியூபேர்ட்ஸ் இலங்கை வானொலிச் சேவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இலங்கையில் வானொலிச் சேவை ஆரம்பமான போது நாடு முழுவதும் 53 வானொலிப் பெட்டிகள் மட்டுமே பாவனையிலிருந்தனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் போக்கில் வானொலி உபகரணங்களின் பாவனை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. 1992ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரக் கணக்கெடுப்பின்படி இலங்கையில் வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை 35 இலட்சம் என தெரிய வந்தது.

நாட்டின் அன்றாட கடமைகளில் ஒரு முக்கிய இடத்தை வானொலிச் சேவை பிடித்துவிட்டது என்பதை அது எடுத்துக் காட்டியது. வானொலிச் சேவை ஆரம்பமான காலத்தில் ஒலிபரப்புச் சேவை நகரங்களைத் தழுவியதாகவே அமைந்திருந்தது. 1945ஆம் ஆண்டின் பின்னரே கிராமப் புறங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் வரத்தொடங்கின.

ஆரம்பத்தில் செய்திகளை ஒலிபரப்புவதில் அக்கறை காட்டிய இலங்கை வானொலி, படிப்படியாக இசை நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பத் தொடங்கியது. "ட்ரான் சிஸ்டர்" வானொலிப் பெட்டிகள் பாவனைக்கு வந்த பின்னர் எங்கும் எதிலும் வானொலி என்னும் நிலை உருவானது. இலங்கையில் தனியார் வானொலி நிலையங்கள் உருவான போதிலும் "இலங்கை வானொலிக்கு" மக்கள் மத்தியில் இருந்த ஆர்வம் குன்றிவிடவில்லை.

ஆரம்ப காலத்தில் இலங்கை வானொலியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே அலைவரிவையில்தான் ஒலிபரப்புகள் நிகழ்ந்தன. பின்பு ஒவ்வொரு மொழிக்கும் தனிப்பட்ட அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டன. தனிப்பட்ட பணிப்பாளர்களும் நியமிக்கப் பட்டனர்.

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் ஆரம்ப காலத்தில் அறிவிப்பாளர்களாக கே.வி. விநாயகமூர்த்தி, எஸ். நடராசா, எஸ். சிவபாதசுந்தரம், வி.என். பாலசுப்பிரமணியம், கே. குஞ்சிதபாதம் போன்றோர் கடமையாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தந்தி அலுவலகத்தில் ஒரு சிறிய கலையத்திலிருந்து ஒலிபரப்புச் சேவயை ஆரம்பித்த இலங்கை வானொலி பின்பு ரொறிங்டன் சதுக்கத்திற்கு மாறியது. 'ரேடியோ சிலோன்' என்னும் பெயரில் அரசாங்க திணைக்களமாக இயங்கிய இலங்கை வானொலி, ஒரு பொது நிறுவனமாக மாறுவதற்குத் தீர்மானித்தது. அதன்படி 1967ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாறியது. அதன்பின்னர் இலங்கையின் ஒலிபரப்புத்துறை பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியது.

ஆரம்பகாலத்தில் நாடகங்கள் இசைக் கச்சேரிகள் உரையாடல்கள் போன்றவை நேரடியாகவே ஒலிபரப்பப் பட்டன. 1950ஆம் ஆண்டு ருவன்வெலிசாயாவில் பௌத்த தாது கோபுரத்துக்கு கலசம் வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியே முதன்முதலில் வானொலிமூலம் நேரடி அஞ்சல் செய்யப் பட்டது.

இலங்கை வானொலியின் தேசிய சேவை, நாட்டு மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்தது. இலங்கை வானொலியின் வர்த்தக சேவையை இலங்கை மக்கள் மட்டுமன்றி இந்திய நேயர்களும் விருப்பிக் கேட்டனர்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்நாட்டு சேவையை நடத்திய இலங்கை வானொலி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி போன்ற மொழி களில் வெளிநாடுகளுக்கான ஒலிபரப்பையும் நடத்தியது.

ஆரம்ப காலத்தில் அரைக் கிலோ வோட் ஒலிபரப்பி மூலம் ஒலிபரப்பை ஆரம்பித்த இலங்கை வானொலி, காலப் போக்கில் சிற்றலைவரிசையிலும் மத்திய அலை வரிசையிலும் தனது ஒலிபரப்பை விஸ்தரித்துக் கொண்டது. பின்பு 'எவ்.எம்.' எனப்படும் பண்பலைவரிசையிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து பின்பு ஒலிபரப்புச் செய்யும் முறையும் வந்தது. படிப்படியாக பிராந்திய வானொலி நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

*12-04-1979* இல் அனுராதபுரத்தில் ரஜரட்ட சேவை ஆரம்பமாகியது. *22-01-1980*இல் மாத்தறையில் ருகுணு சேவை தொடங்கப்பட்டது. மகாவலி சமூக வானொலிச் சேவை *1981*ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. *13-04-1983*இல் கண்டியில் மாநுவர சேவை ஆரம்பிக்கப் பட்டது.

*04-11-2005* முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் மூலம் “பிறை எவ்.எம்.” ஆரம்பிக்கப்பட்டது. அதன் காரியாலயம் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றில் இருக்கிறது. இந்து இஸ்லாம் கிறிஸ்தவ மக்களுக்கு அவர்களது மதத்துடன் தொடர்புடைய முக்கிய விழாக்களுக்கு முக்கிய இடம் கொடுத்து வருகிறது.

*1981*இல் யாழ் சேவை ஆரம்பமாகியது. பலாலி ராணுவ முகாமுக்குள் இருந்த “யாழ் எவ்.எம்.” இப்பொழுது யாழ் நகரில் இயங்குகிறது. அதன் கட்டுப்பாட்டாளராக முருகேசு ரவீந்திரன் கடமையாற்றுகிறார்.

இலங்கை வானொலி தனது 75வது ஆண்டு பவள விழாவை 2000ஆம் ஆண்டு கொண்டாடியது. இப்பொழுது நூற்றாண்டை நோக்கிச் செல்கிறது. 2001 சித்திரைப் புத்தாண்டன்று ‘தென்றல் எவ்.எம்.’ என்ற வர்த்தக சேவையையும் ஆரம்பித்தது. தனியார் வானொலிகள் 24 மணி நேரமும் தனது ஒலிபரப்பை செய்த போதும் இலங்கை வானொலியின் தனித்துவம் பாதிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

தற்பொழுது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் பணிப்பாளராக ஆர். கணபதிப் பிள்ளையும் கட்டுப்பாட்டாளராக ஆர். ஜோகராஜனும் கடமையாற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் வானொலிகள்

இப்பொழுது 30க்கு மேற்பட்ட தனியார் வானொலி சேவைகள் இயங்குகின்றன.

இவற்றிலே தமிழ் ஒலிபரப்புகளான சக்தி எவ்.எம்., சூரியன் எவ்.எம்., வசந்தம் எவ்.எம்., வெற்றி எவ்.எம்., வர்ணம் எவ்.எம்., தமிழ் எவ்.எம்., கப்பிடல் எவ்.எம் என்பன முக்கியமானவை.

## எவ்.எம். 99

*15-06-1993*இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வானொலியே முதலாவது தனியார் வானொலியாகும். பின் இவ்ஒலிபரப்பை ஈ.ஏ.பி. நிறுவனம் வாங்கி அதை 'சுவர்ண ஒலி' என்ற பெயருடன் தொடர்ந்தது பின்பு சுவர்ண ஒலியும் நின்றுவிட்டது.

## சக்தி எவ்.எம்.

இது தனது முதல் ஒலிபரப்பை *1998*ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்தது. ஒரு ஆண்டின்பின்பு அது *24* மணி நேர ஒலிபரப்பைத் தொடங்கியது. நாடு முழுவதும் வானலை மூலமும் *08-03-2000* முதல் உலகம் முழுவதும் இணையத்தளம் மூலமும் தனது சேவையை விஸ்த்தரித்தது. செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சக்தி எவ்.எம். சிறுபான்மையினரின் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஜனரஞ்சகமான பல நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியன் எவ்.எம்.

இது 25-07-1998 முதல் 97.9 F.M. அலை வரிசையில் 24 மணிநேர ஒலிபரப்பாக ஆரம்பமாகியது. கொழும்பு கோட்டை உலக வர்த்தக மையக் கட்டிடத்தில் 35வது மாடியில் அது இயங்கி வருகிறது. பலரும் விரும்பிக் கேட்கும்படி செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. 2007ஆம் ஆண்டில் இவ் வானொலிக்கு தடை விதிக்கப்பட்டது. மீண்டும் 2008இல் ஆரம்பித்த இவ்வொலிபரப்பு சிறப்புடன் மிளிர்ந்தது. இலங்கையிலும் தமிழகத்திலும் வானலை வழியாகவும் உலகம் முழுவதும் இணையத்தின் வழியாகவும் இது ஒலிபரப்பப்படுகிறது. இலங்கையில் அதிகம் ரசிகர்களால் பார்க்கப்படும் இணைய தளங்களில் ஒன்றாக சூரியன் இணையதளம் வளர்ந்துள்ளது. “சூரியன் கேட்டால் காசுதான்” என்று சூரியன் நேயர்களுக்கு பரிசும் வழங்கி வருகிறது.

## வசந்தம் எவ்.எம்.

ஐ.ரி.என். தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்ப் பிரிவுக்கு ‘வசந்தம் ரி.வி.’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த வசந்தம் ரி.வி.யின் தமிழ் வானொலியாக 21-04-2008 முதல் ‘வசந்தம் எவ்.எம்.’ வானொலி பத்தரமுல்ல விக்கிரமசிங்கபுரத்தில் ஆரம்பமாகியது. 97.6 பண்பலையில் கிழக்கு மாகாணம் வடமேல், வடமத்திய மாகாணங்களில் தனது பரீட்சார்த்த ஒலிபரப்பை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் 19 மணித்தியாலம் இடம்பெற்று ஒலிபரப்பிய பின்பு 24 மணிநேரமாக உயர்ந்தது. ஒரு நாளைக்கு 4 செய்திகளை வசந்தம் எவ்.எம். வழங்குகிறது. முக்கியமான செய்திகளையும் அடிக்கடி ஒலிபரப்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

## வெற்றி எவ்.எம்.

இது தனது சேவையை 2008 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆரம்பித்தது. கொழும்பு மாநகரை மையப்படுத்தி 99.6 பண்பலைவரிசையில் ஒலிபரப்பை ஆரம்பித்த வெற்றி எவ்.எம். பின்பு படிப்படியாக நாடு முழுவதும் தனது ஒலிபரப்பை விஸ்தரித்தது.

Voice of Asia Network நிறுவனத்தின் சிங்கள ஒலிபரப்பை சியத்தவும் ஆங்கில ஒலிபரப்பை Real Radioவும் தமிழ் ஒலிபரப்பை வெற்றி எவ்.எம். வானொலியும் ஒலிபரப்புகிறது.

வெற்றி எவ்.எம். பின்பு வர்ணம் ரி.வி.யின் வானொலியாக ஒலிபரப்பாகியது.

## தமிழ் எவ்.எம்.

இவ்வொலிபரப்பு 02-09-2013 முதல் ஆரம்பமாகியது. அறிவார்ந்த சமூகத்தை கட்டி எழுப்புவோம் என்ற குறிக்கோளுடன் அது ஆரம்பமாகியது. பரணிதரன் தலைமையில் விமல் பிரதீப், முகுந்தன் ஆகியோர் பங்குபற்றினர்.

2017ஆம் ஆண்டு இவ்வொலிபரப்பும் நின்று கொண்டது.

## கப்பிடல் எவ்.எம்.

'Liver Pool Holdings' நிறுவனத்தின் கப்பிடல் எவ்.எம். வானொலி 01-12-2017இல் ஆரம்பிக்கப்பட்டது. ஷியா உல் உசைன் அதன் தலைவராவார். ஏ.எல். ஜாபிர் அதன் இசைக் கட்டுப்பாட்டாளராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07

# இலங்கையில் தொலைக்காட்சிச் சேவை

இலங்கையில் தொலைக்காட்சிச் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அது தொடர்பான விளக்கமும் விபரமும் கொண்ட ஒரு குழுவினர் முயற்சி செய்துள்ளனர். 1976இல் கொழும்பில் அணி சேரா நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவிருந்த வேளை ஷாண் விக்கிரமசிங்க என்பவர் 1976 ஆகஸ்ட் மாதம் கொழும்பைச் சுற்றி சில மைல் சுற்றாடலுக்கு ஒளிபரப்பக் கூடியதான ஒளிபரப்பு முறை ஒன்றை உருவாக்கினார். அது தொலைக்காட்சிச் சேவையை முதன்முதலாக பரீட்சார்த்தமாக ஒளிபரப்பிய செயல் முறையாக அமைந்தது.

1979இல் இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஒன்றை நடத்த விருப்பமுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டது. இறுதியில் ஷாண் விக்கிரமசிங்க குழுவினருக்கு தொலைக்காட்சிச் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைத்தது. ஷாண் விக்கிரமசிங்கவும் அனில் விஜயவர்தனவும் சேர்ந்து சுயாதீன தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தனர். இதுவே இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சி சேவையாகும். பின்பு இச்சேவையை அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது இராஜாங்க அமைச்சின் செயலாளராக இருந்த கலாநிதி சரத் அமுனுகம அவர்களால் தேசிய தொலைக்காட்சி சேவை ஆரம்பிப்பதற்கான திட்டமிடல் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த தேவிஸ் குருகே இந்தக் குழுவினருக்கு தலைமை தாங்கினார்.

1979ஆம் ஆண்டு ஜப்பானிய அரசாங்கம் இலங்கை அரசுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி தொலைக்காட்சி நிலையத்துக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 04-03-1980இல் தொலைக்காட்சி நிலையத்தை அமைப்பதற்காக ரொரிங்டன் சதுக்கத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு முன்னாலிருந்த விளையாட்டு மைதானத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் வேறு நிறுவனங் களிலிருந்தும் தொழில் நுட்பவியலாளர்கள், தயாரிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு ஜப்பான், மேற்கு ஜேர்மனி, மலேசியா போன்ற நாடுகளுக்கு பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

04-05-1981இல் பிதுறுதாலகால மலை உச்சியில் ஒளிபரப்புக்கோபுரம் அமைக்கும் வேலைகள் நிறைவு பெற்றன. 10-11-1981இல் கொழும்பு கலையகக் கட்டட வேலைகள் நிறைவு பெற்றன. இரண்டு கலையகங்களும் கட்டுப்பாட்டறையும் நிர்வாகக் கட்டிடமும் இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டன.

1981ஆம் ஆண்டு நவம்பர் முற்பகுதியில் "இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்" என பெயர் சூட்டப்பட்டது. 15-02-1982இல் இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்ஸின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன இலங்கை ரூபவாஹினியின் சேவையை ஆரம்பித்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவராக திரு. எம்.ஜே. பெரேரா பதவி வகித்தார்.

ரூபவாஹினிச் சேவையில் மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் செய்திகள் ஒளிபரப்பப்பட்டன. தமிழ் மற்றும் முஸ்லிம் நிகழ்ச்சிகளும் தயாரித்து ஒளிபரப்பப் பட்டன. ரூபவாஹினி அலைவரிசைகள் சக்திமிகு ஒளிபரப்பிகளைக் கொண்டு ஒளிபரப்பப்படுவதனால் நாடளாவிய ரீதியில் அதிகளவு மக்கள் பார்க்கும் ஒளிபரப்பாக அது வளர்ந்தது.

1999ஆம் ஆண்டு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் இரண்டாவது அலைவரிசையாக "EYE" அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டது. இதில் தமிழ் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. ஐ அலைவரிசையில் "நேத்ரா" என்ற பெயரில் குறிப்பிட்ட நேரங்களில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. தொடர்ச்சியாக விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் மட்டுப்படுத்தப்பட்டே ஒளிபரப்பாகின்றன. தமிழ்ச் செய்திகளும் தமிழ் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகும் நேரத்தில் மட்டும் "நேத்ரா" என்று பெயரிடப்பட்டுள்ளது.

## ரீ.என்.எல்.

இப்பொழுது தனியார் தொலைக்காட்சி சேவைகளும் இலங்கையில் உள்ளன. 1979இல் சுயாதீனத் தொலைக்காட்சியை ஆரம்பித்த திரு. சாண் விக்கிரமசிங்க அந்த நிலையத்தை அரசு பொறுப்பேற்றதனால் "ரி.என்.எல்." என்ற பெயரில் புதிய தொலைக்காட்சி சேவை ஒன்றை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உள்நாட்டு சிங்கள நிகழ்ச்சிகளையும் அரசியல் விவாதங்களையும் தமிழ்த் திரைப்படங்களையும் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் செய்திகளையும் ஒளிபரப்பி வருகிறது.

**சக்தி ரி.வி.**

மகாராஜா கூட்டு நிறுவனம் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் "எம்.ரி.வி." என்ற ஒளிரப்புச் சேவையை ஆரம்பித்தது முதலில் வெளிநாட்டு ஆங்கில நிகழ்ச்சிகளையே ஒளிபரப்பியது. பின்பு ஆங்கிலத்தில் செய்திகளை வெளியிட்டது. காலப்போக்கில் எம்.ரி.வி. நிறுவனம் ஆங்கில மொழி ஒளிபரப்போடு சேர்த்து பன்மொழிச் சேவையாக தமிழ் மொழி நிகழ்ச்சிகளையும் "சக்தி" என்ற பெயரில் ஒளிபரப்பியது.

மகாராஜா கூட்டு நிறுவனம் 1988இல் 'சிரச' என்ற பெயரில் சிங்கள ஒளிபரப்பை ஆரம்பித்தது. சிங்கள நாடகங்களுடன் இசை நடன நிகழ்ச்சிகளையும் தயாரித்து ஒளிபரப்பி வருகிறது. ஹிந்தி நாடகங்களை சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்து ஒளிபரப்புகிறது. பிரதான செய்திகளையும் ஒளிபரப்பி வருகிறது.

எம்.ரி.வி. நிறுவனத்தில் தமிழ் ஒளிபரப்பாக சக்தி ரி.வி. 1998 செடெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டு சேவைகள் ஒளிபரப்பப்பட்டபோது அவை ஒரே அலைவரிசையில் இடம்பெறுகின்றன. சக்தி ரி.வி. அதிகமாக சன் ரி.வி.யின் நிகழ்ச்சிகளை மீள் ஒளிபரப்புச் செய்கிறது. 2007ஆம் ஆண்டுமுதல் முழுநேரத் தமிழ்ச் சேவையாக ஒளிபரப்பி வருகின்றது. சில தமிழ் நிகழ்ச்சிகள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உபதலைப்புடன் ஒளிபரப்பாகி வருகின்றன. சிறுபான்மை மக்களின் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் ஒளிபரப்பப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்ணவாஹினி

ஈ.ஏ.பி. எதிரிசிங்க நிறுவனம் 1996 முதல் E.T.V.-1, E.T.V.-2 ஆகிய ஆங்கில சேவையை ஆரம்பித்தது. அது சுவர்ணவாகினி என்ற பெயரில் சிங்கள மொழி ஒளிபரப்பாக 1997 மார்ச் மாதம் ஆரம்மாகியது. செய்திகள், விவரண நிகழ்ச்சிகள், அரசியல் விவாதங்கள், சிறுவர் நாடகங்கள் என பல்வேறு சிங்கள நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. வாரத்திற்கு ஒருமுறை தமிழ், ஹிந்தி, ஆங்கிலப் படங்களை சிங்கள உபதலைப்புகளுடன் ஒளிபரப்பி வருகிறது. செய்திகள் சிங்கள மொழியில் மட்டுமே ஒளிபரப்பாகின்றன.

## E.T.V.

ஈ.ஏ.பி. எதிரிசிங்க நிறுவனத்தின் E.T.V. Entertainment Television சர்வதேச ஆங்கில மொழி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றது. உள்நாட்டு விவரண நிகழ்ச்சிகளும் வர்த்தகச் செய்திகளும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

## ARTV

2003ஆம் ஆண்டு ஏ.ஆர். ரி.வி. ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச ஆங்கில மொழி நிகழ்ச்சிகளுடன் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் செய்திகள் அறிவிப்புகள் எழுத்தில் மட்டும் ஒளிபரப்பாகின்றன.

## T.V. Lanka

ரி.வி. லங்கா செய்மதி ஒளிபரப்புச் சேவை 2001இல் ஆரம்பிக்கப்பட்டது. நாடகங்கள், இசை, விவரணம், சிறுவர் நிகழ்ச்சி செய்திகள் போன்றவை சர்வதேச ரீதியாக சிங்கள மொழியில் ஒளிபரப்பப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் சிங்கள மொழி பேசும் இலங்கையர்களை நோக்கமாகக் கொண்டு நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி வருகிறது.

**தெரண**

வர்த்தக நோக்கிலான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவ தோடு சிங்களத்தில் செய்திகளையும் அரசியல் விவாதங் களையும் விசேட தினங்களில் புதிய தமிழ் படங்களையும் ஒளிபரப்பி வருகிறது.

## MEX T.V.

இது *17-01-2007*இல் ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள மொழி நிகழ்ச்சிகளையும் ஆங்கில நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி வருகிறது. இந்தியாவிலிருந்து செய்மதியூடாக ஒளிபரப்பாகும் சில ஆங்கில நிகழ்ச்சிகளையும் மீள் ஒளிபரப்புச் செய்கிறது.

**சியத்த T.V.**

இது *17-09-2009*இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் குறுகிய பரப்புக்குள் இருந்த இச்சிங்கள ஒளிபரப்பு தொடர்ந்து நாடு முழுவதும் விஸ்த்தரிக்கப்பட்டது

லங்கா ரி.வி. நெத் ரி.வி., உதயம் ரி.வி. போன்றனவும் இப்போது இயங்குகின்றன.

மேலும் சில நிறுவனங்கள் ஒளிபரப்புகளை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
06 OCT 2018
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## 08

# இலங்கையில் தமிழ்த் திரைப்படங்கள்

சினிமா என்பது ஓர் உன்னத கலைச்சாதனமாகும். பல கலைகளையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் அதிசயமான கலைத் தொழிலாகும். வேடிக்கையாக ஆரம்பித்த அந்தச் சினிமா, வேகமாக உலகமெங்கும் பரவி அனைத்து மக்களையும் ஈர்த்துநிற்கும் தொழிலாக மாறிவிட்டது. தமிழ்ச் சினிமா என்றதும் பெரும்பாலும் தமிழ் நாட்டையே பலரும் நினைக்கிறார்கள். ஆனாலும் இலங்கையிலும் பல தமிழ்ப் படங்கள் உருவாகியிருக் கின்றன என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும் இலங்கையில் இதுவரை 50க்கு மேற்பட்ட திரைப்படங்கள் உருவாகி இருக்கின்றன என்றுசொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இப்படி இங்கு உருவான 50 தமிழ்த் திரைப்படங்களில் 40 திரைப்படங்கள் மட்டுமே திரைக்கு வந்திருக்கின்றன.

இலங்கையில் உருவான கதைத் திரைப்படங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. குறுந்திரைப் படங்கள்

2. சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்கள் (டப் படங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தமிழ் மொழியிலேயே தயாரிக்கப்பட்ட முழுநீளப் படங்கள்

4. இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்புகள்

'சமுதாயம்', 'பாச நிலா' ஆகிய இரண்டு படங்களும் 16 மி.மீட்டர் செலுலோயிட் பிலிமில் தயாரிக்கப்பட்ட குறுந் திரைப்படங்களாகும். டிஜிட்டல் முறையில் தயாரிக்கப்பட்ட பல படங்களும் இருக்கின்றன. 'கலியுக காலம்', 'நான்கு லட்சம்', 'யார் அவள்', 'சுமதி எங்கே', 'ஒரு தலைக் காதல்', 'பனிமலர்கள்', 'இவளும் ஒரு பெண்', 'அஜாசத்த', 'ஆகாயப் பூக்கள்', 'மாதா' ஆகிய பத்துப் படங்களும் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்களாகும்.

'தோட்டக்காரி', 'கடமையின் எல்லை', 'டாக்ஸி டிறைவர்', 'நிர்மலா', 'மஞ்சள் குங்குமம்', 'வெண்சங்கு', 'குத்துவிளக்கு', 'மீனவப்பெண்', 'புதிய காற்று', 'கோமாளிகள்', 'பொன்மணி', 'காத்திருப்பேன் உனக்காக', 'நான் உங்கள் தோழன்', 'வாடைக்காற்று', 'தென்றலும் புயலும்', 'தெய்வம் தந்த வீடு', 'ஏமாளிகள்', 'அநுராகம்', 'எங்களில் ஒருவன்', 'மாமியார் வீடு', 'நெஞ்சுக்கு நீதி', 'இரத்தத்தின் இரத்தமே', 'அவள் ஒரு ஜீவநதி', 'நாடு போற்ற வாழ்க', 'பாதை மாறிய பருவங்கள்', 'ஷர்மிளாவின் இதயராகம்', 'மண்', 'ஒரே நாளில்', 'இனி அவன்', 'இங்கிருந்து', 'கீறல்கள்', 'மனசுக்குள் ஒரு மழைச் சாரல்', 'கோமாளிகள் கிங்ஸ்' ஆகிய 33 திரைப்படங்களும் முழு நீளத்திரைப்படங்களாகும்.

'நெஞ்சுக்குத் தெரியும்', 'இளைய நிலா', 'உங்களில் ஒருவன்', 'காதல் கடிதம்' என்பன தயாரித்து முடிக்கப்பட்டும் திரைக்கு வராத திரைப்படங்கள். 'பைலட் பிறேம்நாத்', 'தீ', 'நங்கூரம்', 'நீலக் கடலின் ஓரத்திலே', 'மோகனப் புன்னகை', வசந்தத்தில் ஓர் வானவில் போன்ற படங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் எடுக்கப்பட்ட இந்தியப் படங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படங்களுடன் இலங்கைக் கலைஞர்களுக்கு தொடர்பு இருந்தாலும் தயாரிப்பு என்ற ரீதியில் இவை இந்தியப் படங்களே. இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்புகள் என்று கூறலாம்.

இத்தனை படங்களையும் உருவாக்குவதற்கு நம் கலைஞர்கள் எத்தனை பாடுபட்டிருப்பார்கள்? எத்தனையோ தடைக்கற்களைத் தாண்டி வரவேண்டியிருந்தது. உண்மையான கலைஞர்கள் பலரின் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து பிறந்தவைதான், இந்த இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள்.

தமிழ்ச் சினிமா பிறந்த தென்னிந்தியாவிலேயே இன்று கூடத் தயாரிப்பாளர்கள் ரசிகர்களைப் புரிந்துகொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள். கலை ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் வளர்ந்துவிட்ட அங்குகூட இப்படியான ஒரு நிலை. அதிக வசதிகள் அற்ற அந்தக் காலத்திலேயே இலங்கையில் இத்தனை தமிழ்ப் படங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் இந்தக் கலைஞர்கள் எத்தனை பெரிய கெட்டிக்காரர்கள்? ஆத்ம திருப்திக்காக அவர்கள் ஈடுபட்ட மாபெரும் கலைமுயற்சிகள் எத்தனை பெருமை வாய்ந்தவை?

முதலாவது சிங்களம் பேசும் படமான ‘கடவுணு பொறந்துவ’ 1949ஆம் ஆண்டு வெளிவந்தது. சுந்தரம் மதுர நாயகம் (எஸ்.எம். நாயகம்) என்ற தமிழரே இந்த முதலாவது சிங்களப் படத்தைத் தயாரித்தார். உண்மையான சிங்களக் கலாசாரத்தைப் பிரதிபலிக்காமலும் பிறமொழிப்படங்களைத் தழுவியும் ஆரம்பித்த சிங்களச் சினிமா இன்று தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துவிட்டது.

சிங்களச் சினிமாவை ஆரம்பித்தவர்கள் மட்டுமல்ல வளர்த்து விட்டவர்களும் தமிழ் பேசும் கலைஞர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது சிங்களப்படத்தை தயாரித்தவர் எஸ்.எம். நாயகம் என்ற தமிழர் என்பதுபோல முதலாவது தமிழ்ப்படத்தை (16.மி.மீ) தயாரித்தவர் மலையாளப் பரம்பரையில் வந்த ஹென்றி சந்திரவன்ச என்பவரேயாவார்.

இலங்கையில் தமிழ்ப் படத்தயாரிப்பு முயற்சிகள் 1951ஆம் ஆண்டளவில் ஆரம்பமாகிவிட்டன. நாடக அனுபவமும் சினிமா ஆர்வமுமுள்ள இலங்கைக் கலைஞர்கள் சிலர் மலையகத்தில் இலங்கையில் தமிழ்ச் சினிமாவை ஆரமபித்து வைத்தவர்கள் என்ற பெருமையைத் தேடிக் கொண்டார்கள். அவர்கள்தாம் எம்.வி. ராமன், ஏ. அருணன், வி. தங்கவேலு, ஹென்றி சந்திரவன்ச போன்ற கலைஞர்கள். இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ‘சினிமா கலா நிலையம்’ என்ற மன்றத்தை உருவாக்கினார்கள். இவர்கள் தயாரிக்கும் படத்துக்கு ‘சமுதாயம்’ என்று பெயர் சூட்டினார்கள். கதாநாயகன் வி. தங்கவேலு, கதாநாயகி தர்மதேவி. 35 மி.மீட்டரில் கறுப்பு வெள்ளை நிறத்தில் சில ஆயிரம் அடிகள் வளர்ந்த ‘சமுதாயம்’ இடையில் நின்று கொண்டது. இந்தக் குழுவின் ஒரு அங்கத்தவரான ஹென்றி சந்திரவன்ச நடிகர்களை மாற்றி 16 மி.மீட்டரில் ‘சமுதாயம்’ என்ற பெயரில் தமிழ்ப் படமொன்றை உருவாக்கினார்.

ஏ. அருணனும் வி. தங்கவேலுவும் சேர்ந்து ‘புரட்சி’ என்ற பெயரில் தமிழ்ப்படமொன்றை உருவாக்க முனைந்தனர். எம்.வி. ராமனும் இன்னும் சிலரும் சேர்ந்து ‘மலைவாசல்’ என்ற பெயரில் படமொன்றை தயாரிக்க முனைந்தனர். எஸ்.எம். நாயகம் ‘கடல் கடந்த தமிழர்’ என்ற பெயரில் தமிழ்ப் படமொன்றைத் தயாரிக்கமுனைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் முதலாவது தமிழ்த் திரைப்படம் சமுதாயமா?

ஹென்றி சந்திரவன்ச முதன் முதலில் 16 மி.மீட்டர் பிலிமில் தயாரித்த **'சமுதாயம்'** (குறுந் திரைப்படம்) 1962ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. ஒரே ஒரு பிரதியை மட்டும் எடுக்கக் கூடிய அமைப்பு முறை கொண்டது. அதை திரையிடக்கூட தியேட்டர் கிடைக்கவில்லை. அதனால் மண்டபம் ஒன்றிலேயே சமுதாயத்தைக் காண்பித்தார்கள். 1962ஆம் ஆண்டு பொரளை வை.எம்.பி.ஏ. மண்டபத்தில் விசேட ஏற்பாட்டின்பேரில் 'சமுதாயம்' திரையிடப்பட்டது. அப்போதைய வீரகேசரி ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பிற ஊர்களிலும் மன்றங்களிலும் பாடசாலைகளிலும் இத்திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

## இலங்கையின் முதலாவது தமிழ்த் திரைப்படம் "தோட்டக்காரி"யே!

1960ஆம் ஆண்டு ஏ. அருணனிடமிருந்து பிரிந்து சென்ற வி. தங்கவேலு பி.எஸ். கிருஷ்ணகுமாருடன் ஒன்று சேர்ந்து **"தோட்டக்காரி"** என்ற படத்தை உருவாக்கினார். படத்தின் இறுதிக் கட்டத்தை பூர்த்திசெய்ய எஸ். ஆர். முத்துவேலுவும் அவர் மனைவி ரஞ்சனியும் பணஉதவி செய்தனர். இத்திரைப்படம் 27-09-1963இல் கொழும்பில் கிங்ஸ்லி உட்பட 9 தியேட்டர்களில் திரையிடப் பட்டது. 35 மி.மீட்டர் 'தோட்டக்காரியே' இலங்கையின் முதலாவது பூரணமான முழு நீளத் தமிழ்த் திரைப்படம் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. 'தோட்டக்காரி' பற்றி வீரகேசரி (11-08-1963)யில் ராஜீ என்பவர் விமர்சனம் எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது திரைப்படத்தில் குறைகள் அதிகம். நிறைவுகள் சொற்பம் என்று எதிர்பார்ப்பது சகஜம். அந்த எண்ணத்துடன் சென்ற எனக்கு ஏககாலத்தில் ஏமாற்றமும் மகிழ்ச்சியுமாக இருந்தது. 'தோட்டக்காரி' தரமான படமாக தென்பட்டதே அதற்கு காரணம். ஜெயஸ்ரீயும் கிருஷ்ண குமாரும் ரசிகர்கள் பாராட்டும்படி நடித்திருக்கிறார்கள்" என்று அந்த விமர்சனம் தொடர்ந்தது.

## தமிழ்ப்படமாக மாறிய ஆங்கில நாடகம்

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஆங்கில விரிவுரையாளரான எம். வேதநாயகம் தயாரித்த படம்தான் **'கடமையின் எல்லை'** ஆகும். சேக்ஷ்பியரின் 'ஹம்லட்' நாடகத்தின் தமிழாக்கம்தான் இத்திரைப்படம். இலங்கையில் தமிழில் முதலாவதாக தயாரிக்கப்பட்ட சரித்திரப்படம்தான் இது. பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் பொருளாதார ரீதியில் தோல்விப் படமாகியது. 'கடமையின் எல்லை' திரைப்படத்தைப் பற்றி அப்போதைய பத்திரிகைகள் பல்வேறு விமர்சனங்களை எழுதின. அக்கால சூழ்நிலையை அறிந்த எந்தப் பத்திரிகையும் குறைகளை அதிகமாக எழுதவில்லை. வீரகேசரி (4-10-66) பத்திரிகையும் விமர்சனம் எழுதியது. "சேக்ஷ்பியரின் கதைகள் எதுவும் தமிழில் முழுப்படமாக வெளிவரவில்லை. அம்முயற்சியை துணிந்து மேற்கொண்டு சரித்திரப்படமாகத் தயாரித்திருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று அந்த விமர்சனம் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக்குள் உருவான திரைப்படம்

1965ஆம் ஆண்டளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய ஜோ. தேவானந்த் உருவாக்கிய குறுந்திரப்படம்தான் **பாசநிலா.** 16 மி.மீட்டரில் ரெக்னிக் கலரில் உருவான இத்திரைப்படத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களுடன் ஏ.ஈ. மனோகரனும் முதன் முதலில் நடித்தார். இவர்களுடன் ஜடாதுரைசிங்கம், ஜயேந்திரா ஆகியோரும் நடித்தனர். பாசநிலா தியேட்டர்களில் திரையிடப்படவில்லை. கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் வடகிழக்கு பாடசாலைகளிலும் இத்திரைப்படம் திரையிடப்பட்டது. இந்த திரைப்படத்தை உருவாக்கிய ஜோ. தேவானந் பிற்காலத்தில் பல சிங்களப் படங்களை உருவாக்கினார். தென்னிந்திய நடிகர்களை வைத்து 'இரத்தத்தின் இரத்தமே' என்ற படத்தை உருவாக்கும் அளவுக்கு உயர்ந்தார்.

## கணவனும் மனைவியும் உருவாக்கிய திரைப்படம்

பல சிங்களப் படங்களுக்கு ஒலிப்பதிவு செய்தவர் சுண்டுக்குழி சோமசேகரன். இவரும் இவரது மனைவி மாலினி சோமசேகரனும் சேர்ந்து உருவாக்கிய படம்தான் **'டைக்ஷி டிறைவர்'.** அப்பொழுது இலங்கை வானொலியில் புகழ்பெற்று விளங்கிய கலைஞர்கள் இத்திரைப்படத்தில் நடித்தார்கள். சானா சண்முகநாதன், எஸ். ராஜேஸ்வரன், தேவன் அழகக்கோன், ரோசாரியோ பீரிஸ், எம்.வி.பாலன், யோகா தில்லைநாதன், சந்திரகலா ஆகியோர் நடித்தனர். 'டைக்ஷி டிறைவர்' 27-12-66இல் திரைக்கு வந்தது. "முன்வந்த படங்களைவிட இது சிறந்து விளங்கியது" என்று பத்திரிகைகள் விமர்சனம் எழுதின. இந்த தம்பதிகளின் இரண்டாவது தயாரிப்புத்தான் 'நெஞ்சுக்கு நீதி'. இதில் இலங்கை இந்திய மலேசியக் கலைஞர்கள் நடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ. ரகுநாதனின் நிர்மலா

இலங்கை திரையுலக முன்னோடிகளில் ஒருவர்தான் ஏ. ரகுநாதன். இவர் தயாரித்த படம்தான் **'நிர்மலா'** இந்தியாவில் பயிற்சிபெற்ற எம். அருமைநாயகம் படத்தை இயக்கினார். துறையூர் மூர்த்தியின் மூலக்கதைக்கு கதை வசனம் எழுதினார் நவாலியூர் நடேசன். நடிகர்கள் நாடளாவியரீதியில் தேர்வு செய்யப்பட்டார்கள். த. தங்கவடிவேல், சந்திரகலா, ஏ. ரகுநாதன், எஸ். விஸ்வநாதராஜா, சிலோன் சின்னையா, கோகிலா ராஜரட்ணம் போன்றோர் நடிகர்களாக தெரிவு செய்யப் பட்டார்கள். 15-07-68இல் 'நிர்மலா' திரையிடப்பட்டது. "நிர்மலா"வும் ஆரம்பகாலப்படம் என்பதால் சில குறைகள் இருக்கவே செய்தன. ஆனாலும் தொடரும் படங்களுக்கு 'நிர்மலா' வழிகாட்டியாக அமைந்தது எனலாம்.

## "மஞ்சள் குங்குமம்" மேடை நாடகம் திரைப்படமாக மாறியது

பிரபல புகைப்படக் கலைஞர் கிங்ஸ்லி செல்லையாவின் மேடைநாடகம்தான், **மஞ்சள் குங்குமம்**. இந்நாடகத்தை திரைப்படமாக உருவாக்க முனைந்தார்கள் சில கலைஞர்கள். ஸ்ரீசங்கர், ஏ. சுந்தரஐயர், எம். பதூர்தீன், ஏ. பரஞ்சோதி, ஏ. நாராயணசாமி ஆகியோரே அந்தக் கலைஞர்கள். எம்.வி. பாலன் திரைப்படத்தை இயக்கினார். உதவி நெறியாளர் அந்தனி ஜீவா. ஸ்ரீசங்கர், எம். உதயகுமார், ஹெலன்குமாரி, ரொசாரியோ பீரிஸ், சிலோன் சின்னையா, ஏ.நெயினார், ஏ.எஸ். ராஜா, மஞ்சுளா, ருத்ராணி, மணிமேகலை போன்றோர் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். 'மஞ்சள் குங்குமம்' 14-03-70இல் திரையிடப்பட்டது. அப்போது தியேட்டர்கள் நிர்வாகம் தனியார் கைகளில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் இப்படத்துக்குப் போட்டியாக எம்.ஜி.ஆரின் 'அடிமைப்பெண்' சிவாஜியின் 'தில்லானா மோகனாம்பாள்' போன்ற படங்களை திரையிட்டனர். ஆனாலும் 'மஞ்சள் குங்குமம்' சுமாராக ஓடியது.

## சிங்களப் படத் தயாரிப்பாளரின் தமிழ்ப்படம்

இந்தியாவில் பல தமிழ் சிங்களப் படங்களைத் தயாரித்தவர் தான் டபிள்யூ.எம்.எஸ். தம்பு. இவர் தயாரித்த இலங்கைத் தமிழ்ப்படத்தின் பெயர்தான் "**வெண் சங்கு**. சிறில் பெர்னான்டோ, சந்திரா கணேசானந்தன், பரமானந்தன் ஆகியோர் கதை வசனம் எழுதினார்கள். அராலி புவனேந்திரன், குமாரி ராஜம், லடீஸ் வீரமணி, ஏ.எஸ். ராஜா, ரொசாரியோ பீரிஸ், எம்.ஏ. ஜபார், இந்திராணி, சுப்புலட்சுமி போன்றோர் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். 'அடங்காப்பிடாரி' என்ற யாழ்ப்பாண மேடைநாடகத்தின் காட்சிகளும் படத்தின் இடையே சேர்க்கப்பட்டன. 'வெண் சங்கு' 31-10-70இல் தியேட்டர்களில் திரையிடப் பட்டது. இப்படத்துக்கும் போட்டியாக பல தென்னிந்தியப் படங்கள் திரையிடப்பட்டன. 'வெண் சங்கு' சுமாராக ஓடியது. தம்பு நிறுவன ரீதியாக பல சிங்களப் படங்களை தயாரித்து வெற்றி கண்டவர் என்பதால் இந்த தமிழ்ப்படத்தின் தோல்வி அவரைப் பெரிதாக தாக்கவில்லை.

## யாழ்ப்பாண விவசாயியின் கதை திரைப்படமாகியது

இலங்கையின் பிரபலமான கட்டிடக் கலைஞர்தான் வி.எஸ். துரைராஜா. இவர் தயாரித்த படம்தான் **"குத்துவிளக்கு"** ஈழத்து இரத்தினம் கதை, வசனம், பாடல்கள் எழுதினார். உரையாடல்கள் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்தன. எஸ். மகேந்திரன் திரைப்படத்தை இயக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயகாந்த், ஆனந்தன், லீலா நாராயணன், இந்திராதேவி, எம்.எஸ். இரத்தினம், பேரம்பலம், திருநாவுக்கரசு, யோகா தில்லைநாதன், நாகேந்திரன், சாந்திலேகா போன்றோர் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். நல்ல விளம்பரத்தின் பின் 24-02-72இல் 'குத்துவிளக்கு' திரையிடப்பட்டது. இப்படத்தைப் பற்றி எஸ்.என். தனரத்தினம் 'வீரகேசரி'யில் விமர்சனம் எழுதினார். 'தேசிய விழிப்புணர்ச்சியை தூண்டிய முதல் ஈழத்துத் தமிழ்ப்படம் 'குத்து விளக்கு'. இப்படம் இலங்கையில் வெற்றித் தமிழ் திரைப்படங்களைத் தயாரிக்க முடியும் என்பதை நிரூபித்துவிட்டது' என்று அவர் எழுதினார்.

## நீண்டகாலம் தயாரிப்பில் இருந்த தமிழ்ப்படம்

இலங்கையின் முதலாவது தமிழ்த் திரைப்படமான 'தோட்டக்காரி'யை உருவாக்கியவர் பி.எஸ். கிருஷ்ணகுமார். இவர் இயக்கிய இரண்டாவது படம்தான் **"மீனவப் பெண்"**. எம்.எல். ஜெயகாந்த், தேவன் அழகக்கோன், சிலோன் சின்னையா, சுசில்குமார், ரா்ஜலக்சுமி, லீலா ரஞ்சனி போன்றோர் நடிகர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். படம் 10 வருடங்கள் தயாரிப்பில் இருந்துவிட்டது. பணக் கஷ்டத்தால் தடுமாறிய கிருஷ்ணகுமாருக்கு கே. காதரும் மீரா முதலீப்பும் உதவி செய்து படத்தை திரைக்குக் கொண்டு வந்தனர். 1973ஆம் ஆண்டு இப்படம் திரையிடப்பட்டது. பத்திரிகைகளும் காரசாரமாக விமர்சனம் செய்யவில்லை. படம் சுமாராகவே இருந்தது. சுமாராகவே ஓடியது.

## வி.பி. கணேசன் தயாரித்த மூன்று தமிழ்ப் படங்கள்

இலங்கையில் தமிழ்த்திரை உலகில் புதியகாற்று வீசவேண்டும் என்ற எண்ணத்துடன் முன்வந்த வி.பி. கணேசன் மலையகப் பிரச்சினையைத் தொட்டுக் காட்டி **"புதியகாற்று"** என்ற பெயரில் படமொன்றை தயாரித்தார். வி.பி. கணேசன் நாயகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரினாலை, கதாநாயகி. மற்றும் டீன்குமார், வீணாகுமாரி, எஸ். ராம்தாஸ், எஸ்.என். தனரத்தினம், சிலோன் சின்னையா, கே.ஏ. ஜவாஹர், ஜோபு நஸீர், செல்வம் பெர்னான்டோ, விமல் சொக்கநாதன், ஏ.ஈ. மனோகரன், ஏ. ரகுநாதன், சந்திரகலா ஆகியோரும் நடித்தனர். பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக இந்தியக் கவிஞர் பூவை செங்குட்டுவனைக் கொண்டு பாடல்கள் எழுதுவித்தார். வி. முத்தழகு, எஸ். கலாவதி, பாலச்சந்திரன் போன்ற பாடகர்களை சினிமாப் பாடகர்களாக அறிமுகப்படுத்தினார். எஸ். ராமநாதன் என்ற அனுபவசாலி படத்தை இயக்கினார். பலத்த விளம்பரத்தின் பின் 'புதியகாற்று' 03-10-75இல் திரைக்கு வந்தது. பத்திரிகைகள் வி.பி. கணேசனின் துணிவைப் பாராட்டி எழுதின. கொழும்பில் 34 நாட்களும் யாழ்ப்பாணத்தில் 38 நாட்களும் தொடர்ந்து ஓடியது. இலங்கையில் அதுவரை தயாரிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்களை வரிசைப்படுத்திப் பார்க்கும்பொழுது 'புதிய காற்று' புதிய நம்பிக்கையை ஊட்டியுது.

வி.பி. கணேசன் தயாரித்த இரண்டாவது படத்தின் பெயர் **"நான் உங்கள் தோழன்"**. இப்படத்தை இயக்கியவர் எஸ்.வி. சந்திரன். கணேசன் கதாநாயகன். கதாநாயகி சுபாஷினி. கே.ஏ. ஜவாஹர், எம்.எம்.ஏ. லதீப், எஸ். ராம்தாஸ், எம். ஏகாம்பரம், எஸ்.என். தனரெத்தினம், ஹரிதாஸ், சின்னையா, சிவலிங்கம், தம்பிராசா, டொன் பொஸ்கோ, ஆர்.ரி. ராஜா, சிதம்பரம் போன்றோர் நடித்தனர். இப்படத்தின் பாடல்களும் அருமையாக அமைந்தன. எம்.கே. றொக்சாமி பாடல்களுக்கு இசையமைத்தார். அனுபவப்பட்ட ஒளிப்பதிவாளர் வி. வாமதேவன் படத்தை ஒளிப்பதிவு செய்தார். படம் 06-01-78இல் திரைக்கு வந்தது. கொழும்பில் 55 நாட்களும் யாழ்ப்பாணத்தில் 56 நாட்களும் ஓடியது. ஜனரஞ்சகமான அம்சங்கள் இப்படத்தில் இடம்பெற்றன.

வி.பி. கணேசன் தயாரித்த மூன்றாவது படத்தின் பெயர் **"நாடு போற்ற வாழ்க"**. இப்படத்தில் இவருக்கு இரண்டு கதாநாயகிகள். அவர்கள்தான் கீதா குமாரசிங்கவும் சுவர்ணா மல்லவாரச்சியும் மற்றும் கே.எஸ். பாலச்சந்திரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ராம்தாஸ், எம். ஏகாம்பரம், லதீப், செல்வசேகரன், சிதம்பரம், மணிமேகலை போன்றோரும் நடித்தனர். யசபாலித்த நாணயக்கார இயக்கிய இப்பத்துக்கு ஒளிப்பதிவாளர் ஜே.ஜோகராஜா. ஈழத்து ரத்தினம் இயற்றிய பாடல்களுக்கு சரத் தசநாயக்க இசையமைத்தார். பலத்த விளம்பரத்தின் பின் 31-07-81இல் படம் திரைக்கு வந்தது. கொழும்பில் நான்கு வாரங்களும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் இரண்டு வாரங்களும் ஓடியது.

## திரைப்படமாக மாறிய வானொலி நாடகம்

இலங்கையில் பிரபலமான வானொலிக் கலைஞர் எஸ். ராம்தாஸ். அவர் எழுதி வானொலியில் ஒலிபரப்பாகி வந்த நாடகத்தின் பெயர் "கோமாளிகள் கும்மாளம்". இந்த நாடகத்தை இவரும் எம். முஹமட் என்ற தயாரிப்பாளரும் சேர்ந்து **'கோமாளிகள்'** என்ற பெயரில் திரைப்படமாக உருவாக்கினார்கள். படத்தை இயக்கியவர். எஸ். ராமநாதன் ஒளிப்பதிவாளர் ஜே. ஜோகராஜா. நடிகர்களாக பல வானொலிக் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். எஸ். ராம்தாஸ், ரி. ராஜகோபால், எஸ். செல்வசேகரன், பி.எச். அப்துல் ஹமீட், சில்லையூர் செல்வராஜன், கமலினி செல்வராஜன், சுப்புலட்சுமி காசிநாதன், ஆனந்தராணி, செல்வம் பெர்னான்டோ ஆகியோர் நடித்தனர். 'கண்ணன் நேசம்' இரட்டையர்கள் இசையமைத்தனர். 45 நாட்களுக்குள் தயாரித்து முடிக்கப்பட்ட இத்திரைப்படம் 22-10-76இல் திரையிடப்பட்டது. கொழும்பில் 76 நாட்களும் யாழ்ப்பாணத்தில் 51 நாட்களும் தொடர்ந்து ஓடியது. இத்திரைப்படத்தின் பொருளாதார ரீதியான வெற்றி, இலங்கையில் இனிமேல் தமிழ் படங்களை வெற்றிகரமாகத் தயாரிக்கலாம் என்ற நம்பிக்கையை ஊட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் மகளின் கதையாகலாம்

விளம்பர விற்பன்னர் ஒருவர் தான் உருவாக்கிய படத்துக்கு வழங்கிய விளம்பர வசனம்தான் 'உங்கள் மகளின் கதையாகலாம்' என்பதாகும். காவலூர் ராஜதுரை என்ற அந்த விற்பன்னர் அந்த படத்துக்கு சூட்டிய பெயர் **'பொன்மணி'**. படத்தை இயக்கியவர் சிங்களவரான பத்திராஜா என்பவர். பாலச்சந்திரன். சுபாஷினி ஆகியோர் பிரதான கதாபாத்திரங்களில் நடித்தனர். இவர்களுடன் பல புத்தி ஜீவிகளும் நடித்தனர். நந்தி சிவஞானசுந்தரம், திருநாவுக்கரசு, பவானி திருநாவுக்கரசு, எஸ். யோகநாதன், அழகரத்தினம், மன்மதராயர், கமலா தம்பிராஜா, சித்திரலேகா, மௌனகுரு, என். சண்முகலிங்கம், லடீஸ் வீரமணி போன்றோர் நடிகர்களாக தெரிவு செய்யப் பட்டார்கள். படம் 1977ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. இலங்கை திரைப்பட வரலாற்றில் பொன்மணி தென்னிந்தியத் திரைப்பட அமைப்பிலிருந்து வேறுபடும் முதல் முயற்சி எனலாம். தொழில்நுட்ப அழகியல் அம்சங்களை காத்திரமான முறையில் அறிந்து உணர்த்தும் உள்ளூர் கலைஞர்கள் எழுத்தாளர்களின் இணைப்பு முயற்சியால் இத் திரைப்படம் உருவாக்கியது. இந்தப் படத்துக்கு எழுதப்பட்ட விமர்சனங்கள்போல் வேறு எந்தத் தமிழ்ப் படத்துக்கும் விமர்சனம் எழுதப்படவில்லை. இலங்கை தேசிய தொலைக்காட்சியில் இத்திரைப்படமே முதன்முதலில் ஒளிபரப்பப்பட்டது. இத்திரைப்படம் பல வெளிநாடுகளிலும் காண்பிக்கப்பட்டது.

## சகோதரர்கள் தயாரித்த தமிழ்ப்படம்

மலையகத்தில் வத்தேகமவைச் சேர்ந்த எம். ஜெயராமச்சந்திரன், எம். தீனதயாளன், எம். ஜெயராஜ் ஆகிய சகோதரர்கள் தயாரித்த படம்தான் **"காத்திருப்பேன் உனக்காக"**. உண்மைக் கதையொன்றின் கதைக்கருவை தம்பி ஜெயராஜ் சொல்ல, நவாலியூர் நா. செல்லத்துரை இக்கதைக்கு வசனம் எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தை எஸ்.வி. சந்திரன் இயக்கினார். கதாநாயகன் எம். சிவராம், கதாநாயகி கீதாஞ்சலி. இவர்களுடன் விஸ்வநாதராஜா எம். லதீப், நா. செல்லத்துரை, தர்மலிங்கம், சந்திரகுமார், மித்திரகுமார், ருக்மணிதேவி, ஸ்ரீதேவி, கிருஷ்ணகுமாரி போன்றோரும் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். 24-06-77இல் படம் திரைக்கு வந்தது. உள்நாட்டுத் திரைப்பட வளர்ச்சியில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

படப்பிடிப்பு அருமையாக இருந்தது. பொருளாதார ரீதியில் இத்திரைப்படம் வெற்றி பெறவில்லையென்றாலும் பொதுவாக ரசிகர்கள் 'நல்ல படம்' என்று சொல்லுமளவுக்கு சிறந்து விளங்கியது.

## நாவல் திரைப்படமாகியது

பிரபல எழுத்தாளர் செங்கையாழியான் எழுதிய வீரகேசரி பிரசுர நாவலொன்றை அடிப்படையாக வைத்து **"வாடைக்காற்று"** திரைப்படம் உருவானது. வசனத்தை செம்பியன் செல்வன் எழுதினார். ஆர். மகேந்திரன், எஸ். குணரெத்தினம், உஷா சிவதாசன் ஆகியோர் படத்தை தயாரித்தார்கள். ஏ.ஈ. மனோகரன், டொக்டர் இந்திரகுமார், கே.எஸ். பாலச்சந்திரன், எஸ். யேசுரெட்ணம், கே.ஏ. ஜவாஹர், சந்திரகலா, ஆனந்தராணி, வசந்தா, ஜெயதேவி என்று பலர் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்னர். பேசாலையில் படப்பிடிப்புகள் ஆரம்பமாகின. 30-03-78இல் படம் திரைக்கு வந்தது. அப்பொழுது "வீரகேசரியின் ஆசிரியராக இருந்த பொன் ராஜகோபால் தன் கருத்தை எழுதினார். "வீரகேசரி பிரசுரமான வாடைக்காற்று நாவல் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதைப் படமாக்கியவர்கள் மண்வாசனையையும் தனித்துவத்தையும் பேண முற்பட்டிருந்தார்கள். சகல ரசிகர்களையும் திருப்திப்படுத்தி ஓடக்கூடிய தகமை இப்படத்துக்கு உண்டு" என்று அவர் எழுதினார். உண்மைதான், இலங்கை மீனவர்களின் கதையை ரசிகர்கள் திரையில் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை நாடகம் திரைப்படமாகியது

திருகோணமலையைச் சேர்ந்த டாக்டர் எஸ்.ஆர். வேதநாயகம் தயாரித்த படம்தான் **"தென்றலும் புயலும்"**. எம்.ஏ.கபூர் இயக்கிய இப்படத்தில் எஸ்.ஆர். வேதநாயகம், சிவபாதவிருதையர், அமரசிங்கம், சாம்பசிவம், கே.ஏ.ஜவாஹர், டீன்குமார், ஜோபு நஸீர் சந்திரகலா, ஹெலன்குமாரி, செல்வம் பெர்னான்டோ ஆகியோர் நடித்தனர். 12-04-78இல் இப்படம் திரைக்கு வந்தது. கதாநாயகிகள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நடித்தனர். பாடல் காட்சிகளை கபூர் நன்றாக படம்பிடித்திருந்தார். பெரும்பாலான காட்சிகள் திருகோணமலையில் ஒளிப்பதிவு செய்யப்பட்டன. "தென்றலும் புயலும்" திருகோணமலைக் கலைஞர்களின் படம் என்பதால் அங்கு இது ஒரு மாதத்துக்கு மேல் தொடர்ந்து ஓடியது. இலங்கைப் படங்கள் தொழில் நுட்பத் துறையில் முன்னேறுகின்றன என்பதற்கு இப்படம் நல்ல உதாரணமாகும்.

## முதலாவது சினிமாஸ்கோப் திரைப்படம்

ஹட்டன் லிபேர்டி தியேட்டர் உரிமையாளர் வி.கே.ரீ. பொன்னுசாமி 70 மி.மீட்டரில் தயாரித்த படம்தான் **'தெய்வம் தந்த வீடு'**. தில்லானா மோகனாம்பாள் படம்போல் உருவான இப்படத்தில் ஏ.ரகுநாதன், டீன்குமார், எஸ். விஸ்வநாதராஜா, கே.ஏ. ஜவாஹர், சந்திரகலா, றேலங்கி செல்வராஜா, சுப்புலட்சுமி போன்ற பலர் நடித்தனர். இலங்கையின் பல இந்துக் கோவில்களில் படப்பிடிப்பு செய்யப்பட்டது. இப்படத்தில் பழம்பெரும் கலைஞர்களும் பங்குபற்றினர். கலையரசு சொர்ணலிங்கம், புகுந்தான் யோசப், வி.வி. வைரமுத்து ஆகியோரும் தோன்றினர். 14-07-78இல் படம் திரைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலேயே தமிழில் வெளியான முதலாவது கறுப்பு வெள்ளை சினிமாஸ்கோப் (கலரில் இந்தியாவில் வெளிவந்திருக்கின்றன.) படம் என்ற பெயரை இப்படம் வாங்கித் தந்தாலும் அகலத்திரையில் இப்படத்தைக் காட்ட முயலும் போது சிறு நகரங்களில் பல சிக்கல்களை எதிர்நோக்கியது. சிறந்த படம் என்று கூறமுடியாவிட்டாலும் சிறந்த முயற்சி.

## இராம்தாஸின் இரண்டாவது படம்

'கோமாளிகள்' போல் ராம்தாஸ் எழுதிய **"ஏமாளிகள்"** வானொலி நாடகமும் திரைப்படமாக உருவாகியது. எஸ். ராமநாதன் இயக்கினார். ஒளிப்பதிவு யோகராஜா, கதாநாயகன் சிவராம், கதாநாயகி ஹெலன்குமாரி. எஸ். ராம்தாஸ், கே. ராஜகோபால், எஸ். செல்வசேகரன், கே.ஏ. ஜவாஹர், ராஜலட்சுமி, மணிமேகலை, ஜெயதேவி, செல்வம் பெர்னான்டோ ஆகியோரும் நடித்தார்கள். 06-10-78இல் திரையிடப்பட்ட இப்படம், கோமாளிகள் படத்தைப் போலவே ரசிகர்கள் மனதைக் கவர்ந்தது.

## ஒரே கதை இரண்டு மொழிகளில்

பிரபலமான சிங்களத் திரைப்பட இயக்குநர்தான் யசபாலித்த நாணயக்கார. இவர் ஒரே கதையை வைத்துக் கொண்டு சிங்களத்திலும் தமிழிலும் தனித்தனி படம் எடுத்தார். தமிழ்ப்படத்தின் பெயர் **"அநுராகம்"** ஒளிப்பதிவு யோகராஜா, சிவராம், சந்திரகலா கதாநாயகர்கள் இவர்களுடன் விஸ்வநாதராஜா செல்வம் பெர்னான்டோ, அனோஜா ஆகியோர் நடித்தனர். இனிமையான பாடல்களை ஈழத்து ரத்தினம் இயற்ற சரத்தசநாயக்க இசையமைத்தார். வீ. முத்தழகு பாடிய "எண்ணங்களாலே" என்ற பாடல் பிரபலமானது. 19 நாட்களுக்குள் தயாரிக்கப்பட்ட இப்படம் 1978ஆம் ஆண்டு திரையிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை இலங்கைப் படங்களில் இருந்த 'அமைச்சூர்' தன்மையின்றி வர்த்தக நோக்குடன் கூடிய ஜனரஞ்சகப் படமாக விளங்கியது. எத்தனையோ தமிழ்த் தயாரிப்பாளர்கள் பயந்து பின்னின்ற வேளையில் சிங்களவர் ஒருவர் துணிந்து இம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

## எஸ்.வி. சந்திரனின் நகைச் சுவைப்படம்

பிரபல சிங்கள திரைப்பட இயக்குனரான எஸ்.வி. சந்திரன் உருவாக்கிய நகைச்சுவைத் தமிழ்படம்தான் **"எங்களில் ஒருவன்".** எம்.ஜே.ஆப்தீன் தயாரித்த இப்பத்தில் பல நடிகர்கள் தோன்றினர். டொன் பொஸ்கோ, எஸ். செல்வசேகரன், எம். ஏகாம்பரம், ஏ. நெயினார், கே.ஏ. ஜவஹர், லதீப், அலெக்சாண்டர், விஜயராஜா, ஆர்.ரி. ராஜா, எஸ்.கே. ராஜன், ஜெனீடா, காஞ்சனா, ஜெயதேவி, மணிமேகலை ஸ்ரீதேவி, ரத்னகலா போன்றோர் நடித்தனர். 25க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றினர். 1979ஆம் ஆண்டு திரைக்கு வந்தது. மூலக்கதை, வசனம், நெறியாள்கை போன்ற பொறுப்புக்களை எஸ்.வி. சந்திரன் ஏற்றிருந்தார். தமிழ் திரைப்படத் தயாரிப்புகள் தொடருகின்றன என்பதற்கு இத்திரைப்படமும் உதவியது.

## இலங்கை இந்தியக் கலைஞர்கள் உருவாக்கிய திரைப்படம்

எஸ்.வி.சுப்பையா, ஜெயா, மீரா இவர்கள் இந்தியக் கலைஞர்கள். உதயகுமார், சிவகுமார், ராம்தாஸ், நடராஜா, சாந்திலேகா இவர்கள் இலங்கைக் கலைஞர்கள். இவர்களை ஒன்று சேர்த்து வெண்கடாசலம் என்ற 'வெண்கட்' உருவாக்கிய திரைப்படம் **மாமியார் வீடு**. திரைக்கதை, பாடல்கள், இயக்கம் அனைத்தையும் வெண்கட்டே பொறுப்பேற்றார். பேராசிரியர் சண்முகலிங்கம் உதவி இயக்குனர். எஸ்.பி.எம். ஸ்ரூடியோவில் உருவான இத்திரைப்படம் 16-09-79இல் திரைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டு சினிமா ரசிகர்களை மடக்கிப் பிடிப்பதற்கு சில தென்னிந்திய நடிகர்களையும் படத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. பின்நாட்களில் வந்த கூட்டுத்தயாரிப்புகளுக்கு இத்திரைப்படம் வழிகாட்டியது என்று கூடக்கூறலாம்.

## இலங்கை இந்திய மலேசிய நடிகர்கள் நடித்த படம்

சுண்டிக்குளி சோ சேகரனும் மாலினி தேவியும் சேர்ந்து உருவாக்கிய இரண்டாவது படம் 'நெஞ்சுக்கு நீதி' இந்திய நடிகர் ஸ்ரீகாந், மலேசிய நடிகர் சிவாஜி ராஜா ஆகியோருடன் ஏ. ரகுநாதன், டீன்குமார், கே.ஏ. ஜவாஹர், விஸ்வநாத ராஜா, எஸ். ராம்தாஸ், எஸ். ராஜகோபால், எம்.வி. பாலன், கலைச்செல்வன், ஜே.கு.றசிப், பரினாலை, ஹெலண்டு குமாரி, சந்திரகலா, யோகா தில்லைநாதன், ராஜலக்சுமி எனப் பலர் நடித்தனர். டென்மார்க் சண் இசையமைத்தார். 04-04-1980இல் திரைக்கு வந்தது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சுமார் ஒரு மாதம் ஓடியது.

## கொழும்பில் 100 நாட்கள் ஓடிய படம்

ஜோ தேவானந்தின் இயக்கத்தில் அரியரெத்தினம் தயாரித்த படம் **"இரத்தத்தின் இரத்தமே"** ஆகும். ஜெய்சங்கர், சிவச்சந்திரன், நாகேஷ், ராதிகா, அசோகன் இவர்கள் இந்திய நடிகர்கள். கீதா குமாரசிங்க, அனோஜா வீரசிங்க இவர்கள் சிங்கள நடிகைகள். இவர்களுடன் மேலும் சில இலங்கைத் தமிழ் நடிகர்களை ஒன்றுசேர்த்து உருவாக்கிய படம் இது. பிரமாண்டமான தயாரிப்பு. ஏ.சி. திருலோகசந்தரின் கதைக்கு ஆரூர்தாஸ் வசனம் எழுதினார். கீதா குமாரசிங்க கவர்ச்சியை வெகுதாராளமாகக் காட்டி நடித்தார். ஆரம்பவிழா கொழும்பில் நடைபெற்றபோது சிவாஜி கணேசன் குத்து விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தார். மூன்று மாதத்துக்குள் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. படம் 1980ஆம் ஆண்டு திரைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 நாட்கள் ஓடியது. 1981ஆம் ஆண்டு இந்தியாவிலும் திரையிடப்பட்டது. அங்கு அதிக நாட்கள் ஓடவில்லை. இத்திரைப்படத்தை "யுத்தியட்ட சண்டியா" என்ற பெயரில் மைக்கல் விக்டோரியா சிங்களப் படமாக டப் செய்தார்.

## எழுத்தாளர் தயாரித்த படம்

பிரபல நாடக எழுத்தாளர் மாத்தளை கார்த்திகேசு கதை வசனம் எழுதித் தயாரித்த படம். **"அவள் ஒரு ஜீவநதி"**. ஜே.பி. றொபேட் படத்தை இயக்கினார்.

டீன்குமார், விஜயராஜா, பரினாலை, அனுஷா, திருச்செந்தூரன், கார்த்திகேசு, பாலச்சந்திரன், சிதம்பரம், ஏகாம்பரம், கந்தையா, மோகன்குமார், சந்திரகலா ஆகியோர் படத்தில் நடித்தனர்.

பேராசிரியர் மௌனகுரு, மாத்தளை கார்த்திகேசு ஆகியோர் இயற்றிய பாடல்களுக்கு எம்.எஸ். செல்வராஜா இசையமைத்தார்.

பலவித கஷ்டங்களின் பின் திரைப்படம் 17-10-1980இல் திரையிப்பட்டது. மாத்தளை கார்த்திகேசுவுக்கு நாடகமூலம் கிடைத்த நல்ல பெயர் இப்படத்தின் மூலமும் கிடைத்தது. ஆனாலும் சினிமா பற்றிய படிப்பினைமிக்க அனுபவங்களும் அவருக்கு கிடைத்தன.

## இலங்கை இந்திய கலைஞர்கள் பங்கு பற்றிய திரைப்படம்

பிறேம் நவாஸ், சுமதி, மாயா ஆகியோர் இந்தியக் கலைஞர்கள். ஸ்ரீஸ்கந்தராஜா, இரா பத்மநாதன், நடராஜசிவம், சாந்தி ரசிகா, லீனா, ஜோர்ஜ் சந்திரசேகரன், ராஜாகணேசன் ஆகியோர் இலங்கை நடிகர்கள். இவர்களைக் கொண்டு தெய்வேந்திரா இயக்க ஸ்ரீஸ்கந்த ராஜா தயாரித்த படமே **பாதை மாறிய பருவங்கள்**. ஒரு கதாநாயகன், மூன்று கதாநாயகிகள் கொழும்பிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பிலும் படப்பிடிப்புகள் நடைபெற்றன. ஸ்ரீ கருமாரியம்மன் சிறியேஷன் "பாதை மாறிய பருவங்கள்" 1982ஆம் ஆண்டு திரைக்கு வந்தது. கதை நாயகன் அந்தக் காலத்து "திரும்பிப் பார்" சிவாஜியை நினைவுபடுத்துகிறார். கதாநாயகன் இரண்டு பெண்களை ஏமாற்றிவிட்டு மூன்றாவது பெண் மூலம் திருந்துவதே கதை. இப்படம் 1982இல் திரையிடப்பட்டது. படம் சுமாராக ஓடியது.

1983ஆம் ஆண்டு பிறந்தது. பல தமிழ்த் திரைப்படங்கள் தயாரிப்பிலிருந்தன. ஜூலைக் கலவரம் வந்தது. ஹெந்தள விஜயா ஸ்டூடியோ தீ வைக்கப்பட்டது. அரைகுறையாக வளர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் படங்கள் சிலவும் எரிந்தன. இலங்கையின் தமிழ்ச் சினிமாவின் வரலாற்றிலும் கருமேகங்கள் சூழத் தொடங்கின. இலங்கை தமிழ்ச் சினிமா முன்னோடிகள் சிலர் புலம் பெயர்ந்தனர். பலர் மௌனமானார்கள்.

## 10 வருடங்களின் பின்வந்த படம்

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் பின் எவரும் தமிழ்ப்படம் தயாரிக்கவில்லை. ஆனால் 1993ஆம் ஆண்டு ஏ.ஏ. ஜுனைதீன் **"ஷர்மிளாவின் இதயராகம்"** என்ற படத்தை தயாரித்தார். ஜெரியா ஜுனைதீன் எழுதிய கதைக்கு ஜுனைதீன் வசனம் எழுதினார். சிறி சோம பீரிஸ் படத்தை இயக்கினார். சசி வீஜேந்திரா வீணா ஜெயக்கொடி ஆகியோரே கதாநாயகர்கள். மோகன்குமாரும் நிலானியும் இரண்டாவது கதாநாயகர்கள். எஸ். ராம்தாஸ், கே.எஸ். பாலச்சந்திரன், கே.ஏ. ஜவாஹர், லதீப், ஜோபு நஸிர், எஸ். விஸ்வநாதராஜா, கலைச்செல்வன், உதயகுமார், கமலஸ்ரீ, என். ராஜம், ரஞ்சன் ஆகியோர் நடித்தனர். பல்வேறு பிரச்சினைகளின் பின் "ஷர்மிளாவின் இதயராகம்" 1993ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. இப்படத்துக்கு தேசியப் பத்திரிகைகள் பெரும் வரவேற்புக் கொடுத்தன. இத்திரைப்படத்தை தயாரித்ததன்மூலம் ஜுனைதீன் பொருளாதாரக் கஷ்டம் அடைந்தாலும் அவர் இப்பொழுது சிங்களத் திரையுலகில் படுபிசியான இயக்குனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் தேவதாசன் "சலனசித்திரம்" என்ற நிறுவனத்தை நிறுவி திரைப்படங்கள் தயாரிக்க முனைந்தார். சிலகாலம் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளராக இருந்ததால் திரைத்தூது என்ற சஞ்சிகையையும் வெளியிட்டார். துரதிஷ்ட வசமாக அவரது முயற்சிகள் எல்லாம் வீணாகின.

**மண்**

இலண்டனில் வாழும் இலங்கைத் தமிழர்களான ராஜ் கஜேந்திராவும் புதியவனும் சேர்ந்து உருவாக்கிய படம்தான் **'மண்'**. அது புலம்பெயர் கலைஞர்கள், சிங்களத் தொழில்நுட்பவியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியிலேயே உருவாகியது.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மலையக இளம் பெண் லட்சுமி வன்னிக்கு வருகிறாள். அங்கு லக்சுமிக்கும் உயர் சாதியைச் சேர்ந்த பொன்ராசு என்ற இளைஞனுக்கும் காதல் அரும்புகிறது. லக்சுமியை திருமணம் செய்வதாக ஏமாற்றி அவளைத் தாயாக்கிவிட்டு பொன்ராசு லண்டனுக்கு போய்விடுகிறான். பல வருடங்களின்பின் வன்னிக்கு வந்த பொன்ராசுவை லட்சுமியின் மகன் கொல்கிறான். இதுதான் 'மண்' திரைப்படத்தின் கதைச் சுருக்கம்.

விஜித் கதாநாயகனாகவும், ஷனா கதாநாயகியாகவும் நடிக்கின்றனர். செல்வசேகரன், தர்சன் தர்மராஜ், மோகன்குமார், ஆதவன், ரத்னஜோதி, மகேஸ்வரி போன்றோருடன் இந்திய நடிகர்களான வாகை சந்திரசேகர், சுகுமார் ஆகியோரும் நடித்தனர். ராஜ்குமார் ஒளிப்பதிவு செய்தார். ஜேர்மன் விஜய் இசையமைத்தார். கே. மோகன்குமார் ஒருங்கிணைப்புச் செய்தார். ஆர். புதியவன் வசனம் எழுதியிருக்கிறார். ராஜ் கஜேந்திரா திரைக்கதை எழுதித் தயாரித்தார். இத்திரைப்படம் புலம்பெயர் நாடுகளிலும் இந்தியாவிலும் இலங்கையிலும் திரையிடப்பட்டது. அதிக விமர்சனங்களுக்கு ஆட்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளில்

பிரமாண்டமான முறையில் தயாரான **'ஒரே நாளில்'** என்ற திரைப்படம் 03-10-2011இல் திரைக்கு வந்தது. ஏ.ஆர்.எம். றஸீம் கதை வசனம் எழுதி இயக்கிய இத்திரைப்படத்தில் கஜன், சத்யா, வசந், சரிதா, பிரதீபன், ரம்யா ஆகியோர் நடித்தனர். எம்.ஏ.கபூர் (இலங்கை), பாலா (இந்தியா) ஆகியோர் சேர்ந்து ஒளிப்பதிவு செய்தனர். றஸீம், சிவகாந்தன், உதயகுமார் ஆகியோர் இயற்றிய பாடல்களுக்கு சி. சுதர்சன் இசையமைத்தார். ஒலிப்பதிவு செந்தூரன்.

அண்ணன் தம்பி பாசத்தை அடிப்படையாக வைத்து கதை அமைக்கப்பட்டுள்ளது. தன் மனைவியின் இறப்புக்கு அண்ணனே காரணம் என்று தம்பி சந்தேகிக்கிறான். இறுதியில் அண்ணன் தூய்மையானவன் என்று தெரியவருகிறது. குடிபோதை எத்தனை கொடுமையானது என்பதை படம் எடுத்துக் காட்டுகிறது.

03-10-2011இல் திரைக்கு வந்தது. சினிசிட்டி (மருதானை), ராஜா (யாழ்ப்பாணம்), சாந்தி (மட்டக்களப்பு) ஆகிய தியேட்டர்களில் திரையிடப்பட்டது. 07-10-2011 முதல் கிங்ஸ்லி (கொழும்பு), வெலிங்டன் (அக்கரைப்பற்று) ஆகிய தியேட்டர் களில் திரையிடப்பட்டது. படம் சுமார் ஒரு வாரம் ஓடியது.

## இனி அவன்

சிங்கள இயக்குனரான அசோக ஹந்தகம இயக்கிய தமிழ்ப் படம்தான் **'இனி அவன்'**. இலங்கையில் 30 வருடங்களாக தொடர்ந்த யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களுக்குள் நடைபெறும் நிகழ்வுகள்தான் 'இனி அவன்' கதையின் கரு.

முன்னாள் போராளி ஒருவன் சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப முயலும் பொழுது பொது மக்களால் அவனுக்கு ஏற்படும் பிரச்சினைகள்தான் கதை. கதாநாயகனாக தர்சன் தர்மராஜுவும் கதாநாயகிகளாக நிரஞ்சனி சண்முகராஜாவும், சுபாஷினியும் நடித்தனர். இவர்களுடன் ராஜா கணேசன் மகேஸ்வரி ரட்ணம் ஆகியோரும் நடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நடைபெற்ற தெரண ரீ.வி. திரைப்பட விழாவில் 15 சிங்களத் திரைப்படங்களுடன் போட்டி போட்டு இத்திரைப்படமே சிறந்த திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டது. சிறந்த திரைப்படம் என்ற விருதுமட்டுமன்றி இப்படத்தில் இயக்குனர் அசோக ஹந்தகம சிறந்த இயக்குனராகவும் கதாநாயகன் தர்சன் சிறந்த நடிகராகவும் கதாநாயகி நிரஞ்சனி சிறந்த நடிகையாகவும் வில்லனாக நடித்த ராஜா கணேசன் சிறந்த துணை நடிகராகவும் தெரிவு செய்யப்பட்டனர். படம் இலங்கைக்கே உரித்தான கதையைக் கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

## மனசுக்குள் ஒரு மழைச்சாரல்

ராஜ் மூவிசின் சார்பில் கே. உதயரூபன் யாழ்ப்பாணத்தில் தயாரித்த படமே **'மனசுக்குள் ஒரு மழைச்சாரல்'** திரைப்படமாகும். வினோதன் இயக்கிய இப்படத்தை ராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். சுதர்சன் இசையமைத்துள்ளார். ஜேரால்ட்டும் மிதுனாவும் கதாநாயகர்களாக நடித்தனர். 2017இல் வெளிநாடுகளில் திரையிடப்பட்ட இத்திரைப்படம் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆரம்பத்தில் திரையிடப்பட்டது. 2017இல் நோர்வேயில் நடைபெற்ற 8வது சர்வதேச திரைப்பட விழாவில் இப்படத்திற்கு மூன்று விருதுகள் கிடைத்தன. சிறந்த திரைப்படமாக தெரிவு செய்யப்பட்ட இப்பத்தில் நடித்த ஜேரால்ட் சிறந்த நடிகராகவும் மிதுனா சிறந்த நடிகையாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இத்திரைப்படம் முற்று முழுதாக யாழ்ப்பாணத்திற்குள் உருவான திரைப்படமாகும்.

## கீறல்கள்

ஏ.ஆர்.எம். றஸீம் இரண்டாவதாக தயாரித்து இயக்கிய படம் 'கீறல்கள்' ஆகும். கதாநாயகனாக ரி. லுஜனும் கதாநாயகியாக மிதுனாவும் நடித்தனர். இவர்களுடன் அன்பழகன், மகேஸ்வரி, கஜூறியா, செல்வக்குமார், பசுபதி, விஜயகுமார், சுஜீவன், ஏ. சோமசேகரன் ஆகியோரும் நடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். பாலாவும், ஏ.ஆர்.எம். றஸீனும் ஒளிப்பதிவு செய்தனர். வி. செந்தூரன் இசையமைத்த பாடல்களை பொறக்ஷன் மதுபாலா ஆகியோர் பின்னணி பாடினர். டி. நாகராஜ் படத் தொகுப்பை செய்தார். எஸ். தனேந்திரன் கலை இயக்குனராக கடமையாற்றினார். 28-11-2015 இல் இலங்கையில் 18 தியேட்டர்களில் திரையிடப்பட்டது. படம் ஒரு வாரம் தொடர்ந்து ஓடியது.

## கோமாளிகள் கிங்ஸ்

பிக்சர் திஸ் நிறுவனத்தின் தயாரிப்பான **'கோமாளிகள் கிங்ஸ்'** திரைப்படத்தை கிங்ஸ் ரட்ணம் இயக்கியிருக்கிறார். நகைச்சுவை, காதல், திகில் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பிரபல ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீட்டின் வழிகாட்டலில் கிங்கஸ் ரத்தினத்துடன் சத்தியப் பிரியா, ராஜா கணேசன், தர்சன் தர்மராஜா, நிரஞ்சனி சண்முகராஜா ஆகியோர் நடித்துள்ளனர். மஹிந்த அபேசிங்க ஒளிப்பதிவு செய்த இப்படத்தை ஹர்ஷா திசாநாயக்க படத்தொகுப்பு செய்துள்ளார். 2015இல் படம் தயாரித்து முடிக்கப்பட்டது. 23-02-2018இல் திரைக்கு வந்தது. 50 திரை அரங்குகளில் காட்டப்பட்டது.

## திரைக்கு வராத திரைப்படங்கள்

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் சில தமிழ்ப் படங்கள் அழிந்து போயின. லெனின் மொறாயஸ் இயக்கிய 'நெஞ்சுக்கு தெரியும்' என்ற படமும் கணேசானந்தன் தயாரித்த எங்களில் ஒருவன் என்ற படமும் அவ்வாறு தீயில் அழிந்தன.

டென்மார்க் சண் தயாரித்த 'இளைய நிலா' என்ற படம் அழியவில்லை. ஆனால் திரைக்கு வரவில்லை. தில்லை வண்ணன் தயாரித்த 'காதல் கடிதம்' பத்திரிகை யாளர்களுக்கு போட்டுக் காண்பிக்கப்பட்டது. அதுவும் திரைக்கு வரவில்லை.

டொக்டர் நிரஞ்சன் சிங்களத்திலும் தமிழிலும் 'சூர்யா' என்ற படத்தை தயாரித்தார். சிங்களப்படத்தை பத்திரிகை யாளர்களுக்குப் போட்டுக் காண்பித்தார். ஆனால் அவரது மரணத்தின்பின் அவை திரைக்கு வராமலே போய்விட்டன.

இலங்கையில் இன்னும் சில தமிழ்த் திரைப்படங்கள் தயாரிப்பில் உள்ளன. ஏ. ஆர். எம். ரஸின் இப்பொழுது 'கண்மணி வித்தியா' என்ற படத்தை ஆரம்பித்திருக்கிறார். அவையும் வெளிவந்தால் இலங்கை தமிழ்த் திரைப்பட வரலாறு மேலும் சிறக்குமென நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JRL

## ஆசிரியரின் பிற நூல்கள்




125968
264487
பொது சன நூலகம்
06 OCT 2018
மாநகரசபை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி....



இந்நூலாசிரியர் திரு, தம்பிஜயா தேவதாஸ், யாழ்ப்பாணம் - புங்குடுதீவு தம்பிஜயா ஐஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வர். இவர் புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'B.A' பட்டமும் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் 'B.Ed' பட்டமும் பெற்றவர். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் 'Dip IN Journalism' பட்டமும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 'M.A. Journalism and Mass Communication' பட்டமும் பெற்றவர்.

ஓய்வுநிலை ஆசிரியரான இவர், இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும், ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையில் பேட்டி காண்பவராகவும், கொழும்பு பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத்துறைப் பகுதியில் வருகைதரு விரிவுரை யாளராகவும் கடமையாற்றுகிறார்.

இவர் 'புங்குடுதீவு - வாழ்வும் வளமும்', 'சிங்களப் பழமொழிகள்', 'இலங்கை தமிழ் சினிமாவின் கதை', 'பொன்விழா கண்ட சிங்கள சினிமா', 'இலங்கைத் திரையுலக முன்னோடிகள்', 'இலங்கைத் திரையுலக சாதனையாளர்கள்', 'இலங்கைத் திரை இசையின் கதை', 'இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள்' ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் பிரபலமான மூன்று சிங்கள நாவல்களை மொழி பெயர்த்துள்ளார். **இலங்கையில் ஊடகவியல்** என்னும் இந்நூல் தம்பிஜயா தேவதாஸ் எழுதிய ஊடகவியல் பற்றிய இரண்டாவது நூலாகும்.

ISBN 978-955-7252-01-8

Vidyatheepam Publication
90/9, New Chetty Street, Colombo-13.
Tel: 071-8366086

Rs. 400/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org